விலை: 60.00
பக்கங்கள் - 24
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
சங்குநாதம்

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 290 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 19 ஞாயிற்றுக்கிழமை (05.10.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

உள்நாடு, வெளிநாடுகளுக்கான
தபால்கள், பொதிகள் சேவை
16 kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு
UK - 1250/= Australia - 2050/=
France - 1930/= Canada - 2470/=
Germany - 1930/= தீபாவளியை முன்னிட்டு விசேட சலுகைகள்
திருமுருகன் கொம் நெற்
321, K.K.S Road, Jaffna. 0777 554 528
கிளைகள் : கொழும்பு, வவுனியா, மன்னார்,முல்லைத்தீவு, மல்லாவி
(5592)

## யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வீட்டுத் திட்டங்கள்

### கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர்



(யாழ்ப்பாணம்)

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் விரைவில் பல வீடமைப்புத் திட்டங்களை எமது அரசாங்கம் வழங்கும் என கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

உலக குடியிருப்புத் தினத்தினை முன்னிட்டு நேற்று முன் 23ஆம் பக்கம் பார்க்க

## அநுர அரசாங்கத்தின் காலத்திலேயே வடக்கை அபிவிருத்தி செய்ய முடியும்

### குறிகாட்டுவான் புனரமைப்பு நிகழ்வில் ஆளுநர் நா.வேதநாயகன்



(யாழ்ப்பாணம்)

தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது சொல்லில் அல்ல செயலில் நிரூபித்துக் கொண்டிருக்கின்றது. இந்த அரசாங்கத்தின் காலத்திலேயே வடக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்ய முடியும் என்று நம்புகின்றேன் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் 23ஆம் பக்கம் பார்க்க

மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட

# ராஜபக்ஷக்கள் தப்ப முடியாது

# தண்டனை கிடைத்தே தீரும்

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ



(கொழும்பு)

மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட ராஜபக்ஷக்கள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பிக்க முடியாது. அவர்களுக்குத் தண்டனை கிடைத்தே தீரும் என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## மழை காரணமாக யாழில் 14 பேர் பாதிப்பு



23ஆம் பக்கம் பார்க்க

## அஸ்வெசும திட்டம் இரத்துச் செய்யப்படலாம்!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(அநுராதபுரம்)

அஸ்வெசும நலன்புரித்திட்டத்தை விரைவில் இரத்துச் செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று 23ஆம் பக்கம் பார்க்க

## வல்லிபுர ஆழ்வாருக்கு

### இன்று இரதோற்சவம்



(கரணவாய்)

வடமராட்சி துன்னாலை 23ஆம் பக்கம் பார்க்க

## நெடுந்தீவில் எரிபொருள் நிரப்பு நிலையம்

### ஒப்பந்தம் கைச்சாத்து

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் முதல் தடவையாக எரிபொருள் நிரப்பு நிலையம் அமைப்பதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று 23ஆம் பக்கம் பார்க்க



## குறிகாட்டுவான் இறங்குதுறை அபிவிருத்திப் பணி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

குறிகாட்டுவான் இறங்குதுறைக்கான மறுசீரமைப்பு வீதிக் கட்டுமானத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று போக்குவரத்துத் துறை அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் தலைமையில் அமைச்சர் சந்திரசேகர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகளின் பங்கேற்புடன் இடம்பெற்றது.

20ஆம் பக்கம் பார்க்க






நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Happy Supermarket - உரும்பிராய்

| | |
|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 205/= Max 3Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 163/= |
| 5Kg பிறிமா கோதுமை மா | - 925/= |
| 1Kg சிவப்பு பருப்பு | - 235/= |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 290/= |
| 1Kg ஈக்குத் தீட்டல் | - 188/= |
| 1Kg அவல் | - 299/= |
| 1Kg கடலை | - 375/= |
| 1Kg சர்க்கரை | - 248/= |
| 1Kg கடலைப்பருப்பு | - 320/= |
| 100g கற்கண்டு | - 35/= |
| 100g கச்சான் முத்து | - 110/= |
| 1Kg உளுத்தம்பருப்பு | - 1099/= |
| 1Kg பயறு | - 790/= |
| 1Kg தீட்டல்ப்பச்சை | - 239/= |

MAX 03
~~1200~~
1135




~~320~~
280

தரமான பொருட்களை சிறந்த விலையில்
கொள்வனவு செய்திடுங்கள்.
மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு
Facebook:-
happy basket.lk இனை நாடவும்.
(1623)

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. 0777 8080 30

## தென்னங்காணி விற்பனைக்கு

கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் 19 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்.
விலை பேசி தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு : 077 327 6500
(1622)

## கணித/ நுண்ணறிவு வகுப்புக்கள்

- தரம் 3,4,5 மாணவர்களுக்கான நுண்ணறிவு வகுப்புக்கள் (Part I)
- தரம் 6 - 10 வரையான மாணவர்களுக்கான கணித வகுப்புக்கள் (ஆங்கில மொழி மற்றும் தமிழ்மொழி மூலமான)


MR.S.Tharshan
077 454 0529
இடம் : புகையிரத வீதி, இணுவில் கிழக்கு, சுன்னாகம்.

(தனிப்பட்ட மற்றும் குழு வகுப்புக்களுக்கு தொடர்புகொள்ள முடியும்)

- தரம் 3 - 8 வரையான சிதம்பரா/ ஒலிம்பியாட் தயார் படுத்தல் வகுப்புக்கள்

(5591)

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 18.07.1945 மறைவு 04.10.2025

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின்
ஆசிரியர் திரு. த.ரூபசீலன்
அவர்களின் அன்புத்தந்தை

**முத்தையா தங்கவேலாயுதம்**

அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும்
அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!

ஆசிரியர் கழகம்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.
(C-4032)

## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)
வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)
சம்பளம் 30,000/- இலிருந்து 50,000/-

எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 1410725 076 8226236
v2vacancies@gmail.com
(C-4030)

## ஆண் வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள செல்லப்பிராணிகள் விற்பனை செய்யும் கடை ஒன்றிற்கு வியாபாரம் செய்யும் அனுபவம் உள்ள 18 – 30 வயதுடைய ஆண் வேலையாள் தேவை.

- தங்குமிட வசதி செய்து தரப்படும்.
- மாதம் 50,000 - 60,000 அடிப்படை சம்பளம் வழங்கப்படும்.
- நிரந்தர வேலை வழங்கப்படும்.
- வியாபாரம் தெரிந்தவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

077 937 0000, 075 988 1000
(5584)

## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ். நகரில் 5 பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.

- சம்பளம் 60,000/-
- உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.
- வயதெல்லை 33 - 55

தொடர்புகளுக்கு :
075 498 5400, 077 937 0000
021 221 7600
(5584)

## 7ம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 22 . 05 . 1945
மறைவு 23 . 09 . 2018

அமரர் **சின்னையா நடராஜலிங்கம்**
(ஓய்வுபெற்ற மாவட்ட முகாமையாளர் – இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண்விட்டு நீங்கள் மறைந்து
ஆண்டுகள் ஏழு ஆனாலும்
உங்கள் நினைவுகளுடன் நாள்தோறும்
நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்,
(C-4031)

குரும்பசிட்டி,
புலோலி வடமேற்கு.

நீங்காத்துயருடன்
குடும்பத்தினர்

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழி அமரா வீதியில் 18 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்குண்டு.

- இருவழிப் பாதையுடன்
- A9 வீதியிலிருந்து 150m தூரம்
- அமரா வீதி முகப்புடன்
- ஒரு பரப்பின் விலை 10 இலட்சம்
- 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- நாவற்குழிச் சந்தி - 400m தூரம்
- நாவற்குழி சிவன்கோவில் - 300m தூரம்
- நன்னீர் ஊற்று, நல்ல சூழல்

(5593)

தொடர்புகளுக்கு :
076 860 2770, 076 987 8617

## காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டைச் சந்தியில் இருந்து
காரைநகர் பிரதான வீதியில்
1 Km தூரத்தில் 50 பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு.
தரகர்கள் தேவையில்லை.

தொடர்புகளுக்கு :
077 066 7419
(5595)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விலைமனுக் கேள்விக்கான அழைப்பு IX
## மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்

**குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் யாழ் பிராந்திய அலுவலகத்தின் பாவனைக்கான வீட்டினை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல்**

1. யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் சார்பாக மாவட்டச் செயலகத்தின் திணைக்களப் பெறுகைக்குழுவின் தலைவர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட குடிவரவு குடியகல்வு திணைக் களத்தின் யாழ் பிராந்திய அலுவலகத்தின் பாவனைக்கான வீட்டினை வாடகைக்குப் பெற்றுக் கொள்வதற்கு தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக் கேள்வியாளர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட மூடிய விலைக்கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. இது தேசிய போட்டி விலைக்கேள்வி முறையாக இருந்தாலும் யாழ் மாவட்ட செயலகத்திலிருந்து 03KM வரையான எல்லைக்குள் வீட்டின் உரிமையைக் கொண்டிருக்கும் கேள்விதாரர்களுக்கு மட்டுப்படுத்தப் பட்டுள்ளது.
3. ஆர்வமுள்ள கேள்வியாளர்கள் யாழ் மாவட்ட செயலக பெறுகை அலகில் கேள்விப்பத்திரங்களை இலவசமாகப் பார்வையிடுவதோடு மேலதிக விபரங்களையும் பெற்றுக் கொள்ள முடியும். மேலும் ஒரு கேள்விதாரருக்கு கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகள் மட்டுமே விநியோகிக்கப்படும்.
   தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள் :
   021 221 4633, 021 222 2233, 2234 (Ext. - 140)
   Facsimile - 021 222 3674
   www.jaffna.dist.gov.lk
4. அக்கறையுள்ள கேள்வியாளர்கள் எழுத்து மூலமான விண்ணப்பத் துடன் மீளளிக்கப்படாத கட்டணமாகிய (Non refundable fee) அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணத்தில் உள்ள பெறுகை அலகு அலு வலகத்தின் மூலம் செலுத்தி பற்றுச்சீட்டை சமர்ப்பிக்குமிடத்து 07.10.2025 தொடக்கம் 21.10.2025 வரை மு.ப 9.00 மணியி லிருந்து பி.ப 02.00 மணிவரை அலுவலக நேரங்களில் கேள்விப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.
5. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்வித்தொகைகளுக்கான கேள்வி ஆவணங்கள் **தலைவர், திணைக்களப் பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு 21.10.2025 பி.ப 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைக்கப்படல் வேண்டும். மேலும் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் கேள்வி இலக்கத் தினையும் (Bid ID), கேள்வி விபரத்தினையும் (Description) குறிப்பிடல் வேண்டும். கேள்விகள் சமூகமளிக்கும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமாக கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
6. விலைக்கேள்வி செல்லுபடிக்காலம் (Bid Validity) கேள்வி இறுதித் திகதியிலியிருந்து அல்லது நீடிக்கப்படும் திகதியிலிருந்து 49 நாட்கள் ஆகும்.
7. பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதி முடிவாக அமையும்.
8. அட்டவணை கீழ்வருமாறு:

| கேள்வி இல | விபரம் | ஒப்பந்த காலம் | மீளளிக்கப்படாத தொகை (ரூபாவில்.) |
|---|---|---|---|
| JDS/PROC/HOUSE RENT/11/15/2025 | 02 அல்லது 03 அறைகள், இரண்டு குளியலறை மற்றும் வாகன தரிப்பிடத்துடன் கூடிய வீடு வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் | 1வருடம் | 500.00 |

9. வாடகைக்குப் பெறப்படும் 02 அல்லது 03 அறைகள், இரண்டு குளிய லறை மற்றும் வாகன தரிப்பிடத்துடன் கூடிய வீடானது குடிவரவு குடிய கல்வு திணைக்களத்தின் யாழ் பிராந்திய அலுவலகத்திலிருந்து 03 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்திருத்தல் வேண்டும் என்பதுடன் குறித்த வீடானது உரிய தகுதி விதிகளைப் பூர்த்தி செய்துள்ளதா என்பது மாவட்ட செயலாளரினால் நியமிக்கப்படும் குழுவின் நேரடி பரிசோதனை மூலம் மதிப்பீடு செய்யப்படும்.
10. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒருபகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு திணைக்கள பெறுகைகள் குழுவிற்கு அதிகாரமுள்ளது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

(C-4029)

## வேலையாள் தேவை

திருமுறிகண்டியில் இயங்கும்
சைவ உணவகத்திற்கு தங்கி
நின்று வேலைசெய்ய
(சமையல்,றொட்டி)
வேலையாட்கள் தேவை.


தொடர்புகளுக்கு :
**077 993 0280**

(1624)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## மரண அறிவித்தல்

### பரமநாதர் ஜெயலக்சுமி
### (நொச்சியாகமம் பொன்னுத்துரையின் மகள்)



காரைநகர் ஆலடியைப் பிறப்பிடமாகவும் நொச்சியாகமம் புளியங்குளம் (சரஸ்வதி அரிசி ஆலை) வசிப்பிடமாகவும் கொண்ட பரமநாதர் ஜெயலக்சுமி 29.09.2025 அன்று அன்னாரது இல்லத்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் நொச்சியாகமம் பொன்னுத்துரை சரஸ்வதி தம்பதிகளின் அன்புப் புதல்வியும், கந்தையா பரமாநாதர் (அம்பாள் ஸ்ரோர் நொச்சியாகமம்) அன்புக் கணவரும், பொன்மலர், ரவீந்திரன், காலஞ் சென்றவர்களான சுந்தரேஸ்வரன், கமலாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், விஜிதாவின் அன்பு மாமியாரும் கஜானனின் அன்புப் பேர்த்தியும் ஆவார். நொச்சியாகமம் சிதம்பரப்பிள்ளை கந்தையா ஆகியோரின் அன்புப் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.09.2025 அன்று 22, பாரதிகோட்டம், சரஸ்வதி அரிசி ஆலை, புளியங்குளம் எனும் முகவரியில் உள்ள அன்னாரின் இல்லத்திலும் தகனக்கிரியைகள் புளியங்குளம் இந்து மயானத்திலும் நடைபெற்றது என்பதனை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.


22, பாரதிகோட்டம்,
சரஸ்வதி அரிசி ஆலை,
புளியங்குளம்

தகவல்: குடும்பத்தினர்
பரமநாதர் (கணவர்) 076 867 7813
ரவீந்திரன் (மகன்) 077 129 8107

(5586)

## திருவிண்ணகர பிரவேச பத்திரிகை

### ஸ்ரீமான்.சி.கா.கு.தவராஜதேவா செட்டியார்



காரைக்குடி நாட்டுக்கோட்டை மரபுதித்த செம்மல் ஸ்ரீமான் சேனை முகாந்தரம் தில்லையம்பலம் முத்துக்குமாருச் செட்டியார் (நல்லூர்), அன்னபூரணம் (புலோலி, பருத்தித் துறை) அவர்களின் பேரரும் சி.கா.குமாரசுவாமி (மீசாலை கரும்பிமாவடி கந்தசுவாமி கோயில்), அமிர்தவல்லி (புலோலி பசுபதீஸ்வரர் கோயில்) அவர்களின் சிரேஷ்ட புத்திரரும் ஆன ஸ்ரீமான்.சி.கா.கு. தவராஜதேவா செட்டியார் (ஓய்வுநிலை தலைமை பொறியிய லாளர், இலங்கை மின்சாரசபை, சுன்னாகம், லக்ஸபானா) அவர்கள் 29.09.2025; சாரதீய நவராத்திரி மஹாசப்தமி நன்னாளில் திருவிண்ணகரமேகினார்.

அன்னார் திருவிண்ணகரேகியவர்களான சபாரத்தினம் மகேஸ்வரி தம்பதிகளின் திருக்குமாரத்தி மனோன்மணி தேவியைக் கரம்பிடித்தவரும், நீதிபதி சி.கா.கு.ஜெயராஜதேவா, சி.கா.கு.குலராஜதேவா (மதிப்பீட்டு பரிசோதகர்), சி.கா.கு.சிவராஜதேவா (தடகள வீரர்) மற்றும் உமாகுமாரி நடராஜா(பேராசிரியர்- அவுஸ்திரேலியா), சி.கா.கு.சிவகுமாரன் (ஓய்வுநிலை பிரதி அதிபர், யாழ்.மத்திய கல்லூரி), சி.கா.கு. ஜனார்த்தனன் (பொறியியலாளர்) ஆகியோரின் பாசம் பகிர் சகோதரரும், சி.கா.கு.த. பிரஷீபாவின் தந்தையும் பி.ஷீனிதா (வைத்திய கலாநிதி), ந.நாடியா (நடிகை, தொலைக்காட்சி அளிக்கையாளர் B.B.C ), ந.நரேன் (விளையாட்டு வீரர்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னார் திருவிண்ணகர பிரவேச கருமங்கள் நகரத்தார் மரபின்வழி வழுவாது அவுஸ்திரேலியாவில் 02.10.2025 விஜயதசமி நன்னாளில் இடம்பெற்றது எனும் தகவலை இலங்கை வாழ் அவர் தம் உறவுகள், நண்பர்கள் மற்றும் அவர் கீழ் பணியாற்றிய அன்பு உள்ளங்களுக்கு அறியத்தருகின்றோம். அன்னாரின் தூய ஆத்மா, கரூர் கல்யாண பசுபதீஸ்வரர் மற்றும் பிள்ளையார்பட்டி கற்பக நாதரின் திருவடிநிழலில் நித்தியப்பேறினை எய்த வேண்டி பிரார்த்திக்கிறோம்.

இதற்கு முன்னதாக மரபு அறியாது எமது அனுமதியின்றி பகிரப்பட்ட முறையற்ற அறிவித்தலிற்கு நாட்டுக்கோட்டை நகரத்தார் சார்பில் எமது வருத்தத்தையும் பதிவிடுகிறோம்.

நல்லூர்
009 421 222 8212

(5581)

தகவல்: சி.கா.கு.சிவகுமாரன் செட்டியார்
சகோதரர் மற்றும் பட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா





யாழ்ப்பாண மாவட்ட பண்பாட்டுப்பேரவையும் மாவட்ட செயலகமும் இணைந்து வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் 2025 ஆம் ஆண்டிற்கான யாழ்ப்பாண மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

யாழ் புனித யுவானியர் தேவாலய முற்றலில் இருந்து கலாசார ஊர்வலம் ஆரம்பமாகி மாவட்டச் செயலகத்தை வந்தடைந்தது.

தொடர்ந்து மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் பண்பாட்டுப் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது.

யாழ்.மாவட்ட பண்பாட்டுப் பேரவைத் தலைவரும் அரசாங்க அதிபருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட ஓய்வு நிலை அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் ரகுராம், வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் உதவி பணிப்பாளர் திருமதி தர்சினி நிதர்சன், கௌரவ விருந்தினராக அளவெட்டி நாதஸ்வர கலாநிதி இரத்தினவேல் கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தார்கள். (8-104-33)

# பரத நிருத்திய அரங்கப் பிரவேசம்



(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கலாபவனம் கலாகீர்த்தி ஸ்ரீமதி சாந்தினி சிவனேசன் அவர்களின் மாணவியும் பேராசிரியர் என். சண்முகலிங்கன் கௌரி தம்பதிகளின் புதல்வியுமான செல்வி அம்பிகை சண்முகலிங்கனின் பரத நிருத்திய அரங்கப் பிரவேசம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் இடம்பெறும். (3)



தேசிய வாசிப்பு மாதச் செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக சாவகச்சேரி நகரசபையின் மீசாலைப் பொது நூலகத்தினரால் "மறுமலர்ச்சிக்காக வாசிப்போம்" எனும் தொனிப்பொருளில் சுடர்ஒளி முன்பள்ளியில் வர்ணம் தீட்டல் போட்டி அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. (படம்:-சுபேசன்)



ஊரெழு கணேச வித்தியாசாலையின் "வாணி விழாவும் சிறுவர் தின விழாவும்" கடந்த 1 ஆம் திகதி அதிபர் இரா.ஜெயக்குமார் தலைமையில் இடம்பெற்றது. இவ் விழாவில் பிரதம விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவனான தி.உதயசூரியன் அவர்களும், சிறப்பு விருந்தினராக ஓய்வு நிலை அதிபர் சைவப்புலவர் செ. பரமேஸ்வரன் அவர்களும் கலந்து கொண்டனர்.


# சங்கடஹர சதுர்த்தி



(யாழ்ப்பாணம்)

யாழ் வண். வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் சங்கடஹர சதுர்த்தி உற்சவம் எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு மூலமூர்த்தி பூஜை, வசந்தமண்டப பூஜை நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதி வலம் வருவார் என்பதனை ஆதீனகர்த்தாவும், பிரதம குருவுமாகிய சிவஸ்ரீ து. விவேகானந்தக்குருக்கள் அறியத்தருகிறார். (8)

# வல்லிபுர ஆழ்வாருக்கு இன்று தேர்த்திருவிழா



## தேரமரும் ஆழ்வாரை பாருங்கள்

களைபொதிந்த தேரமர்ந்து உலாவரும்
கொலுவோடு அமர்ந்தருளும் காட்சிதனை
உலையிட்ட பொன்போல மின்னுகின்ற
ஆழ்வாரை தாங்கிவரும் தேரிருக்க
அலைபோல பக்தர் பெருங்கூட்டம்
ஆவலுடன் வந்து தேர் வடம் பிடிக்கும்
நிலைதானும் வளம் பெருகும் மகிழ்வேதான்
நீடு நலம் காணும் பாருங்கள்

"கலாபூசணம்"
கே.ஆர் திருத்துவராஜா

## புகழேறு வல்லிபுரச் சக்கரத்தான் தேரேறு திருக்காட்சி காண்போம்...

காற்றும் கடலலையும் வாழ்த்துகின்ற பண்ணோசை
கேட்டே வானோர்கள் மலர்தூவ
போற்றுமுயர் மந்திரங்கள் தமிழிசையும் முழங்கிடவே
ஏற்றமாய் கண்ணபுர மாத்மாவின்று
சாற்றுமுயர் தேரேறி உலாவருதல் விரும்பியே
வீற்றிருந்து பவனிவரும்
சிறப்பின்று மாற்றமிலா பக்தியோடு தனைவணங்கு
மடியார்க்குத்
தேற்றமதை அளிக்கின்ற நாளின்று!
திருமகள் மகிழ்கின்ற திவ்விய வடிவினன்
நெடுமால் பெருமாள் எனவாகி
வருவோர்க் கருள்கின்ற சக்கரப் பேரொளியின்
உருவாய் தனைக்காட்டும் அதிசயமாய்
இருக்கின்ற காத்தற் கடவுள் எனும் இறைவனின்
அலங்காரத் தேரோட்டம் காணவே
பெருமையுள வல்லிபுரத் திருத்தலம் சென்றிடுவோம்
பெற்றிடுவோம் நற்கதிதா னங்கு...!!

இரா. தில்லைராஜன்

## தேரேறி வருவாய் காத்தருள்வாய் நீயே!

கடல்சூழ் வல்லிபுரத்தில் காட்சி தந்தருளும்
கார்மேக வண்ணா கமலநிறக் கண்ணா
படமெடுத்தாடும் பாம்பணையில் அமர்ந்து
பக்தர்க்கருள் புரியும் பரந்தாமா
வடமது பிடிக்கும் வாஞ்சை மிகுந்தோர்கள்
வாட்டத்தைப் போக்கி நல்வாழ்வளிப்பாய்
குடமது சுமந்து கூட வருவோர்க்கும்
குறைகளைத் தீர்த்து நினைவினில் வைப்பாய்
விடாதொழிக்க நின்று வஞ்சிக்கும் போக்கையும்
திடமாக முன்னின்று நேர்வழி காட்டிடுவாய்
கூடவே சக்கராயுதம் கைதனில் ஏந்தி
கொடுமைகளை அழிக்க தேரேறி வருவாய்.

"கலாபூசணம்" தணிகாசலம்
கற்கோவளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்.இராசம்மா இராசையா அவர்களின் 100 ஆவது ஜனன தினமும் முப்பதாவது நினைவு தினமும் குறித்த சிறப்பு மலர்-05.10.2025 (ஞாயிற்றுக்கிழமை)



பிறப்பு:- 05.05.1925

இறப்பு:- 07.10.1995

**மண்ணுலகில் புகழ்மிக்க**
**வள்ளலவள்**
**பிறந்தின்று**
**நூறென்றாயிடினும்**
**குடும்பத்து நிழலானாள்,**
**இன்று**
**அவள் நின்று**
**நிழல் கொடுப்பாள்**
**பேருந்துக் குடை வடிவில்**



**ஞாபகார்த்த பேருந்து தரிப்பிடம் திறப்பு விழா**

காலம் - 05.10.2025, ஞாயிற்றுக்கிழமை

நேரம் - காலை 8.00 மணி

இடம் - கே.கே.எஸ் வீதி, துரைவீதி சந்தி, இணுவில்-கோண்டாவில்

## ஆசிச் செய்தி

அமரத்துவம் என்பது அழியாமையைக் குறிக்கும் தமிழ்ச் சொல். அச் சொல்லிற்கு பொருத்தமாக இராசம்மா இராசையா அவர்களின் முப்பதாவது நினைவு தினத்தையும் 100 ஆவது ஜனன தினத்தையும் குறித்த சிறப்பு மலரிற்கு எனது ஆசிச் செய்தியை வழங்குகின்றேன்.

இப்பிரதேசத்தில் சிறந்த நல்ல உள்ளங்கொண்ட அவர்களும் அவர்களது பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினரும் பல சேவைகளை காலத்திற்குக் காலம் ஆற்றி வருகின்றனர். எமது ஆலயமாக இருந்தாலும் சரி பொதுநூலகமாக இருந்தாலும் சரி பல அறப்பணிகளை மேற்கொண்ட வண்ணம் உள்ளனர்.

அன்னார் அமரத்துவம் அடைந்தாலும் அவரது சிறப்பு ஆண்டாண்டு காலம் நினைவில் கொள்ளத்தக்க பணிகளை அவரது புதல்வர்கள் மேற்கொண்டு வருவது. குறிப்பாக திரு.இ.சிவகுமாரன் அவர்கள் செயற்படுத்துவது அவரது தாயாரின் வளர்ப்பையும் சேவை மனப்பாங்கையும் எடுத்துக் காட்டுகின்றது.

அன்னாரது பெயர் என்றென்றும் நிலைத்து நிற்கவும் பிள்ளைகளது சேவைகள் தொடரவும் பரராஜசேகரன் ஆசிகளை வழங்க பிரார்த்திக்கின்றேன்.

**சிவஸ்ரீ சோ.அரவிந்த குருக்கள், பிரதம குரு,**
**இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயில்.**

## அமரத்துவம் அடைந்த அன்னையைப் போற்றுவோம்

அமரர் இராசையா இராசம்மா அவர்களின் நூறாவது பிறந்த தினமும் முப்பதாவது நினைவு தினமும் நிகழ்விற்கு பெருமை சேர்க்கும் ஞாபகார்த்த பேருந்து தரிப்பிட நிலையத்திற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன. "நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்" என்ற வாக்கியத்திற்கு அமைய அவர்கள் வாழ்ந்த காலத்திலும் அவர்கள் அமரத்துவம் அடைந்த பின்னரும் புகழ்பூத்து இருந்தவர்கள் எனக் கூறினால் மிகையாகாது. இருவரின் ஞாபகார்த்தமாக இணுவில் பொதுநூலகத்தில் நிறுவப்பட்ட "அமரர்களான இராசையாக இராசம்மா தகவல் தொழில்நுட்ப மையமானது" இப் பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளின் தகவல் தொழில்நுட்ப தேவைகளை நிறைவேற்றி வருவது மகிழ்ச்சியைத் தருகின்றது. மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்ப பயிற்சியை வழங்கி அரசின் பயிற்சிச் சான்றிதழை இந்நிலையம் வழங்கி வருவதுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் மாணவ விண்ணப்பப்படிவங்களை இணைய வழியூடாக அனுப்பி உதவுகின்ற பணியும் இந்த மையத்தின் ஊடாக நிறைவேற்றப்படுகின்றது.

அமரர்களான இராசையா இராசம்மா தம்பதியினருக்கு காங்கேசன் துறைவீதி. துரைவீதிச் சந்தியில் ஞாபகார்த்தப் பேருந்து தரிப்பிடமொன்றை அவரது குடும்பத்தவர் நிறுவியிருப்பது பாராட்டுக்குரியதாகும். குறிப்பாக திரு.இராசையாக சிவகுமாரன் தனது பெற்றோர்களின் நினைவாக பேருந்துத் தரிப்பிடத்தை நிறுவியமை, பொதுமக்கள் வெயில் காலத்திலும் மழை காலத்திலும் பாதுகாப்பாக போக்குவரத்துச் சேவையை மேற்கொள்ள வகை செய்துள்ளது. இந்த செயற்பாடு சமூக சேவையாளர்களால் பெரிதும் பாராட்டப்படுவதுடன் அமரர்களை என்றும் மனதில் பதிய வைக்கும் என்பதில் ஐயமில்லை. அவர்கள் சமூகப்பணி மேலோங்க எமது வாழ்த்துக்கள்.

**பேராசிரியர் க.தேவராஜா, முன்னாள் பீடாதிபதி,**
**முகாமைத்துவக் கற்கைகள்-வணிக பீடம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

## "அமரர்களை மறக்க முடியுமா"

அமரர் இராசையா இராசம்மா அவர்களின் 30 ஆவது ஆண்டு நினைவை நாம் இன்று நினைவுகூருகிறோம். அன்னார் வையத்தில் வாழ்ந்த காலம் ஒரு பொற்காலம் என்று கூறலாம். விருந்தோம்பல் பண்பு நிறைந்த அவர் தனது இல்லத்திற்கு வருகை தரும் உறவுகள்,அன்பர்கள் எல்லோரையும் வரவேற்று விருந்தளித்து உபசரிக்கும் ஒரு பண்பாளராக த.. நல்ல உள்ளம் கொண்ட அவரது குடும்பதவர்கள் ஆலம் விழுதுகள் போல பெரிய விருட்சமாக இன்று உள்நாட்டிலும் சரி வெளிநாட்டிலும் சரி வாழ்ந்து வருவது யாவரும் அறிந்ததே. இணுவில் பொதுநூலகத்தின் தகவல் தொழில்நுட்ப மையமானது அன்னாரது குடும்பத்தவரால் இராசையா இராசம்மா ஆகிய இருவரினது பெயரிலும் ஸ்தாபிக்கப்பட்டது. இதற்கு அவரது இளைய புதல்வன் இராசையா சிவகுமாரன் (லண்டன்) அவர்கள் முன்னின்று உழைத்தவர்.

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என்ற வாசகத்திற்கமைய வாழ்ந்த இராசையாக இராசம்மா தம்பதிகள் நம் ஊரிலே பெயர் சொல்லக்கூடிய வர்த்தகக் குடும்பமாக பரிமளித்தவர்கள். K.R.S அரிசி ஆலை என்பது அமரர் இராசையா அவர்களின் முயற்சியால் உருவாக்கப்பட்டு தொழில் ஸ்தாபகங்கள் பல KRS பெயரிலேயே இன்றும் விளங்கி வருகிறது. கருவி நிறுவனத்திற்கும் அவரது குடும்பம் ஆற்றும் பணி மகத்தானது.

இவ்வாறாக விளங்கிய அன்னாரது நூறாவது ஜனன நிகழ்விலும் 30 ஆவது ஆத்ம சாந்தி நிறைவிலும் அவர்களை நினைவு கூறுவதில் பெருமிதம் அடைகின்றேன்.

**திரு. இரா.அருட்செல்வம்,**
**அதிபர் (ATC Institute இணுவில்)**

## செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி

இணுவில் கிராமத்தில் தன் தொழிற் சிறப்பால் உயர்ந்தவர் அமரர் இராசையா அவர்கள். கடவுள்பக்தியும் கருணை உள்ளமும் கொண்ட அமரர் நினைவாக, பெருந்தெரு வீதியில் பேருந்து நிலையம் அமைத்து பொதுமக்களுக்கு உதவுவது குறித்து வாழ்த்துகிறேன். அமரர் இராசையா இராசம்மா நினைவாக அவர்களின் புதல்வன் திரு. இ. சிவகுமாரன் அவர்கள் இச் சிறப்புப் பணியை நிறைவேற்றியுள் ளார்கள். ஏற்கனவே தாய் தந்தையரின் நினைவாகப் பல அறப்பணிகளை நிறைவேற்றிய சிவகுமாரன் குடும்பத்தவர்களுக்கு மனம் நிறைந்த ஆசிகள் உரித்தாகும்.

**கலாநிதி ஆறு.திருமுருகன், தலைவர்- ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை, தலைவர்- சிவபூமி அறக்கட்டளை- இலங்கை.**

## அறப்பணியின் சிறப்பு

சிறப்புக்குரிய இணுவில் மண்ணிற்கு சிறப்புச் சேர்க்கின்ற வகையில் பொதுநலத் தொண்டுகளை ஆற்றி வருகின்ற அன்புக்குரிய சகோதரர் இராசையா சிவகுமரன் அவர்கள் தன் தாய் தந்தையர் இணுவையூர் இராசையா இராசம்மா நினைவாக அமைந்துள்ள பஸ்தரிப்பிடம் இன்று திறந்து வைப்பதையிட்டு மகிழ்வடைகின்றோம்.

பொதுத்தொண்டு மூலம் மக்கள் சேவை ஆற்றுவதை தன் அறப்பணியாகக் கொண்டுள்ள சகோதரர் சிவகுமாரின் உயர்ந்த சிந்தனை போற்றுதற்கும் பாராட்டுதற்கும் உரியது. அவர்களின் சமுதாயப்பணி சிறப்புற எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன். சிறப்புக்குரிய இராசையா இராசம்மா தம்பதியரின் நாமம் என்றும் நிலைபெறட்டும்.

**அன்புடன்**
**ந.விஜயசுந்தரம்,**
**பிரதம ஆசிரியர், வலம்புரி பத்திரிகை.**

## நிழல் தரு

அமரர் இராசையா இராசம்மா அவர்களின் 100ஆவது ஜனன தினம் இன்று நினைவு கூறப்படுகிறது என்றால். அவரது வாழ்வின் மகத்துவத்தை நாம் உணர்ந்து கொள்வதற்கு இதைவிடச் சிறந்த சான்று வேறொன்றும் இருக்கப் போவதில்லை.

அமரர் இராசையா இராசம்மாவின் வழித்தோன்றல்கள் இன்று உலகெங்கும் மகுடம் சூடி தமது தலைமுறை வாழ்வின் சிறப்பை எடுத்துக் காட்டி வருகின்றார்கள். அன்பால் அரவணைத்து, பண்பாய் பரிவுகாட்டி, உற்றவர்க்கு ஆதரவு தந்த நிழல் தரு அமரர் இராசம்மா. நூற்றாண்டு தாண்டியும் காலத்தால் வாழும் கண்ணியமான இந்த அன்னையின் வாழ்வை எமது சமூகம் முன்மாதிரியாகக் காண்பது நன்மை தரும்.

**திரு.கனகலிங்கம் தர்மசேகரம்,**
**நிறுவுனர், கருவி நிறுவனம்.**

## வாழ்த்துச்செய்தி

திருமதி இராசையாக இராசம்மா அவர்களின் "நூறாவது பிறந்த நாளும் முப்பதாவது சிரார்த்த நினைவு நாளிலும்" பேருந்து தரிப்பு நிலையம் உருவாகின்றது.

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானில் நனி சிறந்தனவே" என்ற கூற்றுப்படி பெற்ற தாயையும் தாய்மண்ணையும் நேசிக்கின்ற மக்களைப் பெற்ற இராசம்மா பெருமைக்குரியவர்.

அவரது நூறாவது பிறந்த நாளை நினைவில் வைத்து முப்பதாவது சிரார்த்த தின நாளில் சிரத்தையுடன் சமூகப்பணியாகப் பேருந்துத் தரிப்பு நிலையம் ஒன்றை உருவாக்கிய பணியைப் பாராட்டி வாழ்த்துகிறேன். திருமதி இராசையா இராசம்மா பெயர் என்றும் நிலைக்கும்.

**கலாபூசணம் திருமதி வை.கணேசபிள்ளை,**
**அமைப்பாளர்-திருநெறிய, தமிழ் மறைக்கழகம்-இணுவில்.**

## தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை

இவ்வுல மனுவுலக வாழ்வுகளில் பேசப்படும் ஜீவன்களில் அமரர்களான திரு.திருமதி.இராசையா இராசம்மா இருவரும் முதன்மை பெறும் தம்பதிகளாகின்றனர். பெயர் பொருத்தம் பேலவே திருமணப் பொருத்தத்திலும் பத்துப் பொருத்தமும் நிறைவாய் பெற்றவர்கள் என்றே சொல்லலாம். ஏனெனில் இருவரது வாழ்க்கையோடும் இணைந்த சம்பவங்கள் மெச்சத்தக்கதாயும் எமக்கு நல்லுதாரணமாயும் அமைந்திருந்தன. அமரர்களது புகழ்பேச அவர்களது புதல்வனும் என் நண்பனுமான திரு.இ.சிவகுமாரனும் கேட்டதற்கு இணங்க சில பதிவுகளைப் பதிவிட முனைகிறேன்.

எண்பதுகளின் பிற்பகுதியில் எமது பேராசானும் மதிப்பிற்குரிய மாறியாதைக்கும்உரிய பேராசிரியர்திரு.க.தேவராஜா அவர்களதும்நண்பன்சிவகுமாரினதும் உயர்வனா நட்பால்திரு.திருமதி இராசையா இராசம்மா இருவரதும் மதிப்பார்ந்த நட்புக் கிடைத்தது. நண்பர்கள் நாம் சிவகுமாரின் பெற்றோரை ஐயா, அம்மா என்றே அழைப்போம். கடின உழைப்பாளி இராசையா என்றால், இல்லத்தாளிற்கு எடுத்துக்காட்டு இராசம்மாதான். அம்மா உறவினர், சுற்றத்தார், நண்பர்கள், பழகியவர்கள் என அனைவரையும் அனுசரித்து விருந்தளித்து இன்சொல் பேசி முகமன்பகர்ந்து இன்புறுவார். மறுபுறம் மக்கள், மருமக்கள், பேரர், பூட்டர், நலனோம்பி, பின் வழிபாடாற்றி தன் தேவைகளைக் கவனிக்கும் ஒரு உத்தமியாக வாழ்ந்து அனைவரது உள்ளங்களிலும் இடம்பிடித்தார்.

ஐயா குறிப்பறிந்து, தேவையுணர்ந்து முக்காலமுணர்ந்து தூரநோக்கோடு செயற்பட்ட உயரிய நோக்கமும் நேரான சிந்தனையும் கொண்ட ஒரு உத்தமன். இவர் சொல்லுக்குச் சொல், வசனத்திற்கு வசனம் அர்த்தம் பொதிந்த கருத்துக்களைக் கூறுவார். இன்றும் கூட நாம் கூடியமர்ந்திருந்து உரையாடும் போது இவர்கள் பற்றிக் கதைத்து பெருமை கொள்வோம்.

இவர்கள் நினைவாக துரைவீதியில் பயணிகள் நிழல்அமைவிடம் அமைப்பது சாலச்சிறந்து. மிகவும் வரவேற்கத்தக்கது. இவர்கள் நினைவாக மேலும் பல கைங்கரியங்கள் செய்து இவர்களது பெயருக்கும் புகழுக்கும் பெருமை சேர்க்க வேண்டும். அதே வேளை அதற்குரிய வலிமையையும் பணபலத்தையும் அவர்கள் சந்ததிக்கு இறைவன் வழங்க வேண்டும் என பிரார்த்தித்து ATC 85 கரங்கள் அமைப்பின் சார்பாக இக்கருத்துக்களைப் பகிர்ந்து அமைகிறேன்.

**ATC 85 கரங்கள் அமைப்பு சார்பாக**
**திரு.மு.முருகவேள் ஆசிரியர்.**

(6 ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## வாழ்த்துச் செய்தி

அமரர் இராசையா இராசம்மா 100 ஆவது நினைவு தினத்தை ஒட்டி அமரர்கள் இராசையா, இராசம்மா ஞாபகார்த்தமாக திறந்து வைக்கப்படுகின்ற பேருந்து நிலையத்தை ஒட்டிய அமரர்கள் பற்றிய நினைவலைகள்

மண்ணுலகில் மிக்க புகழ் வள்ளலவன்
விண்ணுலகை நோக்கி விரைந்த தினம் எண்ணுவமேல்
யுவவருடம் புரட்டாதி மதி பூர்வபட்ச சதுர்த்தசியாம்
சிவகதியைச் சேர்ந்த திதி

நல்ல மனிதர்கள் நீண்ட நாட்களாக வாழ்ந்ததாக சரித்திரமில்லை. ஆனாலும் அவர்கள் வாழ்ந்த காலத்திலும், அமரத்துவம் அடைந்த பின்பும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பது கண்கூடு. அந்தவகையில் அமரர்கள் வாழும் காலத்தில் தங்கள் பிள்ளைகள், மருமக்கள், உறவுகள், ஊரவர்கள் எல்லோரையும் சிறந்த முறையில் வாழ வைத்திருக்கிறார்கள் என்பதை அவர்களது குடும்பத்துடன் நெருங்கிப் பழகியவன் என்ற வகையில் அறிந்திருக்கின்றேன். மேலும் அமரர் இராசையா அவர்கள் ஆத்மீகப் பணியில் எமது பரராசசேகரப் பிள்ளையார் ஆலயத்திற்கு பல்வேறு கருமங்களை ஆற்றியிருக்கின்றார். மேலும் அவரது 6 ஆம் நாள் மஞ்சத் திருவிழாவில் அன்னதானம் செய்வது சிறப்பிற்குரியது. அமரர் இராசையாக இராசம்மா அவர்கள் தன் வீட்டிற்கு வருவோரை விருந்தோம்புதல் சிறப்பிற்குரியது. வள்ளுவர் கூறியது போல செல்விருந்தோம்பி வருவிருந்து பார்க்கின்ற அவரது பண்பு சிறப்பிற்குரியது. அதே போல் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் செயற்படுவது வியப்பில்லை. அந்த வகையில் இந்நிகழ்வை நெறிப் படுத்துகின்ற இராசையா சிவகுமாரன் அவர்கள் இணுவில் மக்களின் தேவை கருதி பல பணிகளைச் செய்து வருகிறார். அந்த வகையில் இணுவில் பொது நூலகச் செயற்பாடு. இணுவில் பொது நூலக தகவல் தொழில்நுட்ப மையத்திற்கான கட்டடம் திறப்பு விழா செய்யப்பட்டு இயங்கி வருகிறது. அதேபோல் இன்று பெற்றோர்கள் ஞாபகார்த்தமாக அமரர்கள் வீட்டிற்கு முன்பாகப் பேருந்துத் தரிப்பிடம் அமைத்து திறந்து வைப்பது சிறப்பிற்குரியது.

அத்தோடு மட்டுமல்லாது விழிப்புலன் அற்றோரது நிறுவனமான கருவிற்கு தனது நட்புறவுகளை இணைத்து லண்டனில் கருவிக் கிளையை உருவாக்கி அபிவிருத்திப் பணிக்கும் அவர்களது வாழ்வாதாரத்திற்கும் பல்வேறு பணியாற்றுவது சிறப்பிற்குரியது. அந்த வகையில் தக்கார் தருவிலார் என்பது அவரவர் எச்சத்தால் அறியப்படும். நண்பர் சிவகுமாரனின் பணி தொடர அமரார்கள் மேலிருந்து ஆசிர்வதிப்பார்கள் என்பது ஐயமில்லை. சிவகுமாரனின் பணிதொடர இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு. ஞான.திருக்கேதீஸ்வரன்,**
**ஓய்வு நிலை ஆசிரியர்.**

## திருமதி இராசையா இராசம்மா அவர்களின் நூறாவது பிறந்தநாள் நினைவஞ்சலியும் நிழற்குடைத் திறப்பு விழாவும்

கருவினிற் சுமந்த மக்கள்
கண்களிற் கனவு மேவ
உருகினர் உம்மை எண்ணி
உதித்ததே நல்ல எண்ணம்
நெருப்பெனக் கொதிக்கும் மண்ணில்
நிழலினைத் தந்து காக்கத்
தெருவினில் அமைந்த கூடம்
தினம்தினம் உம்பேர் சொல்லும் !
உருவமும் மறைந்த தென்று
உணர்த்திய முப்பது ஆண்டு
பெருமையாய் நினைவு கூறும்
பிறந்தநாள் ஆண்டும் நூறு
தருவென நின்றே காத்தத்
தாயவள் நினைவாற் தோன்றும்
திருப்பணி தொடர ஒன்றாய்ச்
சேர்ந்துநாம் வாழ்த்துகின்றோம் !

**ATC 1985 நண்பர்கள்,**
**விஜி- ஜெகன் (லண்டன்)**

## வாழ்த்துச் செய்தி

என்னை மட்டுமில்லை யாரைக் கண்டாலும் மதித்துக் கருணையோடு பேசும் பண்பு, இல்லாதவர்களுக்கு தன்னிடம் இருப்பதை கொடுப்பது எல்லோராலும் முடியாத ஒன்று. அதை இந்தத் தாயிடம் பார்த்தேன்.

என்மேல் மட்டுமில்லை அவர்களுடைய எல்லாப் பிள்ளைகளின் நண்பர்கள் வந்தாலும் இதே மரியாதை, உறவினர்களைப் போல உபசரிப்பு, மனம் விட்டுப் பேசும் வெளிப்படைத்தன்மை போன்றனவே மீண்டும் மீண்டும் அவர்கள் வீட்டுக்குப் போக வேண்டும் என தோன்றுகின்ற அளவுக்கு எந்த நேரத்திலும் அவர்கள் வீட்டில் நண்பர்கள் நிரம்பி வழிவார்கள்.

அது அந்தத் தாயின் வழிவந்ததாகவே பார்க்கிறேன். அவருடைய பிள்ளைகள் எல்லோரும் அதைப் பேணிக் காக்கிறார்கள்

பிள்ளைகள் எல்லோரும் ஊரில் இல்லாத போதும் அந்தக் குறையை மருமகன் தேவா சேர், லட்சுமியக்கா அவர்களும் பேணி நிழல் தரும் குடைமரமாக இருந்து வருகிறார்கள்.

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன் பெற்றான் பொருள்வைப் புழி.

என்ற குறளுக்கேற்றால் போல இல்லாதவர்களுக்கு இரந்தழிப்பதில் முதன்மையான இயக்கத்தை உடையவராக இந்த அம்மையார் திகழ்ந்திருக்கிறார்.

நண்பனுடன் நானும் சிறிது காலம் கொழும்பில் நின்ற போது கூட பிள்ளைகளுக்கு தெரியாமல் கூட ஏழை எளிய வர்களுக்கு தன்னாலான நன்மைகளைச் செய்த வள்ளல்

பல தசாப்தங்களுக்கு முன்பே பரராஜசேகரப்பிள்ளை யார் மஞ்சத்திருவிழாவில் அன்னதானத்தை முதன் முதலில் ஆரம்பித்து வழங்கிய பெருமை KRS இராசையா இராசம்மா தம்பதிகளையே சாரும்.

அதே போல் அவரது பிள்ளைகள் இவர்களது பெயர்களில் பல அறப்பணிகளைச் செய்து வருகின்றார்கள்.

இணுவில் பொது நூலகத்தின் ஒரு கட்டடத்தொகுதியைக் கூட ஞாபகார்த்தமாகக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அதன் தொடர்ச்சியாகத் தான் இந்தப் பேரூந்துத் தரிப்பிடத்தையும் பார்க்கிறேன்.

இணுவில் தெற்கில் இளையதம்பி தங்கம்மா தம்பதிகளின் இரண்டாவது புதல்வியாகப் பிறந்த இராசம்மா, இராசையா என்பவரை மணந்து இல்லறமென்னும் நல்லறத்தில் தெய்வ பக்தியுடன் வாழ்ந்து பூமணி, சிவலோகநாதன், சச்சிதானந்தம், இராணி, இலட்சுமிதேவி, கைலாச பிள்ளை, சிவஞானசுந்தரம், விக்கினேஸ்வரன், சிவகுமாரன் ஆகிய பிள்ளைச்செல் வங்களைச் பெற்றெடுத்து கணவனுடைய தொழில் முயற்சிகள் அத்தனைக்கும் முழு நம்பிக்கை அழித்தவர்.

தன் மனையாளின் பெயரில் சுண்ணாகத்தில் இராசம் மில்லென அடுத்த தொழில் இராசையா தொடங்க, KRS நாடு அரிசி அமோக வரவேற்பைப் பெற இலங்கை முழுவதும் KRS பெயர் பிரபல்யமானது.

பெற்றோர்களுக்கேற்ற பிள்ளைகளாக மூத்த மகன் சிவலோகநாதன் தந்தைக்குத் துணையாக களத்தில் இறங்க வியாபாரம் பன்முகத் தன்மையாக முழு வளர்ச்சிக்கு வித்திட்டது.

அண்ணன் பின் தம்பிகளாக சுண்ணாகம், கோண்டா வில், யாழ்ப்பாணம், கொழும்பு என பல்கிப் பெருகி பெரும் வணிக நிறுவனமாக பரிணாமம் பெற்றது.

உறவுகளைப் பேணி -நற் பிள்ளைகளின் வளர்ப்பில்
கண்ணியமான தாயாய்,
கருணையே வடிவமாக
நடமாடிய தெய்வம் இராசம்மா !

பொன்விழா கண்டுவிட்ட
இராசம் மில் KRS பெயர் பொறித்த
உன் கைராசியான
நல் அரிசி ஆலை இன்றும்
சுண்ணாகத்தில் அம்மாவின் பெயர் சொல்ல
நூறாவது அகவை காணும் அம்மாவின் நினைவில்
நூற்றாண்டு காலம் புகழ் ஓங்க
நானும் வணங்குகிறேன்

**இணுவையூர் சக்திதாசன்,**
**டென்மார்க்.**

## அறப்பணிகள் பல பெருகிட வாழ்த்துக்கள்

மனிதருள் மாணிக்கமாம் திருமதி இராசம்மா இராசையா அவர்களின் 100 ஆவது பிறந்த தின வாழ்த்துகள் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன். அன்னாரின் குடும்பத்தவர்கள் பல நற்பணிகள் ஆற்றி வருகின்றனர். கோவில்கள், பாடசாலைகள், கல்விக் கூடங்கள், நூலகங்கள், தனி நபர் குடும்பங்களின் வாழ்வாதார உதவிகள், சமூக தொண்டு நிறுவனங்கள் ஆகிய பல வழிகளிலும் இவர்களின் உதவி நீண்டு செல்வதையிட்டு பெருமையடைகின்றேன். இன்றைய தினம் இராசம்மா அவர்களின் பிறந்த நாளை நினைவு கூரும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்ட பேருந்து தரிப்பிடம் ஒன்று அன்னாரது இல்லத்திற்கு முன்பாக அமையவுள்ளது. " செல்வத்திற்கு அழகு செழுங்கிளை தாங்குதல்" என்ற வகையில் இவர்களின் பணி சிறக்க வாழ்த்துகின்றேன். மேலும் பல சமூகப் பணிகள் புரிந்து இக் குடும்ப விருட்சம் எமக் கெல்லாம் நற்பணியாற்ற வேண்டுகிறேன்.

**திரு.சு.கணேசலிங்கம்,**
**ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்**
**(ஆங்கிலம்).**

## உள்ளத்தால் உயர்ந்த உத்தமி

இராசையா இராசம்மா குடும்ப விருட்சத்தின் குல விளக்காய் பிரகாசித்த திருமதி. இராசம்மா இராசையா அமரத்துவம் அடைந்து இன்றோடு மூன்று தசாப்தங்கள் ஆகின்றன. காலங்கள் உருண்டோடினாலும் எங்கள் குல விளக்கின் ஒளி இன்றும் எங்கள் அனைவரிலும் பிரகாசித்துக் கொண்டு தான் இருக்கின்றது.

எங்கள் குடும்ப பெரு விருட்சத்தில் அமரர் திருமதி. இராசம்மா ஓர் அதிசயகாரி, அற்புதப்பிறவி, அதிஷ்ட தேவதை, பண்பின் சிகரம், பொறுமையின் இலக்கணம், எமக் கெல்லோருக்கும் அன்பாய், கருணையாய்த், திகழ்ந்தவர் இத்தேவதையின் வரவு இராசையா இராசம்மா குடும்பத்தை வணிகத்திலும், கல்வியிலும் செழிக்க வைத்தது. ஊர் மக்கள் அனைவராலும் பாராட்டப்பெற்ற கொடைவள்ளல், சைவசமய வாழ்வியல் நெறியில் தன்னை ஈடுபடுத்தி வாழ்ந்து காட்டிய பெருந்தகை ஆவார். இன்றும் உள்ளத்தால் உயர்ந்த உத்தமியாய் எங்கள் எல்லோர் மனங்களிலும் வலம் வந்து கொண்டு தான் இருக்கின்றாய்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி-

**பேரன் கலாநிதி. சண்.பத்மநேசன்,**
**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.**

## அன்னையின் நினைவுகளுடன்...

மாமியார் மெச்சும் பெண்ணாய்
மகளென ஆனாய் நீயும்
சாமிகள் தொழுது வந்தே
சலனமும் ஏதும் இன்றி
வாரியே வழங்கும் வள்ளல்
வஞ்சகம் இல்லாச் செம்மல்
பாரினில் எம்மை ஈன்ற
பண்புடை எங்கள் அன்னை !
தந்தையின் நிழலாய் நின்றாய்
தரணியில் எம்மைக் காத்தாய்
முந்தியே ஓடி வந்து
முத்தமும் இட்டு எம்மை
அந்தியும் பகலும் கொஞ்சி
அனுதினம் அன்னம் ஊட்டிச்
சிந்தையில் நிறைந்த அன்னை
சிகரமும் அடையச் செய்தாய் !
முப்பது ஆண்டுகள் ஓடியே மறைந்தாலும்
இப்பொழுதும் உன்றன் நினைவால்
ஏங்குகிறோம்
எப்பொழுதும் உன்றன் திருவடி தொழுதிடுவோம்
எப்பிறப்பிலும் உன்றன் மக்களாய்ப் பிறந்திடவே !

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**பிள்ளைகள்**

(c-4026)

# அல்லல் போக்கும் அகண்ட தீபம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மேல்வருத் துர் சுயம்பு அருள்மிகு ஆதி பராசக்தி வார வழிபாட்டு மன்றத்தால் 6 ஆவது அல்லல் போக்கும் அகண்ட தீப வழிபாடு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப் பாணம் ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றத்தில் (இல.156, ஜீ.பி.எஸ்.வீதி, கல்வியங்காடு) இடம்பெறவுள்ளது .

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் வழிபாட்டு மன்றத்தினால் ஏற்றி வைக்கப்படும் அகண்ட தீபத் திற்கு மாலை 3 மணிவரை எண்ணெய் ஊற்றி வழிபடலாம். அன்றைய தினம்மாலை 4 மணி யளவில்அகண்டமானது முறைப் படி குளிர வைக்கப்படும். அன்ன தானமும் வழங்கப்படும். (3)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் ஐந்தாவது இளங்கலைமாணி ஆய்வு மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கலைப்பீடத்தின் ஐந்தா வது இளங்கலைமாணி ஆய்வு மாநாடு எதிர்வரும் 8 ஆம் திகதி புதன்கிழமை நடைபெற வுள்ளது.

பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் காலை 9 மணி க்கு ஆரம்பமாகவிருக்கும் இந்த ஆய்வுமாநாட்டின் முதன்மை விருந்தினராக பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசி ரியர் சி.சிறிசற்குணராஜா கல ந்து சிறப்பிக்க இருக்கின்றார். ஆய்வு மாநாட்டுக்கு கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் தலைமை தாங்குவார். இல ங்கை திறந்த பல்கலைக்கழகத் தின் சமூக விஞ்ஞானத்துறை ஓய்வுநிலைப் பேராசிரியர் எஸ்.சந்திரபோஸ் சிறப்புரை யினை ஆற்றவிருக்கின்றார்.

பல்கலைக்கழகங்களின் பணிகளில் பிரதான பணிகளில் ஒன்றாக இருப்பது ஆய்வுச் செயன்முறையாகும். பல்கலைக் கழக ஆசிரியர்கள் மட்டுமின்றி மாணவர்களும் கல்விசார் ஆய்வுகளில் சிரத்தையுடன் ஈடுபட வேண்டும் எனும் எதிர் பார்ப்பு அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றது. அதற் கமைய பல்கலைக்கழக மாண வர்களும் பல்வேறு தடங்களில் தமது ஆய்வு நாட்டத்தைக் காண்பித்து வருகிறார்கள். இந்த வகையில், கலைப்பீடத் தின் இளம் கலைமாணி ஆய்வு மாநாடு கடந்த நான்கு வருடங்களாக மிகச் சிறப்பாக நடைபெற்று வந்தது.

இம்முறை நடைபெறும் ஐந்தாவது மாநாடு "வெவ்வேறு துறைகளை இணைத்து மாற் றங்களை வலுவூட்டுவதற்காக அறிவைச் செயற்படுத்துதல்" என்னும் தொனிப்பொருளோடு 16 ஆய்வுத் தடங்களில் நடை பெற ஏற்பாடாகியிருக்கிறது.

இளங்கலைமாணி பட்டக் கற்கையின் இறுதியாண்டில் மாணவர்கள் நிறைவுறுத்திய ஆய்வுகளின் அளிக்கையாக இம்மாநாடு அமைய இருக் கின்றது. அவை ஆய்வுச் சுருக் கங்களாக இந்த ஆய்வு மாநாட்டின் ஆய்வடங்கல் மூலமும் வெளியிடப்படுகின் றன. (8)

# 'கானல் நீதி' நிகழ்வு

திருகோணமலை நகரத் தின் காந்தி சிலையருகில் வைத்துக் கடந்த 2006.01.02 ஆம் திகதியன்று படுகொலை செய்யப்பட்ட ஐந்து மாணவர் களுக்கு நீதிகோரி போராடி வந்த, படுகொலையான மாண வரான ரஜிகரின் தந்தையார் மருத்துவர் காசிப்பிள்ளை மனோகரன் அண்மையில் அமரத்துவமடைந்திருந்தார். அவருக்கு அஞ்சலி செலுத்தும் 'கானல் நீதி' நிகழ்வு, நாளை திங்கட்கிழமை காலை 10:00 மணிக்கு யாழ்ப்பாணம், தந்தை செல்வா கேட்போர் கூடத்தில் நடைபெறவுள் ளது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
நாதம் 513
05.10.2025
பக்கம் 07

# மனிதப் புதைகுழிகளால் நிரம்பிய இந்து மகா சமுத்திரத்தின் முத்து



இந்து மகா சமுத்திரத்தில் கண்ணீர்த்துளி வடிவில் அமைந்துள்ள இலங்கைத்தீவு, சட்டவிரோதமாகக் கொன்று புதைக்கப்பட்ட மனிதப் புதைகுழிகளாலும் நிரம்பிய நிலமாக இன்று அறியப்படுகிறது. "இந்து சமுத்திரத்தின் முத்து" என அழைக்கப்படுகின்ற இந்தத் தீவுக்குள் மனித எலும்புக்கூடுகளே நிரம்பியிருக்கின்றன.

அழகிய கடற்கரைகள், பசுமையான தேயிலைத் தோட்டங்கள், மலைகள், நதிகள் என இந்த இலங்கைத் தீவின் அழகான பக்கங்கள் ஒருபுறம் இருக்க, மறுபுறம் புதைகுழிகளாலும் நிரம்பியிருக்கிறது. கண்ணீர்த்துளி வடிவில் உள்ள இத்தீவில் கண்ணீருடன் வாழும் மக்கள் அதிகம். தீவு முழுவதும் மனிதப் புதைகுழிகளில் இருந்து எடுக்கப்படும் எலும்புக்கூடுகளால் அழுகின்ற மக்களை அதிகம் கொண்ட நாடாகவும் இலங்கை காணப்படுகிறது.

இலங்கையில் நடந்த உள்நாட்டு யுத்தம் மற்றும் கிளர்ச்சி காரணமாக இந்தத் தீவு முழுவதும் ஏராளமான மனிதப் புதைகுழிகள் காணப்படுகின்றன. இற்றைவரை சுமார் 23 புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கண்டுபிடிக்கப்படாமல் இன்னும் ஏராளமான மனிதப் புதைகுழிகள் தீவெங்கும் இரகசியம் காத்துக் கிடக்கின்றன. இதில் தமிழ் மக்களின் தாயகமான வடக்கு, கிழக்கில் அதிக மனிதப் புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டு, அவற்றில் பல தோண்டப்பட்டு, ஒவ்வொன்றிலும் ஏராளமான மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன, மீட்கப்பட்டும் வருகின்றன.

இலங்கையில் 1971ஆம் ஆண்டு ஜே.வி.பி கிளர்ச்சியுடன் ஆரம்பிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகள், 2009ஆம் ஆண்டில் விடுதலைப்புலிகளுடனான யுத்தம் நிறைவுக்கு வரும் வரையில் தொடர்ந்தன. தென்னிலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகள் அனைத்தும் ஜே.வி.பி கிளர்ச்சியின் போது காணாமல் ஆக்கப்பட்டவர்களுடையது எனத் தெரிவிக்கப்படுகிறது. அவ்வாறே வடக்கு கிழக்கில் காணப்படுகின்ற மனிதப் புதைகுழிகள் அனைத்தும் விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தின் போது காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் மக்களுடையதாகக் காணப்படுகிறது.

வடக்கு கிழக்கிற்கு ஐ.நா பிரதிநிதிகள் உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், உள்ளூர்ப் பிரதிநிதிகள் என யார் விஜயம் செய்தாலும், அவர்களிடம் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் படங்களுடன் செல்லும் அம்மாவும் அப்பாவும் அக்காவும் அண்ணாவும் உறவுகளும் கண்ணீருடன் கதறி அழுது நீதி கோரி நிற்கும் காட்சிகள் நெஞ்சை கனக்கச் செய்கிறது. இலங்கை இராணுவத்தால், பொலிஸாரால், அல்லது இவர்களோடு சேர்ந்து இயங்கிய துணை இராணுவக் குழுக்களால் கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்திருக்கும் என்ற பெரும் கேள்விக்கு விடையாக இப்பொழுது தமிழர் தாயகப் பிரதேசங்களில் தோண்டப்படும் செம்மணி உள்ளிட்ட மனிதப் புதைகுழிகள் காணப்படுகின்றன.

### மனிதப் புதைகுழிகளின் அவலம்!

மனிதப் புதைகுழிகள் தொடர்பில் இன்றுவரை மிகத் தெளிவான சர்வதேச வரைவிலக்கணங்கள் எதுவும் உருவாக்கப்படவில்லை. ஆனாலும் சட்டரீதியாக புதைக்கப்பட்டவர்களைத் தவிர வழமைக்கு மாறாக ஓரிடத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட மனித உடல்கள் புதைக்கப்பட்ட குழிகள், அகழிகள் என்பன பாரிய மனிதப்புதைகுழிகளாக அடையாளம் காணப்படுகின்றன. இவை யுத்தம், இனப்படுகொலை, மனித உரிமை மீறல் போன்றவற்றின் போது சித்ரவதைக்கு ஆளாகிக் கொல்லப்படும் அப்பாவிகளை மறைக்கும் நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்படுகின்றன.

இதுவரை இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட அனைத்து மனிதப் புதைகுழிகளும் மேற்சொன்னவாறு கைதுகள், காணாமல் ஆக்கப்படுதல், அதன்பின் மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோதக் கொலைகளால் ஏற்பட்டவை. அதாவது, மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் அனைத்தும் சித்ரவதைக்கு ஆளாகிக் கொலை செய்யப்பட்டவர்களுடையவை அல்லது சுடப்பட்டுக் கொலை செய்யப்பட்டவர்களின் மிச்சங்கள் எனத் தடயவியல் ஆய்வுகள் கூறுகின்றன.

### சிறுவர்களையும் கொன்று புதைத்த அவலம்!

இலங்கையில் 2009 வரை ஏற்படுத்தப்பட்டவை என இன்றுவரைக்கும் சுமார் 23 பாரிய மனிதப் புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவை நாடு முழுவதும் பரவலாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதைத் தவிர கிடைக்கப் பெறுகின்ற தகவல்கள், வாக்குமூலங்களுக்கு அமைவாக அந்தந்தக் காலப் பகுதியில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் இன்னும் பல புதைகுழிகள் கண்டுபிடிக்கப்படக்கூடும்.

அந்தவகையில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகளாக யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு அரங்கம், யாழ்ப்பாணம் செம்மணி, யாழ்ப்பாணம் மிருசுவில், கிளிநொச்சி மாவட்டம் கணேசபுரம், மற்றும் பிறிதொரு மனிதப் புதைகுழி, மன்னார் மாவட்டம் சதோச, மன்னார் திருக்கேதீஸ்வரம், முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய், குருநாகல் மாவட்டம் நிகரவபிட்டிய, கம்பஹா மாவட்டம் மினுவர்ங்கொட கம்பஹா எஸ்செல்ல, கம்பஹா மாவட்டம் நித்தம்புவ, கொழும்பு மாவட்டம் கோகந்தர, கொழும்பு பொல்கொடஏரி, மாத்தறை மாவட்டம் அக்குரஸ்ஸ, இரத்தினபுரி மாவட்டம் சூரியகந்த, மாத்தளை வைத்தியசாலை, கண்டி அங்கும்புர, மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு சத்துருகொண்டான், மட்டக்களப்பு குருக்கள் மடம் ஆகியன காணப்படுகின்றன. இப்பொழுது புதிதாக யாழ்ப்பாணம் மண்டைதீவு மனிதப் புதைகுழி தொடர்பில் நீதிமன்ற விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### மனிதப் புதைகுழிகளும் அரசியல் தலையீடுகளும்

இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகள் விடயத்திலும் அல்லது குறிப்பிட்ட இடத்தில் மனிதப் புதைகுழிகள் காணப்படுகின்றன என்ற தகவல்களின் அடிப்படையில் அவற்றை அகழ்கின்ற விடயத்திலும் கடந்த காலங்களில் பாரிய அளவில் அரசியல் தலையீடுகள் இருந்தமையினை பலரும் சுட்டிக்காட்டி விமர்சித்துள்ளனர். அரசியல் நலன்களின் அடிப்படையில்தான் இவ்வாறான மனிதப் புதைகுழிகள் விடயத்தில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன என்பது மனித உரிமை செயற்பாட்டாளர்களின் குற்றச்சாட்டு.

2013இல் மாத்தளையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளுக்கும் நடந்தது. இவை 1980களுக்குப் பின்னரான காலப்பகுதியைச் சேர்ந்தவை என கிடைக்கப்பெற்ற தடயவியல் பொருட்களை வைத்துக் கூறப்பட்டிருந்தது. 1989-90களில் மாத்தளை மாவட்ட இராணுவ ஒருங்கிணைப்பு அதிகாரியாக இருந்தவர் கோட்டபாய ராஜபக்ஷ. பின்னர் மாத்தளை புதைகுழி கண்டுபிடிக்கப்பட்ட காலப்பகுதியில் இவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகப் பணியாற்றினார்.

எனவே இந்தப் புதைகுழி விடயத்தில் உண்மைகள் வெளிவரும் பட்சத்தில் தன்னுடைய சகோதரரின் வகிபாகம் வெளியே வந்துவிடும் என்பதற்காக அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெறுமனே ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஒன்றை நியமித்து அதனை வலுவிழக்கச் செய்தார்.

இதுபோன்றே செம்மணி புதைகுழி விடயத்திலும், கிருஷாந்தி படுகொலையுடன் தொடர்புபட்ட இராணுவத்தினர் கைது செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்ட போது, செம்மணியில் 400இற்கும் மேற்பட்ட மனித உடல்கள் புதைக்கப்பட்டுள்ளதாக இராணுவ கோப்ரல் சோமரட்ண ராஜபக்ச தெரிவித்தார். பின்னர் அகழ்வுப் பணிகளில் 15 உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டதோடு அகழ்வுப் பணிகளும் விசாரணைகளும் நிறுத்தப்பட்டன. இராணுவ உயரதிகாரிகள் பலர் சிக்கிக்கொள்வார்கள் என்ற காரணத்தினால் விசாரணை நிறுத்தப்பட்டது. இப்பொழுது புதிய அரசாங்கத்தினால் தொடர்ச்சியாக அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 147 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. இவ்வாறே மிருசுவில் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மூன்று குழந்தைகள் உள்ளிட்ட எட்டுப் பேர் கொலை தொடர்பான வழக்கில் குற்றவாளிகளாக இனம் காணப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட இராணுவத்தைச் சேர்ந்த சுனில் ரத்நாயக்கவுக்கு 2020இல் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ பொது மன்னிப்பு வழங்கினார்.

பல மனிதப் புதைகுழிகள் விடயத்தில் இவ்வாறு அரசியல் தலையீடுகள் காரணமாக அவை தொடர்பான உண்மைகள் வெளிவராமலே அவையும் புதைக்கப்பட்டுள்ளன.

### மனிதப் புதைகுழியும் நீதியும்

புதிய அரசு மனிதப் புதைகுழிகள் விடயத்தில் வெளிப்படைத்தன்மையுடன் நீதியான விசாரணை நடத்தும் என்ற சிறு நம்பிக்கை காணப்படுகிறது.

ஆனாலும் கடந்த காலத்தில் ஆட்சி அதிகாரத்தில் இருந்த எல்லா அரசுகள் போன்றும் நீதிக்குப் புறம்பாகத் தன் படைகளையும் அதிகாரிகளையும் காப்பாற்றும் முயற்சியில் அரசு இறங்குமா என்ற சந்தேகமும் மக்களிடம் உண்டு.

இலங்கையில் மனிதப் புதைகுழிகள் விடயத்தில் நீதியான விசாரணைகள் நடத்தப்பட்டு குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டவர்களுக்கு தண்டனையும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியும் கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை என்றே கூறவேண்டும்.

குற்றம்சாட்டப்பட்ட பல இராணுவ அதிகாரிகள் பின்னாட்களில் பதவி உயர்வு வழங்கப்பட்டு ஓய்வு பெற்றுள்ளனர். பலர் விசாரணை வளையத்திற்குள் வராமலே பதவிக் காலத்தைக் கழித்து விட்டுச் சென்றுவிட்டனர். வெறும் சந்தேகத்தின் அடிப்படையில் பிடித்துச் செல்லப்பட்ட நூற்றுக்கணக்கான சிறுவர்கள், இளைஞர்கள், பெண்கள் எப்படிப்பட்ட வலியையும் வேதனையையும் சந்தித்து இறந்திருக்கக்கூடும் என்பதற்கு சாட்சிகளே இந்த மனிதப் புதைகுழிகள். அவர்கள் அனுபவித்த வலிகளுக்கும், உறவுகளின் அழுகைக்கும் இயற்கை நீதியை வேண்டி நிற்கிறது இலங்கை.

காணாமல் ஆக்கப்பட்டவர்களினுடைய உறவுகளின் வலியையும் வேதனையையும், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு யாரும் விளங்கப்படுத்தத் தேவையில்லை. காரணம், அவருடைய சகோதரனும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுள் ஒருவர். அப்போது அவரது தாய் பொலிஸ் நிலையங்கள் உள்ளிட்ட அலுவலகங்களுக்கு ஏறி இறங்கியதனையும் அதன் வலிகளையும் நேரில் அனுபவித்தவரே ஜனாதிபதி. எனவே, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மனிதப் புதைகுழிகள் தொடர்பில் அவரிடமிருந்து நீதியை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

ஆனந்த விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.


இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். முல்லைத்தீவு மாவட்டத்தில் 2024 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் தொழில்நுட்பப் பிரிவில் முதலிடத்தில் சித்தியடைந்த மாணவன் பி.பானுசன் நம்மை விட்டுப் பிரிந்து விட்டார் என்ற செய்தி மிகுந்த வேதனை தருவதாகும். அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக்கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.


**விதானையார்:** மன்னாரில இந்திய முதலீட்டில அமையவிருக்கிற காற்றாலைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தவியள். அதேநேரம் மன்னாரில காற்றாலைக்கு ஆதரவாகவும் மக்கள் திரண்டிருக்கினம். எல்லாத் திட்டங்களையும் எதிர்த்துப் போட்டு என்ன செய்யப் போறியள் எண்டு அவையள் கேள்வி கேட்டுருக்கினம்.

அதேநேரம் காற்றாலை என்பது உலகில மன்னாரில மட்டும் தான் அமையப் போகிறதா? வேறு இடங்களில் அது அமையவில்லையா? என்று கேள்வி கேட்ட அவர்கள்; தனங்களப்புத் தொடக்கம் ஆனையிறவு ஈறாக காற்றாலை


மாணவன் பி.பானுசன்

அமைக்கப்பட்ட போது அதை எதிர்க்காதது ஏன்? என்றும் அவர்கள் வினா தொடுத்திருக்கினம்.

**கங்காணி:** அதுமட்டுமல்ல விதானையார். மன்னாரில காற்றாலைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடப்பதற்குப் பின்னணியில சில மத குருமார் இருப்பதாயும் மன்னார் திருக்கேதீஸ்வரத்தை இந்திய மத்திய



## விபத்தில காயமடைந்தவர்களை காப்பாற்றுவதற்கு உதவுங்கள்

அரசு புனரமைப்புச் செய்து கொடுத்தது அவர்களுக்குப் பிடிப்பில்லை எனவும் அதன் காரணமாக இந்தியாவின்ர காற்றாலைத் திட்டத்தை எதிர்க்க வேண்டும் என்பது தான் சம்பந்தப்பட்டவர்களின் நோக்கம் எண்டும் காற்றாலைக்கு ஆதரவாகத் திரண்டவர்களின் கருத்தாக இருந்தது.

**மூப்பர்:** இப்ப தமிழ்... தமிழ்... எண்ட இன உணர்வு இல்லாமல் போய் மத உணர்வு மேலோங்கத் தொடங்கிற்றுது எண்டு சொல்லுறியள்.

**சாத்திரியார்:** விடுதலைப்புலிகள் இல்லாததற்குப் பிறகு தானே தெரியுது எந்தப் புற்றில எந்தப் பாம்பு இருக்குது எண்டு. என்ன தான் இருந்தாலும் இந்தியாவை நாங்கள் பகைப்பமாக இருந்தால், எங்கட கதி அம்போ தான்.

**சிறாப்பர்:** என்ன சாத்திரியார் சொல்லுறியள்?

**சாத்திரியார்:** இஞ்சே சிறாப்பர் இந்தியாவை மீறி எங்கட விவகாரத்தில எவரும் தலையிட மாட்டினம். இந்த உண்மையை எங்கட தமிழ் மக்கள் உணர்ந்து கொள்ள வேணும். இந்தியா எங்களுக்குத் தேவையே தவிர இந்தியாவுக்கு நாங்கள் தேவையில்லை. ஆகையால மதவாத சிந்தனைகளை விடுத்து, எப்படி எங்கட தமிழனத்தின்ர உரிமைகளை வென்றெடுப்பது என்பது பற்றிச் சிந்திப்பது தான் மிகவும் முக்கியம்.

இதை விடுத்து மன்னாருக்குள்ள இந்தியாவை வர விடக்கூடாது எண்ட குறுகிய நோக்கில ஒரு சிலர் செயற்பட்டால், அதின்ர ஒட்டுமொத்தப் பாதிப்பும் தமிழ் மக்களுக்காகத் தான் இருக்கும்.

இவ்வாறு சாத்திரியார் கூறியதும் ஆலடி நிசப்தமாகியது. நிசப்தத்தைக் கலைக்க வாத்தியார் வைத்திலிங்கம் குரல் கொடுத்தார்.

**வாத்தியார்:** வீதி விபத்துக்களால எத்தனையோ அருமந்த உயிர்களை நாங்கள் இழந்து போறம். அண்மையில பூநகரிப் பகுதியில நடந்த விபத்தொன்றில படுகாயமடைந்த ஒரு சிறுமியை உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கு எவரும் முன்வரவில்லை.

பின்னர் சிறுமியை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்ற போதிலும் அந்தச் சிறுமி உயிரிழந்து போனார்.

என்ன செய்யிறது? முன்னைய காலத்தில, ஒருவர் தடக்கி விழுந்தாலே அவரைத் தூக்கி விடுவதற்கு எத்தனையோ பேர் முன்வருவினம்.

அந்தளவுக்கு அந்தக் காலத்தில மனிதநேயம் இருந்தது.

ஆனால் இப்ப வாகன வசதி, கையடக்கத் தொலைபேசி வசதி என எல்லாம் இருந்தும் மனிதநேயம் இல்லாமல் போயிற்று. இதால விபத்தில காயமடைந்தவர்களையும் விபத்தில சிக்கியவர்களையும் படம் எடுத்து முகநூலில பதிவேற்றம் செய்யிறதில தான் நம்மவர்கள் கருசனை காட்டுகினம்.

என்னதான் செய்தாலும் மற்றவர்களின்ர துன்பத்தில நாங்கள் விளையாடினால், காலம் நிச்சயம் எங்களுக்கும் பாடம் படிப்பிக்கும். இவ்வாறு வாத்தியார் கூற ஆலடி மௌனமாகியது.

**பண்டிதர்:** விபத்துக்கள் ஏற்படக்கூடிய இடங்களை முதலில சீர் செய்ய வேணும். உதாரணத்திற்கு யாழ்ப்பாணம் செம்மணி வீதியில வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு மற்றும் மாகாணக் கல்வித் திணைக்களம், யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகம் ஆகியவற்றின் நுழைவாயிலால வெளியேறுகின்ற போது, விபத்து ஏற்படக் கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக இருக்குது.

நுழைவாயிலின் முனையில இருக்கிற தேவாலயத்தின் மதில் சுவர் செம்மணி வீதியால பயணிக்கிற வாகனங்களை மறைப்பதால விபத்துக்கான சந்தர்ப்பம் அதிகம்.

**மூப்பர்:** அதுக்குப் பண்டிதர் என்ன செய்யலாம்?

**பண்டிதர்:** குறித்த தேவாலயம் செம்மணி வீதியில இருக்கிற தனது மதில் சுவரை உடைத்து சற்று உள்ளெடுத்து மதிலைக் கட்டினால் பிரச்சினை தன்பாட்டில தீரும்.

அதேநேரம் அந்தக் காரியம் நடைமுறையாகும் வரை, அந்த இடத்தில விபத்து ஏற்படாதவாறு ஏதேனும் ஏற்பாடுகள் செய்வது கட்டாயமானது.

**விதானையார்:** அது சரி, விதை நெல்லுக்குள்ள பண்டி நெல்லு கலந்திருப்பதாக அறிந்தம். இது இப்ப எப்படி இருக்குது.

**சாத்திரியார்:** பண்டி நெல்லுக் கலந்திருந்தாலும் பரவாயில்லை. அந்த விதை நெல்லை விற்றுத் தீர்க்கும்படி உத்தரவிடப்பட்டிருப்பதாகக் கேள்வி.

**விதானையார்:** அட, நாசமறுப்பு அப்ப இனி விதை நெல் லையும் நம்பி வாங்க முடியாதெண்டு சொல்லுறியள்.

இவ்வாறு சாத்திரியார் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க; ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வியாசர் பதில்கள்

அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு SMS, WhatsApp செய்யுங்கள்

**கஷ்டப்படாமல் பணக்காரன் ஆவதுக்கு என்ன செய்ய வேண்டும் வியாசரே?**

அருதீஸ்-யாழ்ப்பாணம்

பலர் இப்படி முயற்சித்துத் தான் கம்பி எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். முதலில் நாம் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். அதாவது நாம் வியர்வை சிந்தி உழைக்காமல் சேர்க்கும் பணம் எம்மில் ஒட்டாது.

இப்போது இங்கு இருக்கும் பல கோடிஸ்வரர்கள் இயக்கத்தின் காசில் தானே கோடீஸ்வரராக இருக்கிறார்களே என நீங்கள் கேட்பது எனக்குப் புரிகிறது.

கப்பும் வளையும் பொறுத்தால் தான் தெரியும் என்று பெரியோர்கள் கூறுவார்கள்.

நோகாமல் கோடீஸ்வரரானவர்களுக்கும் இதே மெதேட்தான். கப்பும் வளையும் பொறுக்கட்டும் பொறுமையாய் இருங்களேன்.



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கு நோபல் பரிசு கிடைக்குமா வியாசரே?

**வண்டியும் தொந்தியுமாக நிக்கின்றனரே நம் ஊர் அரசியல்வாதிகள்**

சிவயோகன்-புளியம்பொக்கனை

வியர்வை சிந்தி உழைக்காமல் விசும்புப் பேச்சுப் பேசுபவர்களுக்கு எப்படித் தெரியப்போகிறது கடின உழைப்பென்றால் என்ன என்று.

இவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் எம்மை விற்று அரசியல் நடத்துவதே.

படிப்பது தேவாரம் இடிப்பது சிவன்கோவில் என்பது போல இவர்கள் பேசுவது தமிழ் தேசியம் ஆனால் அதன் அழிவுக் கு இவர்களே மூலகாரணம்.

இவர்களில் ஒருவர் கையைத் தூக்கட்டும் பார்ப்போம், நான் தமிழ் மக்களுக்காக உயிரையும் கொடுக்கத் தயார் என்று.

ஒரு வேளை யாரும் அப்படி கையைத் தூக்கினால் நான் மண்ணெண்ணெயுடன் வரத் தயார்.

**அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கு நோபல் பரிசு கிடைக்குமா வியாசரே?**

மோகன்-மானிப்பாய்

உலகப் பிரபல்யங்களில் விருதுக்காகத் துடிக்கும் ட்ரம்ப் போல ஒருவரை நான் பார்த்ததே இல்லை.

அமைதிக்கான நோபல் பரிசைத் தனக்குத் தர வேண்டும் என வெளிப்படையாகப் பேசி வரும் அவர் குட்டையையும் குழப்பி அதில் மீனையும் பிடித்து விட்டு மீண்டும் அந்த மீனை அதே குட்டையில் விடவும் பார்க்கிறார் என்றால் அவர் மகா கில்லாடி தானே.

பத்து நாள் பத்துப் பேருக்கு பிரசங்கம் செய்ய, தனக்கு ஒரு பட்டம் தர வேண்டும் என கேட்டு வாங்கி அதைப் பெயரின் முன் அடுக்கி அழகு பார்க்கும் எம் பிரசங்கிகளின் முன் ட்ரம்ப் ஜொலிக்கமாட்டார்.

**அன்பின் வியாசரே! அருகி வரும் பனங்கள் இறக்கும் தொழிலில் கள் இறக்க முட்டிக்குப் பதில் பிளாஸ்ரிக் போத்தல் கட்டப்படுகிறதே?**

மருகன்-சித்தன்கேணி

கலப்படமில்லாத நஞ்சில்லாத ஒன்று உண்டெனின் அது பதநீர் மட்டும் தான்.

அதையும் அதன் பாரம்பரியத்தை சிதைக்கும் வகையில் நடந்து கொள்வதை ஏற்றுக்கொள்ள முடியாது.

மண்முட்டியை கட்டி இறக்கும் போது இருக்கும் புனிதத் தன்மை ஒரு நாளும் பிளாஸ்ரிக்கில் இருக்கவே இருக்காது.

பிளாஸ்ரிக் மனிதனை முழுவதுமாய் அழித்து வருகிறது. அண்மைய ஆராய்ச்சி முடிவின் படி, மனித இரத்தத்தில் கூட பிளாஸ்ரிக் துகள்கள் கலந்திருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறியிருப்பது இன்னும் கிலியை ஏற்படுத்து கின்றது.

**பாலஸ்தீனத்தை அங்கீகரித்த அரசாங்கம் ஐ.நாவில் ஈழத்தமிழர் அரசியல் தீர்வுக்கு வழி சொல்லாதது ஏன்?**

சுதன்-குப்பிழான்

மனித இனத்தின் பழக்கதோசமே இது தானே. எமது வீட்டில் பெரும் கூப்பாடே நடக்கும். அதைப்பற்றி அடுத்தவர் என்ன பேசுகிறார் என்பது பற்றிச் சிந்திக்கமாட்டோம்.

ஆனால் அடுத்த வீட்டில் என்ன நடக்கிறது. அவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு என்ன என்பது தொடர்பில் நாம் அதிகம் அக்கறை செலுத்துவோம்.

இதெல்லாம் பெரிய வீட்டுச் சமாச்சாரம். இதையெல்லாம் கண்டு கொள்ளக்கூடாது. ஒதே பரிந்தது

**வீரமா, துரோகமா வெல்லும் வியாசர் அவர்களே?**

தர்விந்-மந்துவில்

வெள்ளையருக்கு சிம்ம சொப்பனமாக விளங்கியவன் வீரபாண்டிய கட்டப்பொம்மன்.

எமது தேசத்தை ஆக்கிரமித்து வைத்திருந்து எமது வளங்களைக் கொள்ளை அடித்துக்கொண்டு நாம் உமக்கு வரி கட்ட வேண்டுமா என வெள்ளையனிடம் போர் புரிந்தவன் வீரபாண்டிய கட்டபொம்மன்.

அப்படிப்பட்ட வீரன் ஆயுத பூஜை அன்று ஆயுதமேந்தமாட்டான் என்று வெள்ளையருக்குப் போட்டுக்கொடுத்தவன் எட்டப்பன்.

வீரன் கட்டபொம்மனுக்கு இன்று வரை பெயர் உண்டு. துரோகி எட்டப்பனுக்கு சரித்திரத்தில் எந்த இடமும் இல்லை. இப்போது புரிகிறதா வீரமா, துரோகமா வெல்லும் என்று?

**இன்பம் என்பது எவ்வாறானது என்பதை விளக்கமுடியுமா வியாசரே?**

ராஜாங்கம்-மன்னார்

அது மனித மனங்களைப் பொறுத்தது. சிலருக்கு சத்தமாகப் பாட்டுக் கேட்பது பிடிக்கும். சிலருக்கு மெதுவாகப் பாட்டுக் கேட்பது சிலருக்கோ பாட்டுக் கேட்கவே பிடிக்காது.

சிலருக்கு பயற்றங்காய் கறியென்றால் மிகவும் பிடிக்கும். சிலருக்கோ அதைச் சாப்பிட்டால் நாரிப்பிடிப்பு, வயித்துக்குத்து வந்து விடும் என்பார்கள்.

இப்படி ஒருவருக்கு பிடித்த ஒன்று இன்னொருவருக்குப் பிடிக்காததாக இருக்கும்.

இதுவே இன்பம் என்பது. இது மனம் சார்ந்த விடயம் அவ்வளவே.

**ரக்பி வீரர் தாயூதீன் கொலைக்கான விசாரணை பாரபட்சம் இன்றி இருக்க வேண்டுமாமே?**

ரிதுஷ்- வதிரி

குத்தி முறிதல் என்று ஒரு சொல்லாடல் உண்டு. அதாவது ஒரு விடயத்தை கூறியதும் அது தொடர்பில் அதிகம் அலட்டிக் கொள்வதே அது.

ரக்பி வீரர் ஏன் இறந்தார் என்று விசாரனைகளின் பின் நீதிமன்றம் அறிவிக்கும். அதற்கு முன் ஏன் நாம் குத்தி முறிய வேண்டும்.

இந்த விடயத்தில் அரசாங்கத்தின் நகர்வுகள் யாருக்கோ பயத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. அந்தப் பயத்தின் வெளிப்பாடே இந்த வெளிப்படை விசாரனை வேண்டும் என்பது.



ரக்பி வீரர் தாயூதீன் கொலைக்கான விசாரணை பாரபட்சம் இன்றி இருக்க வேண்டுமாமே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் அதிரடி ஆட்டம் காணும் பாதாள உலகக் குழு



ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர
பத்திரிகையாளர்



மனித வாழ்க்கையின் மகிழ்ச்சியான தருணங்களில் அன்புக்குரியவர்கள் பரிசில்கள் தருவார்கள். ஏன் இங்கு இது என எண்ணலாம். போகப்போகப் புரியும். அப்படிக் கோடிப் பெறுமதியானப் பரிசைப் பெற்ற கேடி ஒருவர் இருப்பதான செய்தியை அறியமுடிந்தது. அந்தப் பரிசை பெற்றவர் வேறு யாருமல்ல, நன்கு பரீட்சையமான சம்பத் மனம்பேரி தான்.

**யார் இந்த சம்பத் மனம்பேரி?**

சுருக்கமாகச் சொன்னால் ஒரு காலத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த. ராஜபக்ஷவின் பாதுகாப்புப் பிரிவில் கன்ஸ்டபிள். அத்துடன் முன்னாள் பிரதேச சபை உறுப்பினரும்கூட. இலங்கையின் 75% பாதாள உலக நிழற் காரியங்களிலும் 50% மேற்பட்ட போதை விநியோகத்திலும் சம்மந்தப்பட்டிருந்து இந்தோனேசியாவில் கைதான ஹெகல் பத்திர பத்மே, பக்கோசமனக் கும்பலுடன் மிகநெருக்கமான தொடர்புகளைப் பேணியவர். மனம்பேரிக்கு அந்த பரிசு வண்டியை வழங்கிய பாரி வள்ளல் யார் என்று நீங்கள் அறிய ஆவலாக இருக்கலாம். சம்பத் மனம்பேரி ஒரு வீடு கட்டினாராம். அந்த வீட்டினுடைய திறப்பு விழாவிற்குப் பல முக்கிய அரசியல்வாதிகள் சென்று விதம்விதமான பரிசுப் பொருட்களை வழங்கியிருக்கிறார்கள். மனம்பேரியினுடைய வீட்டுக்கு வருகை தந்திருந்த ஒரு பிரபல அரசியல். பிரமுகருடைய வாகனம் அங்கே உள்ளவர்களின் கண்களை உறுத்தியிருக்கிறது.

மனம்பேரியின் வீட்டுக்குச் சமமான கவனக்குவிப்பை அந்த வாகனம் பெற்றுள்ளது. அந்த அளவுக்குச் சொகுசாய் இருந்திருக்கிறது அந்த வண்டி. இந்த அரசியல் பிரமுகர் பிரியாவிடை பெறும்போது, அந்த கார் சாவியை மனம்பேரியிடம் கொடுத்து, வைத்துக் கொள்ளப்பா என்றாராம். இதைப் பார்த்தவர்கள் அதிர்ச்சியடைந்தனராம். இந்த அரசியல்வாதி யார் என்பதை காலமும் நிகழ்வுகளும் இன்னும் சில நாட்களில் சொல்லிவிடும்.

**ஏ.எஸ்.பி. ரோஹான் ஒலுகல்ல விசாரணை**

ஹெகல் பத்திர பத்மேயிடம் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் சம்பத் மனம்பேரி கைது செய்யப்பட்டுப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் படி விளக்கமறியலில் மேல்மாகாண வடக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவில் வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகிறார். மனம்பேரியை விசாரிப்பது ஏ.எஸ்.பி. ரோஹான் ஒலுகல்ல. இன்று இலங்கையில் துணிச்சலான, மிடுக்கான, கீர்த்திமிகு பொலிஸ் அதிகாரிகளுள் ஒலுகல்லவும் ஒருவர். அவர்தான் இந்தோனேசியாவிலிருந்து ஹெகல் பத்திர பத்மே குழுவினரை அள்ளிக்கொண்டு இலங்கைக்கு வந்தவர்.

"சரி ஆரம்பிக்கலாமா?" என்று எல்லா அட்டூழியங்களுடனும் கூட இருந்த தோஸ்தான சம்பத் மனம்பேரியின் கைத்தொலைபேசிக்கு என்ன நடந்தது; என்றுதான் விசாரணை தொடங்கப்பட்டதாம். அண்மையில் மனம்பேரி பாவித்த கைத்தொலைபேசி பொலிஸாரிடம் சிக்கியது. ஆனால் அதன் பின்புலம் மனம்பேரியிடம் இருந்தது அவர் வருடக்கணக்கில் பாவித்த தொலைபேசி அல்ல. ஏ.எஸ்.பி. ரோஹான் ஒலுகல்ல "தொலைபேசிக்கு என்ன நடந்தது" என்று கேட்டு நின்றபோது, தான் வெள்ளவத்தையில் ஒரு ரயில் தண்டவாளத்தில் அதனை வைத்ததாகவும் ஒரு ரயில் அதன்மீது ஏறியதால் அது தூள் தூளாகச் சிதறியதாகவும் தனக்கு அந்த தொலைபேசியை வைத்த இடத்தைக் காட்ட முடியும் என்றும் மனம்பேரி சொல்லியிருக்கிறார். மித்தனியாவில் இருக்கும் மனம்பேரி குறிப்பாய் ஓர் இடத்தில் தங்கியிருக்கவில்லை என்பது புரிகிறது. இப்படிப் பல வருடங்களாய்ப் பாவித்த கைத்தொலைபேசி ஆயுளை இழந்துபோனதும், மித்தனியாவில் இருக்கும் அதாவது மனம்பேரி பேரழிவாயுதங்களை மறைத்து வைக்க உதவிபுரிந்த அவருடைய தோழி கொடுத்த கைத்தொலைபேசியைத் தான் பாவித்திருக்கிறார். அந்த கைத்தொலைபேசி தான் பொலிஸ் வசம் இருக்கின்றது. இதுதவிர மனம்பேரி பாவித்த நான்கு வங்கி அட்டைகளும் சுங்கத் திணைக்களத்திலிருந்த ஐஸ் இரசாயன மாதிரிகளை விடுவிக்கச் சமர்ப்பித்த ஆவணங்களும் அவற்றுக்குக் கட்டிய சிட்டைகளும் மனம்பேரியின் தோழி வீட்டில் கண்டுபிடிக்கப்பட்டன. மனம்பேரிக்குப் பாதுகாப்பும் தங்குமிடமும் கொடுத்ததுக்காக மின்சாரசபையில் வேலை பார்த்து வந்த ஒருவரைக் கைது செய்தது பொலிஸ்.

**சிக்கிய தொலைபேசிகள்**

மனம்பேரியின் கைதும் இன்று அவர் பொலிஸ் அதிகாரி ஒலுகல்லவிடம் ஒப்படைக்கப்பட்டதால் ஏற்பட்டிருக்கும் அதிர்வலைகளும் எக்கச்சக்கம். நாம் மிச்சம் மீதி வைக்காமல் இந்தப் பாதாள சாம்ராஜ்ஜியத்தை ஒழிப்போம். அனைவரையும் சட்டத்தின் பிடியில் நிறுத்துவோம் என்கிறார் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால. இந்த விசாரணைகள் வேகம் எடுத்திருப்பதற்கும் பல கைதுகள் நடப்பதற்கும் ஹெகல் பத்திர பத்மே குழுவினரிடமிருந்த 32 கையடக்கத் தொலைபேசிகள்தான் காரணமாம். இதில் சில தொலைபேசிகள் உயிர்ப்புடன் இருந்தன.

சிலவற்றில் உரையாடல்கள் அழிக்கப்பட்டு இருந்தன. மனம்பேரியும் ஹெகல் பத்தர பத்மே குழுவும் நடத்திய வாட்சப் குழு உரையாடல்கள் எல்லாம் வெட்ட வெளிச்சமானதும் இத்தொலைபேசிகளால் தான்.

மனம்பேரியினுடைய வீட்டில் புதைக்கப்பட்டிருந்த 50.000 கிலோ ஐஸ் இரசாயன மாதிரிகளை துறைமுகத்துக்குச் சென்று விடுவிக்குமாறு பக்கோசமான் இந்தோனேசியாவிலிருந்து அனுப்பிய தகவல்கள் எல்லாம் ஆதாரங்களுடன் வசமாய் சிக்கியதும் இதே தொலைபேசிகளால்தான். இந்தோனேசியாவில் ஒரு ஹோட்டலில் தங்கியிருந்த ஹெகல் பத்திர பத்மே தலைமையிலான ஒரு குழு ஹோட்டலை காலி செய்துவிட்டு அவசர அவசரமாய்த் தப்பி ஓடியபோது. ரோஹான் ஒலுகல்லவின் அணியும் இந்தோனேசியாவின் குற்றப்புலனாய்வுப் பிரிவினரும் 70கி.மீ துரத்திச் சென்றுதான் மடக்கிப் பிடித்திருக்கின்றார்கள்.



**காவற்துறைக்குள் கறுப்பு ஆடு**

ஹோட்டலிலேயே கைது செய்து அழைத்து வர வேண்டிய இந்த விவகாரத்தை அனாவசியமாக சிக்கலாக்கியது யார் என்ற கேள்விக்குப் பதில் ஒரு பொலிஸ் அதிகாரி என்பதுதான். ரோஹான் ஒலுகல்ல உங்களைத் தேடி வந்துகொண்டு இருக்கிறார் என்று பொலிஸ் திணைக்களத்திலிருந்த ஒரு கறுப்பு ஆடுதான் போட்டுக் கொடுத்திருக்கிறது. இங்கே ஒரு முக்கிய விடயத்தைக் குறிப்பிட வேண்டியிருக்கிறது. ரோஹான் ஒலுகல்லவின் இந்தோனேசியா ஒப்பரேன் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில பொலிஸ் உயர் ஆதிகாரிகள் மட்டுமே அறிந்திருந்த ஒன்று. ஆனால் தருண் எனப்படும் இலங்கை அரசு இப்போது தேடிக்கொண்டிருக்கும் - இப்போது வெளிநாடு ஒன்றில் வாழும் பாதாள உலகக் கேடியிடம் இந்தத் தகவலை வெளியிட்டிருக்கிறார் குறித்த பொலிஸ் அதிகாரி. அத்தோடு நின்றுவிடாமல் இன்ரப்போல் வழியாக இவர்கள் எந்த நாட்டில் இருந்தாலும் கைது செய்யப் பிறப்பிக்கப்பட்ட சிவப்பு ஆணை தொடர்பான ஆவணங்களை அனுப்பியிருக்கிறார் குறித்த பொலிஸ் அதிகாரி. இவை அனைத்தும் ஹெகல் பத்திர பத்மே தொலைபேசியில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறன.

**சம்பத் மனம்பேரி, ஒலுகல்லவிடம் வழங்கிய வாக்குமூலம்**

அதில் தாம் இதே தருணின் துணையுடன் படகு மூலம் இந்தியாவூடாக வேறோர் நாட்டுக்குச் செல்ல இருந்ததாகவும் சொல்லியிருந்தார். இந்தோனேசியாவில் இந்தக் கும்பல் கைதுசெய்யப்பட்ட செய்தி வந்ததும் மனம்பேரி குறித்த கொள்கலன்களை அவசரம் அவசரமாகப் புதைக்கத் தொடங்கினார். இந்தக் கைதுகள் இலங்கை அரசியலின் ஒரு திருப்பு முனை என்றும் சொல்லலாம். இல்லாவிட்டால் மனம்பேரி என்ற நபரும் மித்தனியாவில் வாழ்ந்து மடியும் சாமானியமான ஒருவர்போல் கடைசிவரை இருந்திருக்கும். வெள்ளை வெளேர் என்ற ஆடையில் புனிதவேடம் போடும் எட்டப்பர்களுடைய அசுத்தங்களும் காலத்தோடு கரைந்துபோயிருக்கும்.

**ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்காவின் உரை**

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கா நியூயோர்க்கில் வாழும் இலங்கையர்களை அண்மையில் சந்தித்தபோது ஆற்றிய உரை மிக முக்கியமான ஒன்று. அவர் பாதாள அரசின் பயங்கரத்தை விபரித்துச் சொல்லியிருந்தார். பேர்போன கிருமினல் ஒருவருக்கு மூன்று பாஸ்போட்டுகளை செய்து கொடுத்திருக்கிறார்கள். எப்படி இது சாத்தியம் என்று நீங்கள் நினைக்கலாம். புறக்கோட்டையில் புத்தகம் விற்கும் ஒருவரை அழைத்து வந்து குறித்த கிருமினலுக்குப் பதிலாகக் கை விரல் அடையாளத்தைப் பதித்திருக்கிறார்கள். நீதிமன்ற விசாரணைகளின்போது குறித்த குடிவரவு அதிகாரிகள் சொன்னது: குற்றவாளியின் முகமும் இந்தப் புத்தகக் கடைகாரரின் முகமும் ஒரே மாதிரி இருந்தது என்று. இதேபோல 2008ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட கார் ஒன்றை 2003ஆம் ஆண்டுக்குப் பதிவு செய்கிறது மோட்டார்த் திணைக்களம். கல்கிசையில் பொலிஸ் அதிகாரி ஒருவர் T-56 துப்பாக்கிகளைக் களவாடி விற்றுவிட்டு நாட்டை விட்டுத் தப்பி ஓடி இருக்கிறார்.

ஒரு பாதாள உலக தாதா தன்னை தடுப்புக் காவலிலிருந்து சிறைக்கு மாற்றப் போவதாகவும். இனி தான் சுதந்திர மனிதன் என்றும் சொல்லுகிறார். அதாவது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் தடுத்து

வைக்கப்பட்டிருக்கும்போது தன்னால் ஒன்றும் செய்யமுடியாது என்றும் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டால் தன்னால் செய்ய முடியாதது எதுவுமில்லை என்றுதான் அர்த்தம். மாத்தறை சிறைச்சாலையில் புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்ள இருந்ததால் பலர் வேறு சிறைக்கு மாற்றப்பட்டனர். அப்போது மாத்தறைச் சிறைச்சாலையில் ஏராளமான கைத்தொலைபேசிகள், சாஜர்கள், ரவுட்டர்களோடு பொலிஸார் கைதுசெய்தால் மட்டும் ஏழு கைவிலங்குகள் மீட்கப்பட்டன. இப்படித்தான் இராணுவ முகாமொன்றிலிருந்து T-56 துப்பாக்கிகள் 73 கடந்த காலத்தில் மாயமாகின். இவற்றில் 38 கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் 35 துப்பாக்கிகளைக் கண்டுபிடிக்கப்பட வேண்டியிருக்கின்றன.

கமாண்டோ ஒருவர் ஓர் இலட்சம் தோட்டாக்களைப் பாதாள உலகுக்குக் களவாக விற்பதற்குப் பேரம் பேசியிருக்கிறார். 350 விற்றபோது கைது செய்யப்பட்டிருக்கிறார். அவர்களுக்கு என்று பாஸ்போட் பெறுவதற்கு இமிக்ரேசன் அதிகாரிகள் இருக்கிறார்கள். ஆயுதங்கள் வழங்கக் காவற்துறைகளில் ஆட்கள் இருக்கிறார்கள். வாகனங்களைப் பதிவுசெய்து கொடுக்க மோட்டார் திணைக்களத்தில் அதிகாரிகள் இருக்கிறார்கள். சிலகாலம் இப்படியே நாடு போயிருந்தால் உத்தியோகப்பூர்வ அரசு கலைந்துபோய் இந்தப் பாதாள உலக அரசே ஆண்டிருக்கும். அவர்களின் நீதிமன்றங்களில்தான் வழக்குகளும் நடந்திருக்கும். நாம் இதை மாற்றிக் கொண்டிருக்கிறோம். இப்போது இவர்களின் இந்தக் காட்டு தர்பார் ஆட்டம் கண்டு இருக்கிறது. இன்னும் தோண்டத் தோண்ட இந்த நாசகாரத்தினுடைய பருமன் வெளிப்படும் என்று பலத்த கரகோசத்துக்கு மத்தியில் சொல்லிக்கொண்டு போனார் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கா.

இந்த கறுப்பு இராச்சியத்தை ஒரே நாளில் அழித்து ஒழிக்க முடியாது. ஆனால் ரோஹான் ஒலுகல்ல, ஷானி அபேசேகர போன்ற மிகச்சிறந்த பொலிஸ் அதிகாரிகளும் ஒட்டுமொத்த அரசு முறைமையும் இந்த வேகத்தில் இயங்கினால் இந்த பாதாள அரசின் எச்சசொச்சங்கள்களை எடுக்கப்பட்டு இலங்கையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஓர் அரசு மட்டுமே எஞ்சி இருக்கும் என்ற நம்பிக்கை உண்டு. (S.K. Kiruththikan வலையொளிப் பதிவிலிருந்தும் https://tamilwin.com, https://thaainews.com, https://www.dailymirror.lk, https://island.lk, https://www.newswire.lk, https://adaderana.lk/ https://www.newsfirst.lk, https://colombotimes.lk, பதிவிலிருந்தும் தொகுக்கப்பட்டது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வை மகிழ்வோடு கொண்டாடு!



மனிதர்களுக்குப் பிடிக்காதது எது? மரணம். சரி. மரணமே இல்லையென்றால் என்னவாகும்? ஊருக்கு வெளியே இருந்தார் ஒரு மகாஞானி. அந்த நாட்டு அரசன் அவரைத் தேடிப் போனான். ஞானியே எனக்கு மரணம் நேரக்கூடாது. அதற்கு ஏதாவது மருந்து இருக்கிறதா? என்று கேட்டான்.

மன்னா, அதோ இரண்டு மலைகள். அவற்றைக் கடந்தால் ஒரு ஏரி. அந்த நீரைக் குடித்தால், உனக்கு மரணமே நிகழாது.

அரசன், துறவியை வணங்கிவிட்டுப் புறப்பட்டான். மலைகளைக் கடந்தான். தெளிந்த நீரோடு ஏரி தெரிந்தது. ஏரிக்கரையருகே போனான். மண்டியிட்டு அமர்ந்து இரு கைகளாலும் நீரை அள்ளினான். அப்போது யாரோ முனகும் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தான். எலும்பும் தோலுமாக ஒரு முதியவர் வலியில் முனகிக் கொண்டிருந்தார். அரசன், அவரருகே போனான். யார் நீங்கள். உங்களுக்கு என்னாச்சு? என்று விசாரித்தான்.

சாகக் கூடாது என்பதற்காக இந்த ஏரித் தண்ணீரைக் குடித்துவிட்டேன். எனக்கு நூறு வயதானதும் என் மகன் என்னை வீட்டை விட்டு துரத்தி விட்டான். ஐம்பது வருடமாக இங்கேதான் இருக்கிறேன். என் மகன் செத்துப்போய் விட்டான். என் பேரனுக்கும் வயதாகிவிட்டது. சாப்பிடுவதையும் தண்ணீரைக் குடிப்பதையும்கூட நிறுத்திவிட்டேன். ஆனால், சாவு வரமாட்டேங்குது.

அரசனுக்குப் பொறிதட்டியது. துறவியிடம் ஓடினான். துறவியே... நான் என்றென்றும் இளமையுடன், மரணமும் நேராமல் இருக்க வேண்டும். அதற்கு வழி என்ன என்றான்?

துறவி, "அதே ஏரியைத் தாண்டியதும் ஒரு மரத்தில் பழுத்திருக்கும் மஞ்சள் நிறப் பழத்தை உண்டால், இளமையுடன் இருப்பாய்" என வழி காட்டினார். அரசன் அந்த மரத்தைத் தேடிப்போனான். அங்கே நான்கு இளைஞர்கள் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்கள் ஏன் சண்டையிடுகிறார்கள் என்று விசாரித்தான்.

நால்வருமே அந்த மரத்தின் பழத்தைச் சாப்பிட்டு இளமையோடு இருப்பவர்கள். ஒருவன் சொன்னான். பின்னே என்னாங்கய்யா. எனக்கு 250 வயதாகிறது. இதோ எங்கப்பா... 300 வயது... என் சொத்தை இன்னும் பிரித்துத் தர மாட்டேங்கிறாரு.

அவனுடைய தந்தை சொன்னார். இதோ என்னோட அப்பா... 350 வயது... அவரே எனக்கு சொத்தைப் பிரித்துக் கொடுக்கவில்லை. நான் எப்பிடிக் கொடுப்பேன்? அந்த 350 வயது இளைஞனோ, 400 வயதாகும் தன் தந்தையைக் கையைக் காட்டினான். இவர்களின் சண்டையைப் பொறுக்க முடியாமல் கிராம மக்கள் அவர்களை ஊரைவிட்டே விலக்கி வைத்திருந்தார்கள். அரசன் துறவியிடம் வந்தான். மரணத்தின் முக்கியத்துவத்தை எனக்கு உணர்த்தியதற்கு நன்றி மகானே... என்றான்.

மரணம் இருப்பதால்தான் இந்த உலகில் அன்பு இருக்கிறது. மரணத்தைப் பற்றிக் கவலைப் படுவதற்கு பதிலாக ஒவ்வொரு நாளையும், ஒவ்வொரு கணத்தையும் மகிழ்ச்சியோடு வாழ்ந்து கொண்டாடு மன்னா! என்றார் துறவி.

# ஆச்சி அறிவுரை



## யாழ்.போதனா வைத்தியசாலையில் சிறுவர் தினக் கொண்டாட்டம்

**பேராண்டி...**

ஒக்டோபர் - 01 சிறுவர் தினம். இந்த வருட சிறுவர் தினத்தின்ர தொனிப்பொருள் **“உலகை வழிநடத்த அன்பால் போசியுங்கள்”** எண்டுறதுதான் பேராண்டி.

சிறுவர் தினம் வருடா வருடம் கொண்டாடுகினம். அதிலை மாற்றமில்லை. ஆனால் சிறுவர் உரிமைகள் மீறப்பட்டுக் கொண்டு தான் இருக்குது. நாங்கள் சின்னனா இருக்கேக்குள்ள சிறுவர் துஷ்பிரயோகங்களைத் திரைப்படத்திலை பார்த்திட்டு “இப்பிடியும் நடக்குமா?” எண்டு நினைச்சம். ஆனால் திரைப்படத்திலை காட்டினத்தைவிட மோசமான செயல்கள் இப்ப இங்க நடக்குது.

அதிலும் சின்னப்பிள்ளையளைப் பிச்சை எடுக்க விடுற கொடுமையை முதலிலை நிறுத்தவேணும். அதுக்கு சின்னப்பிள்ளைகளை பிச்சை எடுக்க வைக்கிற தாய் - தகப்பன், சொந்தக்காரர்களை பிடிச்சு பத்துப் பதினைஞ்சு வருசமாவது ஜெயிலுக்குள்ள போடுற சட்டம் கொண்டு வரவேணும். அப்பதான் இந்தக் கொடுமைகள் நடக்காது.

சின்னஞ் சிறுசுகளுக்கு எவ்வளவு கனவுகள், ஏக்கங்கள் இருக்கும். அதுகளைப் புறந்தள்ளி அவர்களைக் கொடுமைப்படுத்தினா நரகம் நிச்சயம்.

பேராண்டி, சிறுவர் தினத்தண்டு யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை சிறுவர் நோயாளர் விடுதிக்குப் போக வேண்டிய சந்தர்ப்பம் வந்தது. ஆஸ்பத்திரி வாட்டை (விடுதி) சோடிச்சு ஒவ்வொரு கட்டிலிலும் பலூன் சோடனை செய்து அழகா இருந்துது.

அட நாங்கள் நிக்கிறது வாட்டோ? எண்டுற சந்தேகம் வந்திட்டு. அவ்வளவுக்கு வாட்டை அழகுபடுத்தியிருந்துது. அதோட, வாட்டிலை இருக்கிற சின்னப் பிள்ளைகளுக்கு விளையாட்டுச் சாமான்கள், சிற்றுண்டிகள் எண்டு அமர்க்களப் படுத்திட்டினம். இந்த கொண்டாட்டத்திலை நேர்ஸ்மார் காட்டின அக்கறை மிகப் பெரிசு. அதிலும் சகோதர மொழி பேசுற நேர்ஸ்மார் இன்னும் அக்கறையாய் செயல்பட்டினம்.

பேராண்டி, யாழ். போதனா வைத்தியசாலையில சிறுவர் பகுதியிலை வேலை செய்யிற டொக்டர்மாரின்ர சேவை அளப்பரியது. பிள்ளைகளோட செல்லம் காட்டி, விளையாடி, அவர்களை தூக்கிக் கொஞ்சி மருத்துவம் செய்யிறதைப் பார்க்க உண்மையிலையே எனக்கு கண்ணாலை கண்ணீர் பொல பொலவெண்டு கொட்டிச்சு.

தொட்டத்துக்கும் குறை சொல்லுற எங்கட சனம், நிறை கூறுறதுக்குப் பஞ்சிப்படுகினம். அவையின்ர சேவையைப் பாராட்டினால் தானே அவைக்கும் செய்யிற சேவைக்கு திருப்தி கிடைக்கும்.

பேராண்டி, இந்த முறை சிறுவர் தினம் 12ஆம் வார்டிலை மிகச் சிறப்பா, மன மகிழ்வா முடிஞ்சிது.

**ஆச்சி வருவா...**

மாவை.நா.கஜேந்திரன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

படம் : சுமைதாங்கி (1962)
பாடியவர்: P.b.ஸ்ரீனிவாஸ்
இசை : விஸ்வநாதன் ராமமூர்த்தி
பாடலாசிரியர் : கண்ணதாசன்



மனிதன் என்பவன் தெய்வமாகலாம்..
மனிதன் என்பவன் தெய்வமாகலாம்..

வாரிவாரி வழங்கும் போது வள்ளலாகலாம்
வாழைப் போல தன்னை தந்து தியாகியாகலாம்
உருதியோடு மெழுகு போல ஒளியை வீசலாம்

மனிதன் என்பவன் தெய்வமாகலாம்..
தெய்வமாகலாம்..

ஊருக்கென்று வாழ்ந்த நெஞ்சம் சிலைகளாகலாம்
உறவுக்கென்று விரிந்த உள்ளம் மலர்களாகலாம்
ஊருக்கென்று வாழ்ந்த நெஞ்சம் சிலைகளாகலாம்
உறவுக்கென்று விரிந்த உள்ளம் மலர்களாகலாம்

யாருக்கென்று அழுதபோதும் தலைவனாகலாம்
மனம்! மனம்! அது கோவிலாகலாம்..

மனிதன் என்பவன் தெய்வமாகலாம்
மனிதன் என்பவன் தெய்வமாகலாம்
மனிதன் என்பவன் தெய்வமாகலாம்..

மனம் இருந்தால் பறவை கூட்டில்
மான்கள் வாழலாம்
வழியிருந்தால் கடுகுக்குள்ளே
மலையைக் காணலாம்
மனம் இருந்தால் பறவை கூட்டில்
மான்கள் வாழலாம்
வழியிருந்தால் கடுகுக்குள்ளே
மலையைக் காணலாம்

துணிந்துவிட்டால் தலையில் எந்த
சுமையும் தாங்கலாம்
குணம்! குணம்! அது கோவிலாகலாம்...

மனிதன் என்பவன் தெய்வமாகலாம்
வாரி வாரி வழங்கும் போது வள்ளலாகலாம்
வாழை போல தன்னை தந்து தியாகியாகலாம்
உறுதியோடு மெழுகு போல ஒளியை வீசலாம்

மனிதன் என்பவன் தெய்வமாகலாம்..
தெய்வமாகலாம்..

# விஜயின் 'கும்பல்' அரசியல்! கோட்டை விட்ட காவல்துறை! அலட்சியத்தால் பறிபோன உயிர்கள்!

தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜயின் கரூர் சுற்றுப்பயணத்தில் கட்டுக்கடங்காத கூட்ட நெரிசலில் சிக்கி, ஒன்றரை வயது குழந்தை முதல் 65 வயது பெண்மணி வரை இதுவரையில் 41 பேர் பலியாகியிருக்கிறார்கள். மரண ஓலத்தால் கதிகலங்கிப்போயிருக்கிறது கரூர். தமிழக அரசியல் வரலாற்றில், செப்ரெம்பர் 27 ஆம் திகதி, ஒரு கறுப்பு நாள்!

இந்த விவகாரம் தொடர்பாக விசாரிக்க, ஓய்வு பெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் ஒருநபர் ஆணையத்தை அமைத்திருக்கும் முதல்வர் ஸ்டாலின், கரூருக்கே நேரில் சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் சொன்னதோடு, இறந்தவர்களுக்கு ரூ.10 லட்சம் நிவாரணமும் அறிவித்திருக்கிறார். அதேசமயம், 'இந்த விவகாரத்தில் சதி நடந்திருக்கிறது' என நீதிமன்றப்படியேறியிருக்கிறது த.வெ.க. 'இதயம் நொறுங்கிப் போயிருக்கிறேன்...' என்று தன்னுடைய எக்ஸ் தளத்தில் பதிவிட்டிருக்கும் விஜய், இறந்தவர்களுக்கு ரூ.20 இலட்சம் நிவாரண நிதியாக அறிவித்திருக்கிறார்.

ஒட்டுமொத்த தேசத்தையுமே உலுக்கியிருக்கும் இக்கோர மரணங்கள், த.வெ.க மற்றும் காவல் துறையின் அலட்சிய நடவடிக்கைகளை வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கின்றன. பெயரளவுக்குக்கூடக் கட்டமைப்பு இல்லாத த.வெ.க-வால், விஜயின் சுற்றுப் பயண நிகழ்ச்சியை ஒழுங்காகச் செயற்படுத்த முடியவில்லை என்பது அம்பலமாகியிருக்கிறது. அவர்கள் கேட்ட இடத்தைக் கொடுக்க மறுத்ததில் தொடங்கி கூட்டத்தைக் கட்டுப்படுத்துவது வரையில் சொதப்பியிருக்கிறது காவல்துறை. உளவுத்துறையின் சறுக்கல்களும் விமர்சனங்களுக்கு உள்ளாகியிருக்கின்றன.


## என்ன நடந்தது கரூரில்?

மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியை நடத்துவதற்காக, கரூரிலுள்ள லைட்ஹவுஸ் கார்னர் ரவுண்டானா அல்லது உழவர் சந்தை ஆகிய பகுதிகளில் ஏதேனும் ஓர் இடத்தைக் கேட்டு, காவல்துறையிடம் த.வெ.க-வினர் அனுமதிக் கோரினர். 'பத்தாயிரம் பேர் வரை வருவார்கள் என எதிர்பார்க்கிறோம். ஆனாலும், 60,000 பேர் நிற்கக்கூடிய வகையிலான இடத்தைத் தர வேண்டும்' எனக் கடிதத்தில் கோரியிருந்தனர். ஆனால், அணுகுசாலைகள் இல்லாத வேலு சாமிபுரத்தை இறுதி செய்தது பொலிஸ். அதுவும், நிகழ்வுக்கு முதல் நாள்தான் அனுமதியும் வழங்கப்பட்டது. செப். 27 ஆம் திகதி தனி விமானம் மூலமாக திருச்சிக்கு வந்த விஜய், மதியம் 2:30 மணிக்குத்தான் நாமக்கல் பொயின்ட்டுக்கே வந்தடைந்தார். த.வெ.க-வினரின் அறிவிப்பின்படி பார்த்தால், காலை 8:45 மணிக்கெல்லாம் விஜய் நாமக்கல் பொயின்ட்டுக்கு வந்திருக்க வேண்டும். ஆனால், கிட்டத்தட்ட ஐந்து மணி நேரம் தாமதமாகத்தான் வந்தார் விஜய்.

நாமக்கல் போலவே கரூருக்கும் சரியான நேரத்துக்கு வரவில்லை விஜய். அறிவித்திருந்தபடி, மதியம் 12:30 மணிக்கெல்லாம் வேலுசாமிபுரம் பாயின்ட்டுக்கு விஜய் வந்திருக்க வேண்டும். கரூர் - கோவை பைபாஸ் ரவுண் டானா பகுதிக்கு அவர் வந்து சேரவே மாலை 6 மணிக்கு மேலானது. அங்கிருந்து, ஒரு கி.மீட்டர் தூரத்திலுள்ள வேலு சாமிபுரத்தை வந்தடைய மேலும் ஒரு மணிநேரம் ஆனது.

## "ஐயோ, மூச்சுவிட முடியலையே..." யாருக்கும் கேட்காத கூக்குரல்!

வேலுசாமிபுரத்துக்குள் விஜய் என்ட்ரி ஆகும் போதே, [illegible]ராட்சி



தெருவிளக்குகள் அணைந்தன. விஜயின் வாகனத்தோடு, ஒரு பெரும்படையும் சேர்ந்தே உள்ளே வந்தது. ஏற்கனவே குழுமியிருந்த கூட்டத்துக்குள், புதிதாக வந்தவர்கள் நெருக்க, கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு நெரிசல் உருவானது. விஜய்யின் வாகனத்தின் வலதுபுறத்தில், கட்டடத்தின் தகரக் கூரைமீதும், அதையொட்டியிருந்த கீற்றுக்கூரை, மரத்தின் மீதும் த.வெ.க தொண்டர்கள் ஏறினார்கள். பாரம் தாங்காமல் கூரையும், மரக்கிளையும் உடைந்து, கீழே நின்ற பெண்கள், இளைஞர்கள், சிறுவர்கள்மீது விழ... ஒருவர்மீது ஒருவர் விழுந்து பெரும் களேபரம் உருவானது. உயிர் தப்பிக்க ஒருவரை ஒருவர் தள்ளிக்கொண்டு முண்டினர். அடியில் சிக்கிக்கொண்ட பலரும், 'ஐயோ மூச்சுவிட முடியலையே... எங்களைக் காப்பாத்துங்க...' என்று கூக்குரலிட்டனர்.

தள்ளுமுள்ளுவில் ஃபோகஸ் லைட்டுக்கான மின்சாரம் கட் ஆனது. கும்மிருட்டில், யார்மீது யார் விழுந்தார்கள் என்பதுகூடத் தெரியவில்லை. எங்கு பார்த்தாலும் ஒரே கூக்குரல்...

கூட்டத்துக்குள் பலர் மயக்கமடைந்து சரிவதை அறிந்த த.வெ.க-வினர், ஆம்புலன்ஸைப் பார்த்து, விலகி வழிவிடுமாறு விஜயே மைக்கில் குறிப்பிட்டார். நிலைமை கட்டுக்கடங்காமல் போகவும், பத்தே நிமிடங்களில் பேச்சை முடித்துக்கொண்டு கிளம்பினார் விஜய். கூட்டமும் மெல்ல மெல்லக் கலையவும்தான், கூட்ட நெரிசலில் சிக்கிப் பலரும் மயக்கமுற்று கீழே விழுந்து கிடப்பது தெரியவந்தது.

## அலட்சியத்தால் பறிபோன 41 உயிர்கள்!

41 உயிர்கள் பலியானதற்கு, இரு தரப்பின் அலட்சியமும்தான் முக்கியக் காரணம். 'தன்னைப் பார்க்க வந்த ஏராளமான அப்பாவிகள் இறந்து போயிருக்கிறார்கள்' என்கிற செய்தியை அறிந்ததும், முதல் ஆளாக பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்திருக்க வேண்டிய விஜய், குறைந்தபட்சம் திருச்சியில்கூட தங்கியிருக்காமல், உடனே சென்னைக்குப் புறப் பட்டது பெரும் விமர்சனத்துக்கு உள்ளானது.

விமான நிலையத்தில் செய்தியாளர்களைச் சந்தித்து விளக்கமோ, இரங்கலோ தெரிவிக்காமல் சென்றதும்... ஊரே இரங்கல் தெரிவித்த பின்னர், மிகத் தாமதமாக விஜய் இரங்கல் தெரிவித்ததும்... நிவாரணத்தை அறிவிப்பதிலும் தாமதம் செய்ததும்... 'விஜயால் சொந்தமாக எந்த முடிவையும் எடுக்க முடிவதில்லை...' என்ற விமர்சனங்களுக்கு வலு சேர்த்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிய கிரிக்கெட்டில் அரசியல்!



செப்ரெம்பர் 28, 2025. டுபாய் மைதானத்தின் செயற்கை சூரியன்களின் கீழ் இந்திய அணி நீலக்கடலென ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தது. ஆனால் அந்த ஆனந்தத்தில் ஓர் அந்நியமான அமைதி கலந்திருந்தது: மேடை இருந்தது, மகிழ்ச்சியின் விளிம்பில் வீரர்கள் இருந்தார்கள், காதைப் பிளக்கும் இசை இருந்தது, வானிலிருந்து வண்ணக் காகிதங்கள் பூக்களாய் உதிர்ந்தன. ஆனால், இத்தனை கொண்டாட்டங்களுக்கும் அர்த்தம் சேர்க்க வேண்டிய மகுடத்தின் மையக்கல், அந்த ஆசியக் கோப்பை மட்டும் அங்கே இல்லை. இதுதான் 2025 ஆசியக் கோப்பையின் விசித்திரமான, விவாதிக்கப்பட வேண்டிய இறுதிப் பக்கங்கள்.




ஒருபக்கம், பரம எதிரி பாகிஸ்தானை இறுதிப்போட்டி உட்பட மும்முறை சாய்த்து, ஒன்பதாவது முறையாக ஆசியாவின் கிரிக்கெட் சக்கரவர்த்தியாக இந்தியா முடிசூடியது. மறுபக்கம், ஆசிய கிரிக்கெட் கவுன்சிலின் (ACC) தலைவரும், பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தின் (PCB) தலைவருமான மொஹ்சின் நக்வியின் கரங்களால் கோப்பையைப் பெற இந்திய அணி மறுக்க, அவர் கோப்பை மற்றும் பதக்கங்களை எடுத்துக்கொண்டு சென்றுவிட்டதாகக் கூறப்படுகிறது.

"என்னடா இது! சின்னப்புள்ள தனமா இருக்கே" என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் இந்த நிகழ்வுதான் விளையாட்டு உலகில் ஒரு புதிய அரசியல் அத்தியாயத்தைத் தொடங்கி வைத்திருக்கிறது.

"என் கிரிக்கெட் வாழ்க்கையில், ஒரு சம்பியன் அணிக்கு, அதுவும் இப்படி உழைத்து வென்ற அணிக்குக் கோப்பை மறுக்கப்படுவதைப் பார்த்ததே இல்லை," என்ற இந்திய கேப்டன் சூர்யகுமார் யாதவின் வார்த்தைகளில் ஆதங்கத்தின் அனல் தெறிந்தது. பாகிஸ்தான் கப்டன் சல்மான் ஆகாவின் பார்வையில், "இது கிரிக்கெட்டுக்குச் செய்யப்பட்ட அவமரியாதை."

கைகுலுக்கல்களைத் தவிர்த்த கரங்கள் முதல், குழு புகைப்படம் எடுக்க பாகிஸ்தான் செல்லாதது, பாகிஸ்தான் அணி இல்லாத ஜெர்சி, கோப்பையைப் பெறப் புறக்கணிப்பவரை இந்தத் தொடர் முழுவதும் மட்டைகளின் சத்தத்தை விட, சர்ச்சைகளின் சத்தமே அதிகமாக ஒலித்தது.

சர்ச்சையின் புகைமூட்டம் ஒரு புறம் இருந்தாலும், ஆடுகளத்தில் இந்தியாவின் ஆதிக்கம் உச்சிவெயில் சூரியனைப் போல் பிரகாசித்தது. தொடர் முழுவதும் தோல்வியே சந்திக்காத ஒரே அணியாக வலம் வந்த இந்தியா, பாகிஸ்தானுக்கு எதிராகப் பெற்ற மூன்று வெற்றிகள், அதன் தந்திரோபாய மேலாதிக்கத்துக்கான சான்றிதழ்கள்.

களத்தில் நடந்த ஆட்டத்தை விட, திரைக்குப் பின்னால் நடந்த அதிகார ஆட்டமே இந்தத் தொடரின் தலைவிதியை எழுதியது. 1986இல் அரசியல் காரணங்களுக்காக இந்தியா விலகியதில் தொடங்கியது இந்த நாடகம். 1997இல் இலங்கையில் நடந்த கோப்பை இறுதிப்போட்டிக்குப் பிந்தைய நிகழ்வுகள், 2018இல் இருதரப்பு உறவின் நிழல் தொடரின் மீது படிந்தது வரை, ஆசியக் கோப்பை எப்போதும் கிரிக்கெட்டை விட அரசியலையே அதிகம் பிரதிபலித்திருக்கிறது.

1978இல் இரு நாடுகளுக்கிடையே உறவுகள் மீண்டெழுந்தபோது அதை நாம் கொண்டாடினோம். 1999 கார்கில் போரின்போது ஷார்ஜாவில் விளையாடியபோது இதயத்தில் கல்லுடன் வர்ணித்தோம். 2008 மும்பை தாக்குதலுக்குப் பிறகு பாகிஸ்தானுக்கான இந்தியப் பயணம் ரத்து செய்யப்பட்டபோது, கிரிக்கெட்டின் சவப்பெட்டியில் கடைசி ஆணி அறையப்பட்டுவிட்டதோ என அஞ்சினோம். 2023 உலகக் கோப்பைக்கு பாகிஸ்தான் இந்தியா வருமா வராதா என்ற விவாதங்கள் வரை, ஒவ்வொரு தொடரும் ஒரு அரசியல் அக்னிப்பரீட்சைதான். 2025இல் நடந்ததும் இந்த நீண்ட தொடர்நாடகத்தின் ஒரு காட்சி மட்டுமே.

ஒரு காலத்தில் ஆசியாவின் கிரிக்கெட் சிம்மாசனத்தில் அமர்ந்திருந்த இலங்கை, இன்று உள்நாட்டுக் குழப்பங்களால் ஒரு சரிந்து கொண்டிருக்கும் சக்தியாகத் தொடரில் கலந்து கொண்டது. வங்கதேசம், என்றென்றைக்குமான 'underdog' ஆகவே நீடிக்கிறது. ஆப்கானிஸ்தான் எனும் புதிய சக்தி, அவ்வப்போது சில ஆச்சரியங்களைத் தந்தாலும், இந்த இரு பெரும் சக்திகளின் அதிகார விளையாட்டில் அவர்கள் பார்வையாளர்கள் மட்டுமே. ஆசிய கிரிக்கெட் என்பது, இந்தியா - பாகிஸ்தான் என்ற இரு துருவங்களுக்கு இடையில் சிக்கித் தவிக்கும் ஒரு புவிசார் அரசியல் நாடகம் என்பதை இந்தத் தொடர் மீண்டும் நிரூபித்தது.

# தெளிவே என் சிந்தனையுள்... 30

விவசாயி ஒருவர் தனது விவசாய நிலத்தை உழுது கொண்டிருந்தார். அப்போது கலப்பையில் ஏதோ சத்தம் கேட்கவே, என்ன என்று பார்த்தார்.

அது பழங்காலத்து பொக்கிஷத் தங்கச்சிலை ஒன்று. அதை எடுத்துக்கொண்டு வீட்டிற்கு வந்து மனைவியிடம் கொடுத்து, நடந்ததைக் கூறினார்.

எங்கள் கஷ்டம் நீங்கப்போகிறது. இனி நாங்கள் விவசாய நிலத்தில் கஷ்டப்படத் தேவையில்லை எனக் கூறினாள் மனைவி.

இந்தச் சிலையை விற்றுப் பெரிய மாளிகை கட்டலாம். நிறையச் சொத்துக்களை வாங்கலாம் என மகிழ்ந்தனர் பிள்ளைகள்.

ஆனால் விவசாயியோ வீட்டின் மூலையில் மிகவும் கவலையுடன் இருந்தார். அதைக் கண்ட மனைவி. தங்கச் சிலை கிடைத்திருக்கிறது. பிறகேன் சோகமாக இருக்கிறீர்கள் என்றாள்.

அதற்கு விவசாயி, இதேபோல ஏழு தங்கச் சிலைகள் மண்ணில் புதைந்திருப்பதாக என் தாத்தா அடிக்கடி சொல்லுவார்.

இப்போது எனக்கு ஒன்று கிடைத்துவிட்டது. மிகுதி ஆறு சிலைகளும் எங்கிருக்கிறதோ? அதை எப்படி கண்டுபிடிப்பது? என்பதை நினைக்கவே கவலையாக இருக்கிறது என்றார் அவர்.

**அன்பானவர்களே!**

எம்மில் பலரின் நிலையும் இதுவே கிடைத்ததை வைத்து மகிழ்வாய் இருக்க மறந்து, கிடைக்காத பொருளுக்காக ஏங்கி மகிழ்ச்சியைத் தொலைத்துவிட்டு, சதா அதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பார்கள்.



குருஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# களம் பல கண்ட யாழ். கோட்டை

71

## செங்கை ஆழியான்

கோட்டையின் கிழக்கு, மேற்கு, வடக்குப்பகுதிகளில் எந்தவிதமான இராணுவ நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாத ஸ்ரீலங்கா இராணுவம், கோட்டைக்குத் தென்புறமாகப் பரந்திருந்த மண்டைதீவு, வேலணைத் தீவு ஆகிய இரு நிலப் பரப்புக்களின் சமதரையையும், நன்கு அரண் செய்யப்படாத நிலமையையும் தனக்குச் சாதகமாக்கிக்கொள்ள முயன்றது. அதனால் தனது இராணுவ நடவடிக்கையைக் காரைநகரிலிருந்து (காரைதீவு) ஆரம்பித்தது.

*22, ஆகஸ்ட், 1990.*

காரைநகர் கடற்படை முகாமிலிருந்து கடற்படையினர் வெளியேறத் தயாரானார்கள். அன்று அதிகாலையே ஹெலிகொப்டர்களும் சீபிளேன்களும் காரைதீவை வட்டமிடத் தொடங்கின. தாழப்பறந்து நோட்டமிட்டன சிறிது வேளையில் ஹெலிக்கொப்டர்கள் நிலத்தை நோக்கிச் சுடத்தொடங்கின.

காரைநகர்க் கடற்படை முகாமிற்கு அருகில் வாழ்ந்த மக்கள் இடம்பெயரத் தொடங்கினர். அதேவேளை ஊர்காவற்றுறைக் கடலில் கடற்படைக்கப்பல் ஒன்று விசைப்படகுகளில் இராணுவத் தினரை ஏற்றி ஊர்காவற்றுரையிலும் உருண்டி முனையிலும் குவிக்கத் தொடங்கியது. ஹெலி மூலம் ஊர்காவற்றுறையில் இராணுவம் இறக்கப்பட்டது. கண்மூடித்தனமாகச் சுட்டபடி இராணுவம் முன்னேறி நிலை கொண்டது. பொன்னாலை ஊடாகப் புலிகளுக்கு உதவிகள் வராது தடுப்பதற்காக ஸ்ரீலங்கா இராணுவத்தினர் காரைநகரில் சிலவிடங்களில் முன்னேறிக் காவலரண்களை அமைத்துக்கொண்டனர். கடற்படை முகாமிலிருந்து வரும் வழியில் மக்கள் பலரை கைது செய்து தம்முடன் அழைத்து வந்தனர். கைதுசெய்த மக்களை தம்முன் மனிதக்கேடயமாகச் செல்லவிட்டு அவர்கள் முன்னேறி வந்தனர்.

ஊர்காவற்றுறையில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் முகாமிட்டனர். முப்பது வரையிலான கனரக வாகனங்கள் அவ்விடத்தில் குவிக்கப்பட்டன. ஊர்காவற்றுறையைவிட்டு மக்கள் வெளியேறி அயற் கிராமங்களுக்கு இடம் பெயரத்தொடங்கினர். "விமானத்தாக்குதல்களும் ஹெலிச் சூடுகளும் ஷெல் தாக்குதல்களும் ஊர்காவற்றுறையிலிருந்து மேற்கொள்ளப்பட்டன. 24 ஆந் திகதி ஸ்ரீலங்கா இராணுவம் மண்டை தீவை இலக்காக வைத்து முன்னேறத் தொடங்கியது. ஊர்காவற்றுறையிலிருந்து இருபிரிவுகளாசுப் பிரிந்து வடக்கு வீதி வழியாகவும் தெற்கு வீதி வழியாகவும் விமானங்கள் குண்டுவீசிப் பாதுகாப்பளிக்க இராணுவம் முன்னேறியது. வழிகளில் அழிவுகளைச் செய்தபடி அராலிச்சந்தி, மண்கும்பான் சந்தி.

(தொடரும்....)

# பேய்த் திட்டம்




171

# கடற்புறா

அக்ரமந்திரத்தில் நுழைந்த அவள் எப்படி மறைந்தாள் என்பது பெரும் மூடுமந்திரமாய் இருந்தது.

### பேய்த் திட்டம்

அக்ஷயமுனைக் கோட்டைக்குள்ளும் கோட்டைக்குப் புறம்பேயிருந்த கடற்கரைப் பகுதியிலும் சுதந்திரப் பறவையாக உலவிச் சிரித்து விளையாடி வந்த மஞ்சளழகி திடீரென இரண்டு மூன்று நாட்கள் எந்த இடத்திலும் தென்படாதிருக்கவே நகர மக்கள் முதலில் அவளுக்கு ஏதேனும் உடல் நலக் குறைவோ என்று அச்சமுற்றார்கள்.

ஆனால் பலவர்மன் மாளிகைக் காவலரில் சிலர் அப்படியேதுமில்லையென்றும் மாளிகையிலேயே மஞ்சளழகி காணப்படவில்லையென்றும் அரசல் புரசலாக விடயத்தை வெளியிட்டுவிடவே, அவள் ஏன் மறைந்தாள்? எப்படி மறைந்தாள்? எங்கு போனாள்? என்ன ஆனாள் என்பதைப் பற்றி இல்லாத பொல்லாத வதந்திகள் பலவும் நகரத்துக்குள்ளும் புறம்பேயும் உலாவலாயின. இரண்டு நாட்களுக்கு முன்பு கடல் புறாவை நோக்கிச் சென்று அதன் தளத்திலேறியதைப் பார்த்த கொள்ளையர் துணைவிகள் அவளை இளையபல்லவன் தான் எங்கோ மறைத்து விட்டானென்று பேசிக்கொண்டார்கள்.

இளையபல்லவனையும் மஞ்சளழகியையும் நெருங்கிய நிலையில் கடற்கரையில் ஏற்கெனவே பார்த்துள்ள கொள்ளையர் துணைமாதர், அவன் அறையில் கள்ளக் காதலின் முடிவையே எண்ணினாலும் அவளை இளையபல்லவன் எங்குதான் மறைத்திருக்க முடியும் என்று பரஸ்பரம் கேட்டுக் கொண்டனர்.

இந்த வதந்தி ஊருக்குள் பரவியும் அதை நகர மக்கள் மட்டும் நம்பவில்லை. மஞ்சளழகியைத் திருமணம் செய்து கொடுக்கவே பலவர்மன் சர்வசித்தமாயிருக்க, மஞ்சளழகியைச் சோழர் படைத்தலைவன் கள்ளத்தனமாக மறைக்க வேண்டிய அவசியமில்லையென்று நகரமக்கள் வாதாடினர். தவிர, கடல் புறாவைச் சேர்ந்த மாலுமிகள் ஓரிருவரை விசாரித்ததில், மஞ்சளழகி மாலையில் கடல் புறாவின் தளத்துக்கு வந்ததும் மரக்கலத் தலைவனுக்கான முகப்பு அறையில் (அக்ரமந்திரத்தில்) நுழைந்ததும் உண்மையே என்றாலும் இரவு சற்று ஏறியதுமே அவனை இளையபல்லவன் கோட்டைக்கு அழைத்துச் சென்று விட்டதாகவும் செய்தி கிடைக்கவே, "மஞ்சளழகி மறைந் திருந்தால் மாளிகைக்கு வந்த பின்புதான் மறைந்திருக்க வேண்டும்," என்று நகர காவலர் முடிவுக்கு வந்தனர்.


இப்படியாக வதந்திகள் பல கிளம்பினாலும் அந்த வதந்திகள் சுட்டிக் காட்டியது இருவரைத்தான். ஒருவன் இளையபல்லவன், மற்றவன் பலவர்மன். ஒருவன் உயிர்க் காதலன், இன்னொருவன் உயிரைவிட அவளை அதிகமாக நேசித்த தந்தை.

அந்த இருவரும் அவளுக்கு எந்தவிதத் தீங்கையும் விளைவிக்க மாட்டார்களென்றும், அப்படியானால் என்ன செய்திருக்கிறார்களென்றும் பலபல விதமாகப் பேச்சுகளும் கேள்விகளும் அக்ஷய முனையில் எழுந்தன. இத்தனை பேச்சுகளிலும் மற்றது எது தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் ஒன்று நிச்சயமாகத் தெரிந்தது. மக்கள் அவளைப் பற்றிப் பெருங்கவலை கொண்டிருந்தார்கள் என்பது தான் அது.

மக்களும் கொள்ளை மாதரும் மாலுமிகளும் நகரக் காவலரும் கவலை கொண்டு தவித்தாலும் அவளைப் பற்றிப் பலவர்மனோ இளையபல்லவனோ, கவலை ஏதும் காட்டவில்லை. இளையபல்லவன் கவலை காட்டாததன் காரணம் மக்களுக்குப் புரிந்திருந்தது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகநூல் தரிசனம்



மைக்கல் ஜாக்சன் 150 ஆண்டுகள் வாழ வேண்டும் என்று கனவு கண்டார்.

அவரது தலைமுடி முதல் விரல் நகங்கள் வரை தினமும் பரிசோதிக்க 12 மருத்துவர்களை வீட்டில் நியமித்திருந்தார்.

ஒவ்வொரு வேளை உணவுக்கு முன்பும் ஆய்வகத்தில் அந்த உணவு சோதிக்கப்படும்.

படுக்கையறையில் ஆக்ஸிஜனை ஒழுங்குபடுத்தும் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

அவருக்காக உடல் உறுப்புகளை தானம் செய்ய நன்கொடையாளர்கள் தயாராக இருந்தனர். அவர்களும் சிறப்பு மருத்துவர் குழுவினரின் கண்காணிப்பில் இருந்தனர்.

மருத்துவர்கள் ஆலோசனையின்றி ஓர் அடிகூட அவர் எடுத்து வைப்பதில்லை.

இவை எல்லாம் 150 ஆண்டுகள் உயிர் வாழ வேண்டும் என்ற கனவை நனவாக்க அவர் செய்திருந்த முன்னேற்பாடுகள்.

**ஆனால்...**

2009, ஜூன் 25 அன்று 50ஆவது வயதில் திடீரென அவரது இதயம் வேலை செய்ய மறுத்தது.

12 மருத்துவர்கள் சோதித்தனர். உடனடியாக லாஸ் ஏஞ்சல்ஸ், கலிஃபோர்னியாவில் இருந்து மருத்துவ நிபுணர்கள் வரவழைக்கப்பட்டனர்.

எப்பயனும் ஏற்படவில்லை. இத்தனை ஏற்பாடுகளையும் மீறி மரணத்தின் பிடியில் அவர் அகப்பட்டார்.

அவரது மரணம்தான் அவரது கடைசி நேரடி நிகழ்ச்சி. அதை உலகம் முழுவதும் 2.5 மில்லியன் மக்கள் நேரலையில் பார்த்தனர். அது கொண்டாட்ட நிகழ்ச்சி அல்ல. மாறாக அதுவொரு பிரியாவிடைப் பயணம்.

மைக்கல் ஜாக்சன் மரணத்துக்கு சவால்விட முயன்றார். ஆனால் மரணமோ அவருக்கு சவால் விட்டது.

**பாடம் என்ன..?**

உண்மையில் இந்த உலகில் நமக்குச் சொந்தமானது என்று எதுவுமில்லை. ஏன்..? நம் உயிர்கள்கூட நமக்குச் சொந்தமானவை அல்ல.

பணம் சேர்ப்பது பாவமல்ல! ஆனால் பணம் வைத்திருப்பதால் மட்டுமே பணக்காரர் என்று நினைப்பதுதான் பாவம்.

மனநிறைவு, திருப்தி, ஆரோக்கியம், நன்றியுணர்வு ஆகியவைதான் உண்மையான செல்வம்.

எதுவரை வாழ்கிறோமோ அதுவரை பிறருக்கு பயன்தரும் வகையில் வாழ்வோம்.





## வினோதினி வைத்தியநாதன் தனது டுவிட்டர் பக்கத்தில் கூறியிருப்பதாவது:

சினிமா! சினிமா! எங்கும் சினிமா! எதிலும் சினிமா! இனி யாராவது என் முன் சினிமாக்காரர்களிடம் செல்பி எடுக்கிறேன், அது எடுக்கிறேன் என்று வாங்க... செருப்பைக் கழட்டி அடிப்பேன்!

குழந்தையில்லாமல் இன்றைக்கு எத்தனை பேர் ஐவிஎப் சென்டரில் போய் கஷ்டப்படுகிறார்கள். சாதாரணமாக உங்கள் குழந்தையை பெரிய கூட்டத்திற்கு கூட்டிட்டு போவதும், நடிகர் உங்கள் குழந்தைக்கு பெயரை வைக்க வேண்டும் என்று அலையிறதும்...

உங்கள் குழந்தைக்கு உங்கள் முன்னோர்கள் பெயரோ உங்கள் குலசாமி பெயரோ வையுங்கள். அது என்ன நடிகர் உங்கள் குழந்தைக்கு பெயர் வைக்க வேண்டும் என்பது வெறி... படிப்பு மட்டும் இருந்தால் போதுமா... சுயமரியாதையில்லை... பகுத்தறிவு இல்லை... சினிமாவில் நடிக்க நாங்கள் காசு வாங்குகிறோம்... அதைப் பார்க்க நீங்கள் காசு செலவழிக்கிறீர்கள்... இந்த வித்தியாசம் புரியவில்லையா? ஒருநாள் காலையிலே நேரத்திற்கு எழுந்து உங்கள் அம்மாவுக்கோ அக்காவுக்கோ ஒரு வாய் காபி போட்டு கொடுத்து இருப்பீர்களா...?

வடக்கன் வந்து நம் வேலையெல்லாம் செய்கிறானா? எப்படி வராமல் இருப்பான்... அவன் குடும்பம் குழந்தைகள் என்று காசு சேர்த்து ஊருக்கும் அனுப்பி அங்கேயும் விவசாய நிலத்தை விட்டுக் கொடுக்காமல் அண்ணன் தம்பி என்று எப்படியோ அந்த நிலத்தைப் பாதுகாத்துக் கொள்கிறான்.

இங்கே பத்தாவது முடித்துவிட்டு ஸ்விக்கி ஓட்டுகிறேன். ராபிடோ ஓட்டுகிறேன் என்று காலையிலே வேலை. ஈவினிங் சரக்கு கஞ்சா என்று போய்க் கொண்டிருக்கிறார்கள் ரசிக இளசுகள்.

பாட புத்தகத்தைத் தவிர ஒரு நாவல் படித்தது கிடையாது... வாசிப்பு கிடையாது. பேசிக் மெகானிக்ஸ் அல்லது வீட்டுப்பொருட்கள் ரிப்பேர் செய்கின்ற திறன்கூடக் கிடையாது... லேட்டஸ்ட் சினிமாப் பாட்டோட வரிகள் மட்டும் முழுசா தெரியும்... இதை ஆடியோ லாஞ்சில வளர்த்து விடுகிற நடிகர்கள், இசையமைப்பாளர்கள். கேவலம்! மகா கேவலம்! அப்பா, அம்மா காசில் சுத்தித் திரிகின்ற கூட்டம். நான் கல்லூரி படித்த காலத்தில் இருந்த என் சக வயது ஆண் தோழர்களிடம் நாங்கள் பார்த்த அறிவோ திறனோ ஜெயிக்க வேண்டும் என்கின்ற உழைப்போ இன்றைக்கு இருக்கின்ற இளைய தலைமுறைகளிடம் சுத்தமாக இல்லை. மொத்தமாக சினிமாவால் மூளைச்சலவை செய்யப்பட்ட கூட்டம். பிறந்ததிலிருந்து செல்போன் எடுத்துக்கொண்டு மலசல கூடம் போன கூட்டம். இவர்களை நினைத்தால், இவர்களிடம்தான் நம் தமிழ்நாட்டுடைய தலையெழுத்து இருக்கு என்று நினைக்கும்போது அடுத்த இருபது, முப்பது வருடத்தை நினைத்தால் பயமாக இருக்கு. இவ்வாறு நடிகை வினோதினி வைத்தியநாதன் தெரிவித்துள்ளார். கரூர் சம்பவத்தை மையமாக வைத்து இவர் எழுதிய டுவிட்டர் பதிவு வைரலாகி வருகிறது...

### அன்பு வாசகர்களே!

உங்கள் அபிமான சங்குநாதத்தில் நீங்களும் எழுதலாம்...

- அரசியல்
- இலக்கியம்
- கவிதை
- கட்டுரை

ஆக்கங்களை உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.

ஆசிரியர், வலம்புரி - சங்குநாதம்
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
E-mail : valampurii@yahoo.com
Whatsapp : 076 097 3126

## கவிதைத் தளம்

## ஏற்றம் பெற்ற எங்கள் பிரதிநிதி



குச்சு ஒழுங்கைகள் இனி வீதிகளாகும்
மண் குடிசைகள் மாறி மாளிகையாகும்
வெள்ளம் வடிய வடிகால் அமையும்
தெருவெங்கும் மின்விளக்கு ஒளிரும்
எங்கள் கிராமம் ஏற்றம் பெறும்
என்று நம்பியே வாக்குப் போட்டோம்
எங்கள் பிரதிநிதி தேர்தலில் வென்று
கட்சியும் மாறி மந்திரி ஆனார்
அடுக்கு மாடி வீடுகள் அமைத்தார்
அதற்குள்ளே நீச்சல் குளம் சமைத்தார்
சொகுசுக்காரையும் சொந்தமாக்கினார்
உத்தரவு பெற்ற மதுபான நிலையத்தை
எங்கள் கிராமத்தில் திறந்து வைத்தார்
ஏழைகள் வாழ்வில் வழி பிறக்கவே
வரிசையில் நின்று வாக்குப் போட்டோம்
ஏழை ஏழையாய் இருந்தால் தானே
எடுபிடியாக அவருக்கு காவல் இருப்பான்
புரிந்து கொண்டவர் எங்கள் பிரதிநிதி
புரியாமல் நாங்கள் வாக்கு வரிசையில்



பிரமன் - கொக்குவில் மேற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலை உணவு: தவிர்ப்பது தவறா?



காலை உணவைத் தவிர்க்கலாமா, கூடாதா என்ற கேள்வி, பல காலமாக, பலருக்கும் இருப்பதுதான். சில குடும்பங்களில் காலை உணவைத் தவிர்த்துவிட்டு, காலை உணவுக்கும் மதிய உணவுக்கும் இடையிலான நேரத்தில் முழுமையான உணவை சாப்பிடும் வழக்கம் இருக்கிறது. அதையடுத்து மதியத்துக்கும் மாலைக்குமான இடைவெளியில் சூடாக காபியோ, டீயோ குடிப்பார்கள் அவர்கள். இரவு உணவையும் சற்று முன்னதாகவே முடித்துக்கொள்வார்கள்.

காலங்காலமாக அப்படியே பழகியவர்களுக்கு அது இயல்பானதாக மாறியிருக்கும். அவர்களது உடலும் அதை ஏற்றுக்கொண்டு பழகியிருக்கும். அவர்களுக்கு காலை உணவைத் தவிர்ப்பதால் எந்தப் பிரச்சினையும் ஏற்பட்டிருக்காது.

இன்னும் சிலருக்கு மதிய உணவு வரை பசியே எடுக்காது. அவர்கள் இடையில் எதையும் சாப்பிடாமல் நேரடியாக மதிய உணவை எடுத்துக்கொள்வார்கள். அவர்களைப் பொறுத்தவரை மதிய உணவுக்குத்தான் முக்கியத்துவம் அதிகமாக இருக்கும். காலை உணவோ, இரவு உணவோ ஒரு பொருட்டாக இருக்காது. அப்படிப் பழகியவர்களுக்கும் அது ஓகேதான்.


எடை குறைவான குழந்தைகள், விளையாட்டு வீரர்கள், உடலளவில் மிகவும் ஆக்டிவ்வாக வேலை செய்பவர்கள், சர்க்கரை நோயாளிகள், உணவுக்குப் பிறகு மருந்து, மாத்திரைகள் எடுத்துக்கொள்ள வேண்டியபடி உடல்நலக் கோளாறுகள் உள்ளவர்கள், இரத்தச் சர்க்கரை அளவு குறைவாக உள்ளவர்கள் போன்றோர் கட்டாயம் காலை உணவை எடுத்துக்கொள்ள வேண்டும்.

மற்றபடி காலை உணவைத் தவிர்ப்பதில் எந்த அசௌகரியமும் இல்லாத, நேரடியாக மதிய உணவை எடுத்துக்கொள்வதை ஏற்றுக்கொள்கிற, மதிய உணவையும், மாலை நேர ஸ்னாக்ஸையும், இரவு உணவையும் ஆரோக்கியமானதாக எடுத்துக் கொள்கிறவர்களுக்கு எந்தப் பிரச்சினையும் இருக்காது.

பசிக்கிறதோ இல்லையோ... ஒவ்வோர் இரண்டு மணி நேரத்துக்கும் இடையில் எதையாவது சாப்பிட வேண்டும் என்று பழகியவர்கள், அதன் தொடர்ச்சியாக அதிக நொறுக்குத்தீனிகள் சாப்பிடும் பழக்கத்துக்கு ஆளாவதையும் பார்க்கலாம்.

எனவே காலை உணவைத் தவிர்ப்பதா, கூடாதா என்பது அவரவர் தேவை, உடல்நலம் மற்றும் பழக்கத்தைப் பொறுத்தது. உங்கள் விடயத்தில் உங்கள் உடல் எதை ஏற்றுக்கொள்கிறதோ, அதையே பின்பற்றலாம். இதுதான் சரி, இது தவறு என இதில் வரையறை ஏதுமில்லை.

# அடுக்களைப் பக்கம்





- தேங்காயைத் துருவி அதை கொதி நீரில் போட்டு வைத்துவிட்டு பிறகு கைப்பொறுக்கும் சூட்டில் எடுத்து பிழிந்தால் நல்ல கெட்டியான பால் கிடைக்கும்.
- வெங்காய பகோடாவுக்கு அரை கரண்டி சோம்பு, கறிவேப்பிலை கொஞ்சம் போட்டால் வாசனையாக இருக்கும்.
- மா அரைக்கும் போது வேகவைத்த சாதத்தை சிறிது சேர்த்து அரைத்தால் வார்க்கும் தோசை மிருதுவாக இருக்கும்.
- இனிப்பு பணியாரம் மிருதுவாக இருக்க, அரிசி மாவை ஒரு துணியில் கட்டி இட்லி பாத்திரத்தில் வைத்து ஆவியில் ஐந்து நிமிடம் வேகவைத்து எடுத்து நன்றாக சலித்த பிறகு பணியாரம் செய்தால், பஞ்சு போல இருக்கும்.
- எந்த வகை கேசரி செய்தாலும் மூன்று கரண்டி தேங்காய்ப்பால் சேர்த்தால் சுவை அள்ளும்.
- அப்பம் செய்யும் மாவில் சிறிதளவு உருக்கிய நெய் கலந்து செய்தால் நெய் வாசத்துடன் அப்பம் மணக்கும்.
- அரிசி, ரவை, மைதா ஆகியவற்றுக்கான பாத்திரங்களில், சிறிது வசம்பை தட்டி போட்டு வைத்தால் பூச்சி புழுக்கள் வராது.
- கடலைப்பருப்பு போளி செய்யும்போது பொடித்த சர்க்கரையை சேர்த்தால் போளி நிறமாகவும் சுவையாகவும் மெல்லியதாகவும் இருக்கும்.
- விளாம்பழ சீஸனின் போது பழம் என்று நினைத்து காயை வாங்கி வந்துவிட்டீர்களா? ஓரிரு நாட்களில் வெயிலில் வைத்தால் பழம் பழுத்துவிடும். இல்லையென்றால் கேஸ் ஸ்டவ் எரியும் போது பாத்திரங்களுக்கிடையே பிளேட்டில் வைத்தால் பழுத்துவிடும்.



# கரும்புச்சாறு கரட் அல்வா



## சமைப்போம் சுவைப்போம்

## தேவையானவை:



கரட் துருவல் – ஒரு கப்


கரும்புச்சாறு – ஒரு கப்

ஏலக்காய்த்தூள் – ஒரு சிட்டிகை

நெய் – 2 கரண்டி

நட்ஸ் (நறுக்கியது) – 2 கரண்டி

டூட்டி ஃப்ரூட்டி – ஒரு கரண்டி



## செய்முறை

வாணலியில் நெய் விட்டு சூடாக்கி கரட் துருவலைப் போட்டு பச்சை வாசனை போக வதக்கிக்கொள்ளவும். பிறகு அடுப்பைக் குறைந்த தீயில் வைத்து இதனுடன் கரும்புச்சாறு, ஏலக்காய்த்தூள் சேர்த்துக் கிளறி நன்கு சுருள வேகவிடவும். கடைசியில் விருப்பமான நட்ஸ், டூட்டி ஃப்ரூட்டி தூவி இறக்கிப் பரிமாறவும்.

**சுவையான கரும்புச்சாறு கரட் அல்வா தயார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சி-னி-மா

## சின்னத்திரை டைரி

### சாந்தினி



**சொந்த ஊர்** - ஆந்திரா. அதேநேரம் சென்னை என்னை வாழ வைக்கின்ற ஊர். முன்னாடி நான் நடித்த "வானத்தைப் போல" தொடருக்கு அவ்வளவு வரவேற்பு கொடுத்தார்கள் தமிழ் ரசிகர்கள். இப்ப "சிங்கிள் பசங்க" ஷோவுக்குக் கிடைக்கின்ற வரவேற்பும் நெகிழ வைக்குது.

**படிப்பு** - விருப்பப்பட்டுப் படித்தது இன்டீரியர் டெகரேஷன்.

**சினிமாவில் பிடித்தவர்கள்** - நயன்தாரா, ரம்யா கிருஷ்ணன். நடிப்பதில் ரோல் மாடலா இவர்களை நினைத்துக் கொள்வேன். அடுத்து, எஸ்.டி.ஆருக்கு நான் தீவிர ரசிகை.

**அதிஷ்டம்** - அது மேல் கொஞ்சம் நம்பிக்கை இருக்கு. நாம் எதிர்பார்க்கலாம். ஆனால் உழைத்துவிட்டு எதிர்பார்க்க வேண்டும்.

**கூமாப்பட்டி** - எனக்குமே இந்த ஊரைப் பிடிச்சிருக்கு!



### ஸ்டாலின்




**"பாண்டியன் ஸ்டோர்ஸ்"** ஸ்டாலின் வீட்டில் அம்மா, அப்பா, சகோதரிகள், பங்காளிகள் என ஏகப்பட்ட பேர் ஆசிரியர்களாக இருக்கிறார்களாம். இவரும் ஆசிரியராக வேண்டுமென்பதே அவருடைய பெற்றோரின் விருப்பமாக இருந்ததாம். அவர்களின் ஆசையை நிறைவேற்ற முடியாத வருத்தம் இப்போதும் ஸ்டாலினிடம் உண்டு என்கிறார்கள். இப்போதும் தான் படித்த பள்ளி மற்றும் ஆசிரியர்களுடன் தொடர்பிலேயே இருக்கிறாராம்.




**கன்னடத்தின்** "காந்தாரா" ஓடிய ஓட்டம் மற்றும் பெரும் வசூலைக் குவித்தது இன்னும் ஞாபகம் இருக்கலாம். அதன் வெற்றியைத் தொடர்ந்து, அதன் ப்ரிக்குவல் பாகமான "காந்தாரா சாப்டர் 1" படம், அக்டோபர் இரண்டாம் திகதி வெளியாகிறது. ரிலீஸின்போது தமிழில்கூட சில பெரிய படங்களின் வெளியீட்டை ஒரு வாரம் தள்ளி வைக்க முடிவு செய்திருக்கிறார்கள். "சாப்டர் 1"ஆம் பான் இந்தியா முழுவதும் வசூலைக் குவிக்கும் என்று எதிர்பார்க்கிறார்கள்.




**"சித்தா"** மற்றும் "3 BHK" படங்களைத் தொடர்ந்து வெப் சீரிஸில் கமிட் ஆகியிருக்கிறார் சித்தார்த். நெட்ப்ளிக்ஸில் வரவிருக்கும் இந்தத் தொடர் அமெரிக்க எழுத்தாளர் ஒருவரின் சிறுகதையை அடிப்படையாக வைத்து 'Unaccustomed Earth' என்ற பெயரில் தயாராகி வருகிறது. சித்தார்த் ஜோடியாக ஃப்ரீடா பின்டோ நடிக்கிறார். "ஸ்லம்டாக் மில்லியனர்" படத்தில் நடித்தவர்தான் இந்த ஃப்ரீடா. "எட்டு எபிசோடுகள் கொண்ட இந்த ரொமாண்டிக் கதை, கதாபாத்திரங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் கலாசார ரீதியிலான தொடராகவும் அமையும்" என்கிறார் சித்தார்த்.



**இயக்குநரும்** நடிகருமான ராகவா லாரன்ஸ், இப்போது "காஞ்சனா 4" படத்தை இயக்கி வருகிறார். இதற்கிடையே தன் அம்மா கண்மணியின் பெயரில் அன்னதான விருந்தைத் தொடங்கியிருக்கிறார். "வசதி படைத்தவர்கள் மட்டுமே சாப்பிடக்கூடிய உணவுகள் எளியவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில்தான் இந்த "கண்மணி அன்னதான விருந்து" என்பதைத் தொடங்கியிருக்கிறேன்" என்கிறார் லாரன்ஸ். தொடரட்டும் தொண்டு.



**சாந்தனு** தமிழில் நடிக்க வந்து 15 ஆண்டுகளாகிவிட்டன. முதல்தடவையாக இப்போது தான் மலையாளத்தில் காலடி வைத்திருக்கிறார். அறிமுகமாகும் "பல்டி" படத்திற்காக மலையாளம் கற்றதோடு, படத்தின் டப்பிங்கையும் மூன்று நாட்களில் பேசி, பட யூனிட்டில் உள்ள அனைவரையும் அசர வைத்துவிட்டாராம் சாந்தனு.



**"கூலி"** படத்தில் நடித்ததைப் பற்றி எதிர்மறையான கருத்துகளை வெளியிட்டதாக அமிர் கான் மீது இணையத்தளத்தில் ரஜினி ரசிகர்கள் கோபப்பட்டார்கள். அமிர்கான் தரப்பு, "அப்படி எதுவும் கருத்துகள் வெளியிடப்படவில்லை" என்று விளக்கமளித்தது. இதற்கும் மேலாக, இயக்குநர் லோகேஷ் கனகராஜை அலைபேசியில் அழைத்த அமிர், "அது தவறான செய்தி" என்று சொன்னதாகவும் கூறப்படுகிறது.



**ஒரு காலத்தில்** கோலிவூட்டுக்கு மலையாள வரவுகள் அதிகம் இருந்தன. ஓ.டி.டி காலத்தில் எல்லாம் பான் இந்தியா மயமாகிவிட்டதால், கன்னடத்தில் இருந்து பலரும் கோடம்பாக்கத்தை நோக்கிப் படையெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ருக்மிணி வசந்த், சைத்ராவைத் தொடர்ந்து சான்யா வந்திருக்கிறார். பெயரிடப்படாத படத்தில் நடித்துவரும் சான்யா, கன்னட "பிக் பாஸ்" ஓ.டி.டி "சீசன் 1"இல் வென்றவர். சான்டல் வுட்டில் குழந்தை நட்சத்திரமாகவும் அசத்தியவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

சுகமான விடியல்

465

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# தொப்பையை இலகுவாக குறைக்கும் வழிமுறைகள்...


எமது வண்டியை அல்லது தொப்பையை எவ்வாறு குறைத்துக் கொள்ளலாம் என்பது பற்றிய முக்கியமான விடயங்களை பார்ப்போமாக இருந்தால், பொதுவாக வண்டி வைத்தால் பார்ப்பதற்கு நன்றாக இருக்காது. அத்துடன் வண்டி வைத்தால் அவர்களுக்கு பல தொற்றா நோய்கள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாக காணப்படுகின்றது. சிலருக்கு சாதாரண உடல் நிறையுடன் தொப்பை இருக்கிறது. சிலருக்கு அதிகரித்த நிறையுடனும் தொப்பை இருக்கிறது.

எனவே, ஆய்வுகளின் முடிவுகள் என்ன சொல்கின்றன என்று பார்த்தால், அதிகரித்த நிறையுடன் தொப்பை இருப்பதை விட சாதாரண நிறையுடன் தொப்பை இருப்பது ஆபத்தானது. எல்லோருக்கும் வண்டியை குறைத்துக்கொள்ள ஆசைதான். ஆனால், சில பிழையான மற்றும் விஞ்ஞான பூர்வமற்ற தகவல்களால் நாங்கள் பிழையாக வழிநடத்தப்பட்டு இந்த முயற்சியில் தோற்று போகிறோம் அல்லது ஏமாந்து போகிறோம். வண்டியை குறைப்பதற்கு அல்லது இல்லாமல் செய்வதற்கு, எட்டு விடயங்கள் சம்பந்தமான ஒரு தெளிவு இருக்குமானால், நாம் இந்த முயற்சியில் வெற்றி பெறுவது கடினமாக இருக்காது. முதலாவது விடயத்தைப் பார்த்தால், வண்டிக்கான சில பிரத்தியேக பயிற்சிகள் செய்வது, வண்டிக்கு பெல்ட் கட்டுவது மற்றும் சில உபகரணங்களை பாவிப்பது போன்றவை மூலம், வண்டியை குறைத்துக் கொள்ள முடியாது. இவற்றின் மூலம் தற்காலிகமாக வண்டி குறைவது போன்ற ஒரு தோற்றப்பாடு இருந்தாலும், இவை வண்டியை குறைப்பதற்கான வழிமுறைகள் இல்லை. இவற்றின் மூலம், எமது வயிற்றுக் குழியில் இருக்கும் கொழுப்பை (Visceral fat) குறைக்கவும் முடியாது. வண்டி வைப்பதால் ஏற்படும் ஆபத்து வீதத்தையும் குறைக்க முடியாது.

இரண்டாவதாக, வண்டியை குறைத்துக்கொள்ள சிலவற்றை உண்பது, குடிப்பது, உதாரணமாக Green tea குடிப்பது, கொள்ளு சாப்பிடுவது, சில மா வகைகளை கரைத்து குடிப்பது போன்றவற்றின் மூலமாகவும் வண்டியை குறைத்துக்கொள்ள முடியாது. வண்டி அல்லது தொப்பை ஏற்படுவதற்கான காரணம், நாம் சில பிழையான உணவுகளை அதிகமாக உண்பதாகும். இதனால், எமது வயிற்று தோலினுள்ளும், வயிற்றுக் குழியினுள்ளும் மேலதிகமான கொழுப்பு படிந்து தான் வண்டி வைக்கின்றது.

இவ்வாறு வயிற்றுக் குழியினுள் படிந்த கொழுப்பை, வேறு உணவு உண்பதால் கரைக்க முடியாது. அது கரையும் பொருளும் அல்ல, கரைந்த கொழுப்பை எவ்வாறு வெளியேற்றுவது என்பதும் ஒரு கேள்வி ஆகும். சில பிழையான தகவல்கள் மூலமும் பிழையான வழிநடத்தல்கள் மூலமும் நாம் அனாவசியமாக பெருந்தொகையான பணத்தையும் செலவழித்து விட்டு ஏமாந்து போகிறோம். இது ஒரு மனவருத்தமான விடயம்.

மூன்றாவதாக நாம் தெளிவு பெற வேண்டிய விடயம் என்னவென்றால், பொதுவான ஒரு பிழையான அபிப்பிராயம் இருக்கிறது. அதாவது, கொழுப்பு உணவுகளை உண்பதால் தான் எமக்கு வண்டி வைக்கிறது என்று... அது தவறானது. வண்டி வைப்பதற்கு பிரதானமான காரணமாக இருப்பது, மேலதிகமாக மாப்பொருட்களை உண்பது தான். நாம் மேலதிகமாக மாப்பொருட்களை உண்டால், இது கொழுப்பாக மாற்றப்பட்டு வயிற்றுக் குழியினுள்ளேயும், வயிற்றின் உள் உறுப்புகளான குடல், ஈரல் மற்றும் தசைகளின் உள்ளே இந்த கொழுப்பு படிகிறது. இதுதான் வண்டி வைப்பதற்கு பிரதானமான காரணமாக இருக்கிறது. இந்த Visceral fat பல சுரப்புகளை சுரக்கின்றது. இந்த சுரப்புகள் எமக்கு பல தொற்றா நோய்களை ஏற்படுத்துகின்றன. உயர் குருதி அமுக்கம், சலரோகம், கொலஸ்ரோல் போன்ற பல தொற்றா நோய்களை ஏற்படுத்துகின்றன. இதற்கு பிரதானமான காரணமாக அமைவது மாப்பொருளே தவிர கொழுப்பு அல்ல. இதற்கு ஒரு படி மேலாக, சில நல்ல கொழுப்புகள் Visceral fat ஐ குறைத்து, வண்டி குறைவதற்கு காரணமாக அமைகின்றன என்று சில ஆய்வுகள் தெரிவிக்கின்றன.




நான்காவதாக நாம் தெளிவு பெற வேண்டிய விடயமானது, உணவிலே, எமது உடல் Insulin ஐ அதிகப்படுத்தும் உணவு வகைகளை தவிர்த்து விட வேண்டும். உடம்பில் Insulin இன் அளவு அதிகமாக இருந்தால், அது குளுக்கோஸை வேகமாக கொழுப்பாக மாற்றுகிறது. இதன் மூலம் வயிற்றுக் குழியில் படியும் கொழுப்பு வேகமாக அதிகரிக்கிறது. எனவே, எந்த வகையான உணவுகள் எமது உடலில் உள்ள Insulin இன் அளவை அதிகரிக்கின்றன என்று பார்த்தால், சீனி, சக்கரை போன்ற இனிப்பு வகைகள் எமது உடலில் உள்ள Insulin இன் அளவை வேகமாக அதிகரிக்கின்றன.

இதனால் குருதியில் உள்ள குளுக்கோஸ் வேகமாக கொழுப்பாக மாற்றப்பட்டு, வயிற்றுக் குழியில் வேகமாக படிகிறது. இதனால் வண்டி அதிகரிக்கிறது. இது வண்டி வைப்பதற்கு ஒரு முக்கியமான காரணமாக அமைகிறது. எனவே, வண்டியை குறைக்க விரும்புவோர், சீனி, சக்கரை போன்ற இனிப்பு வகைகள் சேர்க்கப்பட்ட உணவுகளை அல்லது பானங்களை முற்றாக தவிர்த்து விட வேண்டும். அத்துடன் சீனியில் 50% குளுக்கோஸும், 50% புரக்ரோசு எனப்படும் வெல்லமும் இருக்கிறது. இந்த புரக்ரோசு உடலினுள் செல்லும் போது அதை ஈரலினால் மட்டுமே கையாள முடியும். கூடுதலான புரக்ரோசு உடலை அடையும் போது, வேறு வழியின்றி அது கொழுப்பாக மாற்றப்பட்டு, வயிற்றுக் குழியில் படிந்து, வண்டி வைப்பதற்கு பிரதானமான காரணமாக இருக்கிறது.

ஐந்தாவதாக நாம் வண்டியை குறைத்துக்கொள்ள தெரிந்து வைத்திருக்க வேண்டிய விடயம், கடுமையான உடற்பயிற்சி செய்ய வேண்டும், உதாரணமாக, வேகமாக ஓடுதல், வேகமாக சைக்கிள் ஓட்டுதல், நீந்துதல் போன்ற கடுமையான உடற்பயிற்சிகளை செய்வது, Visceral fat ஐ குறைப்பதற்கு உதவியாக இருக்கிறது என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. கடுமையாக உடற்பயிற்சி செய்யும் போது நாம் களைத்து விட்டால் உடற்பயிற்சி செய்யும் வீதத்தை குறைத்து, பின் களைப்பு நீங்கியவுடன் மீண்டும் கடுமையான உடற்பயிற்சியை செய்ய முடியும். உதாரணமாக, நாம் வேகமாக ஓடும் போது களைத்து விட்டால், ஓடுவதை குறைத்து, நடந்து, சிறிது நேரத்தின் பின் மீண்டும் வேகமாக ஓட வேண்டும். இதனை தொடர்ந்து செய்ய வேண்டும். இது Intermittent high intensity exercise எனப்படுகிறது. இது Abdominal obesity எனப்படும் தொப்பையை குறைப்பதற்கு உதவியாக இருக்கிறது என்பதை உறுதி செய்து நிற்கிறது. இதனை விடுத்து வயிற்றிற்கு மட்டும் உடற்பயிற்சி செய்வதன்மூலம் இந்த Visceral fat ஐ குறைத்து விட முடியாது.

எனவே மீண்டும் வலியுறுத்துவது என்னவென்றால், எமது உணவில் மாப்பொருள் அடங்கிய சோறு, பிட்டு, இடியப்பம், பாண் போன்ற உணவுகளை தவிர்த்து தொப்பையை குறைத்துக் கொள்ள முடியும். அண்மையில் செய்யப்பட்ட ஒரு ஆய்வில், சம அளவான கலோரி பெறுமானம் உடைய மாப்பொருளையும் கொழுப்பையும் கொடுத்து, எந்த உணவிற்கு வண்டி அதிகமாக வைக்கிறது என்று ஆராய்ந்தார்கள். இந்த ஆய்வின் முடிவிலே மாப்பொருட்களை உண்பதன் மூலம் தான் வண்டி வைப்பது அதிகமாக இருக்கிறது என உறுதி செய்துள்ளனர். எனவே, எமது உணவில் இயன்றளவு மாப்பொருளை குறைப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும்.

அடுத்ததாக, உணவில் புரதத்தை சேர்த்துக் கொள்வதன் மூலம் வண்டியை குறைத்துக் கொள்ளலாம். இது பல காரணங்களினால் நடைபெறுகிறது. புரத உணவுகளை உண்பது, நல்ல முறையில் எமது பசியை கட்டுப்படுத்துகிறது. இதனால், நாம் உள்ளெடுக்கும் உணவை கட்டுப்படுத்திக் கொள்ளலாம். அடுத்த விடயம், நாம் உள்ளெடுக்கும் புரதத்தை எரிப்பதற்கு எமது உடலின் சக்தியின் ஒரு பகுதி பயன்படுத்தப்படுகிறது. இதுவும் எமது நிறை குறைப்பிற்கு உதவியாக இருக்கும். நாம் மாப்பொருளோ, கொழுப்போ உள்ளெடுக்கும் போது, அதனை உடல் பயன்படுத்துவதற்கு, மேலதிகமாக உடலின் சக்தி எதுவும் இழக்கப்படுவதில்லை. இதற்கு மேலதிகமாக, நாம் உண்ணும் புரதமானது Visceral fat ஆக மாற்றப்படாது. எனவே, இது எமது தொப்பையை அதிகரிக்காது. நாம் நமது உணவிலே 80 - 160 கிராம் அளவு புரதத்தை உட்கொள்ள முடியும். புரத உணவுகளாக பால், தயிர், மோர், பருப்பு வகைகள், மீன், முட்டை, இறைச்சி, பயறு போன்றவற்றைக் குறிப்பிடலாம். இந்த புரத உணவு வகைகளுடன் நார்த்தன்மையான உணவு வகைகளான கீரை, இலை வகைகள், கரட் போன்ற மரக்கறி வகைகள், பழங்கள் ஆகியவற்றை சேர்த்து உண்டால் தொப்பை குறையும் வீதம் அதிகமாகும்.

எட்டாவதாக, நாம் வாரத்திலே 2 அல்லது 3 நாட்கள் 18 மணித்தியாலங்கள் உணவு உண்ணாமல் விரதம் இருப்பது நல்லது. இந்த சந்தர்ப்பங்களில் Visceral fat மிக விரைவாக உடைக்கப்படுவது ஆய்வுகளின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. Visceral fat உடைக்கப்பட்டால் தொப்பை குறையும். இதில் முக்கியமான விடயம், அந்த விரதத்தை முடிக்கும் போது மாப்பொருள் உண்பதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு எடுத்தால் அது Visceral fat ஐ அதிகப்படுத்தும். விரதத்தை முடிக்கும் போது நார்த்தன்மையான மற்றும் புரத உணவுகளை அதிகமாக எடுப்பது நல்லது. எனவே, இவற்றை மனதில் நிறுத்தி, நாம் எமது வண்டியை குறைத்துக் கொள்ள விரும்பி முயற்சி எடுத்தால், முயற்சி நிச்சயம் வெற்றி அளிக்கும்.

Dr. சி. சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-16 கொழும்புத்துறை வீதியில் அமைந்துள்ள 69/14 எனும் வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனவரிப்பதிவேட்டில் காணப்படுகிறது. இவ்வாதனத்தை யாழ்ப்பாணம் சுண்டிக்குளி இராமுப்பிள்ளை கனகரத்தினம் என்பவர் பிரசித்த நொத்தாரிசு சிவலிங்கம் முகதாவில் 17.02.1971ஆம் திகதி 755ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் நெற்பரப்பு 4 விஸ்தீரணத்தைக் கொண்ட ஆதனத்தை கனகரத்தினம் மனோகரனுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் கொழும்புத்துறை வீதியைச் சேர்ந்தவர்களான மனோகரன் கைம்பெண் விஜயகுமாரியும், மனோகரன் சுமிலாவும், மனோகரன் சுஜீகரனும், முகமட் உமர் சபீலும் பெண் சுதர்ஷனாவும் ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு K.M இராதாக்கிருஷ்ணன் முகதாவில் 15.04.2013 ஆம் திகதி 972 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் சின்னையா மகள் நிசாந்தினி என்பவரிற்கு வழங்கியுள்ளார்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி, யாழ்ப்பாணப் பிரதேச செயலகம், யாழ் மாநகரசபை சுண்டுக்குளி வடக்கு (ஜே/76) கிராம அலுவலர் பிரிவு, சுண்டிக்குளி கோவிற்பற்று, சுண்டிக்குளி இறை, "ஆராய்ச்சியார் தாழ்வு வயலும் மறுபிரிவுகளும்" நெற்பரப்பு பதினாறு (நெற்.பர.16) இதில் வடக்குப் புறமாக பிரிக்கப்பட்ட நெற்பரப்பு நான்கு (நெற்.பர.4) இதில் மேற்குப் பக்கமாக நெற்பரப்பு இரண்டும் குளி இரண்டு தசம் இரண்டு ஆறு (நெற்.பர. 2 குளி 2.26) இது 2011 ஆம் ஆண்டு மே மாதம் 25ஆம் திகதி நிலஅளவையாளர் பி.தனராஜா அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 2828 ஆம் இலக்க வரைபடத்தில் நெற்பரப்பு இரண்டு குளி இரண்டு தசம் இரண்டு ஆறு (நெற்.பர. 2 குளி 2.26) வீடும் வான் பயிர் செய்பயிர்களும்.

இதற்கெல்லைகளாக

கிழக்கு - மிகுதி ஆதனம்.

மேற்கு :- இராமுப்பிள்ளை நடராசாவுக்குரிய ஆதனம்.

வடக்கு - முத்துக்குமாரு பெண் ஆச்சிமுத்துவுக்குரிய ஆதனம்.

தெற்கு- தெற்கேயிருக்கும் றோட்டிலிருந்து வரும் பன்னிரண்டடி (12')

அகலமான பாதைக்குப் போக்குவரவு செய்வதற்காகத் தெற்கேயுள்ள பெருநிலத்தில் ஒதுக்கப்பட்ட பதினைந்தடி (15') அகலங் கொண்ட வழிப்பாதை நிலமும் இதடங்கலும்.

தற்போது இவ்வாதனத்தை சின்னையா மகள் நிசாந்தினி என்பவர் தமது பெயரை எமது ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சின்னையா மகள் நிசாந்தினி என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**முதல்வர், யாழ் மாநகரசபை** (C-4021)

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-12 காரைதீவு வீதி, 332/2 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் மீரான் சாகிப் ஆயிசா மொகிதீன் என ஆதனவரிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

செல்லையா அந்தோனிப்பிள்ளை மற்றும் மரியம்மா 08.12.1975ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு எம்.எம். சுல்தான் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6130ஆம் இலக்க சீதன உறுதி மூலம் சுவாம்பிள்ளை யேசுதாசன் பெண் நீற்றா அல்லது சந்தம்மா என்பவருக்கு தமது சீவிய உரித்திற்கமைவாக வழங்கியுள்ளார்.

சுவாம்பிள்ளை யேசுதாசனும் பெண் நீற்றாவும் 28.07.2010ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு அ.இராஜரட்ணம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 6523ஆம் இலக்க சீதன உறுதி மூலம் செல்வராஜா மைக்கல் பெண் மேரி பற்றிஷியா என்பவருக்கு வழங்கியுள்ளார்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை, "கொத்தியார் முனங்கு" உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் ஜே.மனுவல் அவர்களால் 10.05.1947ஆம் திகதி அளந்து விபரித்த 333ஆம் இலக்க படத்தின்படி விஸ்தீரணம் நிலப்பரப்பு 1 குளி 7, இதில் குறித்த படத்தில் துண்டு 1 எனச்சுட்டப்பட்ட பாகம் (வடக்கு பக்கமாக அரைவாசி) குளி (12 1/2) பன்னிரண்டரையும் கல்வீடும் குறித்த படத்தில் துண்டு 2 எனச்சுட்டப்பட்ட பாகத்திலுள்ள கிணற்றிலிதற்குரிய பங்கும் மற்றுமதற்குச் சேர்ந்தவைகளும்.

இதற்கெல்லைகள்.

கிழக்கு: கிறிஸ்கோ கைம்பெண் அந்தோனிக்கத்தின் ஆதனம்.

வடக்கு: மார்க்கு மேரியனின் ஆதனம்.

மேற்கு- நாகமுத்து இராமலிங்கத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம்.

தெற்கு: கையொழுங்கை முகப்பும் குறித்த படத்தில் துண்டு 2 எனச்சுட்டப்பட்ட பாகமும் இதடங்கலும்

தற்போது இவ்வாதனத்தை செல்வராஜா மைக்கல் பெண் மேரி பற்றிஷியா தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது செல்வராஜா மைக்கல் பெண் மேரி பற்றிஷியா என்னும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**முதல்வர், யாழ் மாநகரசபை.** (C-4020)

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-25 காங்கேசன்துறை வீதி, 361,363,363/1 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் ஆலாலசுந்தரம் பெண் உமாதேவி என ஆதனவரிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

சின்னத்தம்பி துரையப்பா தணிகாசலமும் பெண் பத்மாவதியும் 18.09.1972 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு வ. பரமானந்தம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 616ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் தணிகாசலம் மகள் யோகதேவி என்பவருக்கு வழங்கியுள்ளார்.

சின்னத்தம்பி துரையப்பா தணிகாசலமும் பெண் பத்மாவதியும் 18.09.1972 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு வ. பரமானந்தம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 617 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் தணிகாசலம் மகள் உமாதேவி என்பவருக்கு வழங்கியுள்ளார்.

சின்னத்தம்பி துரையப்பா தணிகாசலமும் பெண் பத்மாவதியும் 18.09:1972ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு வ. பரமானந்தம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 618ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் தணிகாசலம் மகன் இரகுநாதன் என்பவருக்கு வழங்கியுள்ளார்.

ஆலாலசுந்தரம் பெண் உமாதேவி 28.09.2011 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு இ.இரகுராஜா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 3554A ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதியில், குறித்த சோனகன் தறை நிலப்பரப்பு 02 இல் சொரியலாய் நிலப்பரப்பு இலாச்சம் 01 1/4 (ஒன்றேகால்) மேலே 616 ஆம் இலக்க உறுதியில் குறிப்பிட்ட யோகதேவி 1985 ஆம் ஆண்டும் மேலே 618 ஆம் இலக்க உறுதியில் குறிப்பிட்ட இரகுநாதன் 1996 ஆம் ஆண்டும் சந்ததியின்றி இறந்தமையால் குறித்த உறுதிகளின் படி அவர்களுக்குரிய பங்கு உமாதேவிக்கு வந்து முழு ஆதனத்திற்கும் உரித்தாளர் நானே என வெளிப்படுத்தியுள்ளார்.

ஆலாலசுந்தரம் பெண் உமாதேவி 30.06.2023 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு இ.த.விக்னராசா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2604 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் தணிகாசலம் ஆறுமுகநாதன் என்பவருக்கு வழங்கியுள்ளார்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை இறை, யாழ்ப்பாணம் மாநகரசபை, நல்லூர் பிரதேசசெயலக பிரிவு, ஜே/97 ஐயனார் கோவிலடி கிராமசேவகர் பிரிவு "சோனகன் வளவு" உறுதிப்படி விஸ்தீரணம் நிலப்பரப்பு இலாச்சம் 02 (நிலப்பரப்பு இரண்டு) ஆனால் தற்போது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் த.கேதீஸ்வரன் அவர்களால் 23.02.2005 ஆம் திகதி அளந்து விபரித்த 617 ஆம் இலக்க படத்தின்படி துண்டு-1 (லொட்-1) முதல் துண்டு நாலு (லொட்-4) வரை காட்டப்பட்ட பரப்பு நிலம் இலாச்சம் இரண்டு குளி மூன்று தசம் நான்கு ஆறும் (பரப்பு இலாச்சம்.02 குளி 3.46) வான்பயிர் செய்பயிர்களும்,

இதற்கெல்லைகள்.

கிழக்கு: காங்கேசன்துறை வீதி.

வடக்கு: கந்தையா துரைசாமிக்கும் தற்போது வேலுப்பிள்ளை மகேந்திரனுக்குமுரிய ஆதனம்.

மேற்கு: கதிரேசன் கோயிலுக்குரிய ஆதனம்.

தெற்கு: ஆறுமுகம் சுப்பிரமணியத்திற்கும் தற்போது உதுமான் லெப்பைக்கும் A.K முகமதுவுக்கும் உரிய ஆதனம்.

இதடங்கலும்

தற்போது இவ்வாதனத்தை தணிகாசலம் ஆறுமுகநாதன் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோரர்விடத்து குறித்த ஆதனமானது தணிகாசலம் ஆறுமுகநாதன் என்னும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**முதல்வர்.**
**யாழ் மாநகரசபை.** (C-4022)

# ஐங்கரநேசனின் 'வேர்முகங்கள்' அறிமுக விழா இன்று முள்ளியவளையில்

(யாழ்ப்பாணம்)

கலை, இலக்கியப் பேராளுமைகளுடன் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் வடக்கு மாகாணசபையின் அமைச்சருமான பொ.ஐங்கரநேசன் மேற்கொண்ட நேர்காணல்களின் தொகுப்பு வேர்முகங்கள் என்ற பெயரில் எங்கட புத்தகங்கள் பதிப்பகத்தின் ஊடாக அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூலுக்கான அறிமுக விழா இன்று ஞாயிற்றுக்கிழமை, பிற்பகல் 3 மணிக்குத் தண்ணீரூற்று (குமுழமுனைச் சந்தி) முள்ளியவளையில் அமைந்துள்ள பரி-மத்தியா ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முல்லை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சி. குணபாலன் தலைமையில் நடைபெற உள்ள இவ்வறிமுக விழாவில் கருத்துரைகளை ஊடகவியலாளர் தி. திவாகர் மற்றும் சமூக ஆய்வாளர் தெ. மதுசூதனன் ஆகியோர் நிகழ்த்த உள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின் முதுநிலை விரிவுரையாளர் க. அருந்தாகரன் அறிமுக உரையை நிகழ்த்த, நூலின் சிறப்புப் பிரதிகளை மூத்த பாடலாசிரியர் பெ. செல்லக்குட்டி வழங்கி வைப்பார்.

பல்துறைக் கலைஞர் செ. மயில்வாசன் தொகுத்து வழங்கவுள்ள இந்நிகழ்ச்சியில், வரவேற்புரையை கவிஞர் யோ. புரட்சி ஆற்ற, நிகழ்ச்சியின் இறுதியில் ஏற்புரையை நூலாசிரியர் பொ.ஐங்கரநேசன் நிகழ்த்தவுள்ளார். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மக்கள் சக்தியின் வடமராட்சி அலுவலகம் அமைச்சர் பிமல் ரத்நாயக்காவினால் திறப்பு



(அராலி)

தேசிய மக்கள் சக்தியின் வடமராட்சிக்கான அலுவலகம் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்காவால் நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர், பாராளுமன்ற உறுப்பினர்களான இளங்குமரன், ரஜீவன், மருத்துவர் பவானந்தராஜா, தேசிய மக்கள் சக்தியின் பருத்தித்துறை, கரவெட்டி பிரதேச சபைகளின் உறுப்பினர்கள் பருத்தித்துறை நகரசபை, வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (8-104)

# குறிகாட்டுவான் இறங்குதுறைக்கான வீதிக்கட்டுமானத்தின் ஆரம்ப நிகழ்வு

வடக்கு மாகாணத்தில் வீதிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் பொது மக்களின் வரிப்பணத்தை பயன்படுத்தி செயற்படுத்தப்படும் 'மறுமலர்ச்சிக்கான பாதை' திட்டத்தின் கீழ் 'குறிகாட்டுவான் இறங்குதுறைக்கான மறுசீரமைப்பு 'வீதிக்கட்டுமானத்தின்' ஆரம்ப நிகழ்வு மற்றும் நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் முதல் தடவையாக எரிபொருள் நிரப்பு நிலையம் அமைப்பதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு என்பன குறிகாட்டுவானில் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது.

இந் நிகழ்வில், அமைச்சர்களான பிமல் ரத்நாயக்க, இ.சந்திரசேகர் பாராளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், எஸ்.ஸ்ரீபவானந்தராஜா, ஜெ.ரஜீவன், யாழ்.மாவட்டச் செயலர் ம.பிரதீபன், வேலணை மற்றும் நெடுந்தீவு பிரதேச செயலர்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர், வடக்கு மாகாணப் பணிப்பாளர், மாவட்ட பொறியியலாளர்கள், வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர், வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர், நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் மற்றும் பொது மக்கள் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

வீதி அபிவிருத்திப் பணி 299 மில்லியன் ரூபா செலவில் முதல் கட்டமாக முன்னெடுக்கப்படவுள்ளது. அதே நேரம், 800 மில்லியன் ரூபா செலவில் குறிகாட்டுவான் இறங்குதுறையும் மறுசீரமைக்கப்படவுள்ளது. அத்துடன், குறிகாட்டுவான் வரையிலான பிரதான வீதியில் 3.2 கிலோ மீற்றர் அடுத்த ஆண்டு புனரமைக்கப்படவுள்ளதாகவும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க உறுதியளித்தமையும் குறிப்பிடத்தக்கது. (8)


## தேவை

திருநெல்வேலி, வளாக ஒழுங்கையில் அமைந்துள்ள பிரியா காமென்ஸிற்கு பிறா (BRA) தைப்பதில் அனுபவம் உள்ளவர்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றனர். தமது வீட்டில் இருந்து தைத்துத் தரக் கூடியவர்களும் 074 058 1782 இலக்க தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும்.
உயர்ந்த தையல் கட்டணம் வழங்கப்படும்.
(5578)

## வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள அழகுக் கலை நிலையத்திற்கு பெண் வேலையாட்கள் தேவை. (Pedicure அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு
075 880 7718
(C-4027)

## இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள்வாக்கு பெற்ற **இரத்தினசாமி** சாஸ்திரியார். அவர்கள் யாழ் வருகை. ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திருமணத்தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை வெளிநாடு செல்ல தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்.

தொடர்புகளுக்கு-076 682 7368
யாழ் கச்சேரிக்கு அருகாமையில், சுண்டுக்குளி
(முன்பதிவு செய்து வரவும்)
(C-4023)

## சிறந்த நிலம் விற்பனைக்கு

மீசாலை கிழக்கு – வீட்டு நிலம்
அல்லாரை தெற்கு
வீட்டுடன் தென்னங்காணி
விலை பேசித்தீர்மானிக்கலாம்
077 6544 540
(C-300)

## காணி விற்பனைக்கு

வவுனியா, ஓமந்தையில் A9 வீதிக்கு அருகில் 5 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு
021 222 1895, 011 258 9623
(C-303)

## காணி விற்பனைக்கு

கல்கிசையில் வட்டரப்பொல வீதியில் 6.8 பேர்ச் காணி விற்பனைக்கு உள்ளது. காலி வீதியிலிருந்து 650m தொலைவில் அதிக குடியிருப்புப் பகுதி. விற்பனை விலை ஒரு பேர்ச் 5 மில்லியன் (selling price 5 million per perch)

தொடர்புகளுக்கு
077 636 9416 (WhatsApp number)
(C-302)

## பணியாட்கள் தேவை

திருகோணமலை கன்னிகாவிலுள்ள ஒருங்கிணைந்த பண்ணையில் (பசுக்கள்/தோட்டம் பராமரிப்பதற்கு) தங்கியிருந்து வேலை செய்வதற்கு பணியாட்கள் தேவை. உணவு, தங்குமிடத்துடன் தகுந்த சம்பளமாக 50,000/- வழங்கப்படும்.
வயது-30 வயதிற்கு மேற்பட்டோர் விரும்பத்தக்கது.
077 479 1183
(C-301)

## உடன் விற்பனைக்கு

- யாழ். ஆஸ்பத்திரி வீதியில் பூபாலசிங்கம் புத்தகசாலைக்கு முன்பாக 10 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட மாடிக் கடையும்,
- யாழ். K.K.S வீதியில் சிவன் கோவிலுக்கு அண்மையில் K.K.S வீதி முகப்புடன் 6 பரப்புக் காணியும்,
- யாழ். பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்திக்கும் திருநெல்வேலிச் சந்திக்கும் இடையில் பலாலி வீதி முகப்புடன்6 பரப்புக் காணியும்,
- யாழ். கந்தர்மடச் சந்திக்கு அண்மையில் 3 பரப்பு மாடியுடன் கூடிய வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 077 723 2535
(C-4015)

## காணி விற்பனைக்கு

யாழ்.நல்லூர் குறொஸ் றோட்டில் 1 ¾ பரப்புக்களாகப் பிரிக்கப்பட்ட 4 காணித் துண்டுகள் விற்பனைக்கு உண்டு.
மேலதிக விபரமறிய காணி உரிமையாளரைத் தொடர்பு கொள்ள :
077 801 5156
077 607 8888
(C-4009)

## வீடு வாடகைக்கு தேவை

தெல்லிப்பழை சந்தி தொடக்கம் யாழ் வரையான K.K.S வீதிக்கு அண்மையாக அல்லது நல்லூர், கல்வியங்காடு பருத்தித்துறை வீதிக்கு அண்மையாக சிறு குடும்பம் வசிப்பதற்கு வீடு வாடகைக்கு தேவை.

தொடர்பு
077 063 3408
(C-4025)

## விற்பனைக்கு

No 72, மானிப்பாய் இணுவில் பிரதான வீதியில் சுதும்லை வடக்கு மானிப்பாயில் 6 பரப்பு வீடு சுற்றிவர மதிலுடன் விற்பனைக்குண்டு நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
Sivasakthy Palan (Jeeva)
077 474 3499
(1617)

## கார் விற்பனைக்கு

புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட Toyota Raize car 2024 model யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உள்ளது.
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு
071 207 1341
(5582)

## வீடு வாடகைக்கு தேவை

யாழ்.நகரை அண்மித்த பகுதிகளில் குறிப்பாக கண்டிவீதி, வைத்தியசாலை வீதி, நாவலர் வீதி, கச்சேரியை அண்மித்து நிறுவன தேவைக்கு நவீன வசதிகள், வாகன தரிப்பிடத்துடன் பெரிய வீடு வாடகைக்கு தேவை.

தொடர்பு: SPN என்ரபிரைசஸ்
076 660 6970
(5571)

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை சந்திக்கு அருகாமையில் K.K.S வீதியில் இருந்து 100m ல் 1 ½ பரப்பு, 1 ¾ பரப்பு மற்றும் 2 பரப்புக் காணித் துண்டுகள் விற்பனைக்கு உள்ளது.
076 663 3199
(5527)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியாதை வயதைப் பொறுத்து வருவதில்லை. அவர்கள் செய்யும் செயலைப் பொறுத்தே வருகிறது.

– அறிஞர்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## தியாகி திலீபனின் நினைவேந்தலையும்...

எதையும் அரசியலாக்க முற்பட்டால் ஈற்றில் மக்களால் தூற்றப்படுகின்ற நிலைமைக்கு ஆளாக வேண்டிவரும்.

ஆம், தியாகி திலீபன் உலகம் அறிந்த உத்தம தியாகி. அதேநேரம் தியாகி திலீபனின் உண்ணாநோன்பு என்பது அப்பளுக்கற்றது. யாரும் நினைத்துப் பார்க்க முடியாதது.

சுருங்கக்கூறின் தியாகி திலீபனின் தியாகம் இந்த உலகம் கற்றுக் கொள்வதற்கான பாடம்.

ஆம், தன் இனம் வாழ வேண்டும் என்பதற்காக நீராகாரம் அனைத்தையும் புறந்தள்ளி, தன்னை வருத்தித் தன் உடலையும் உயிரையும் தன் இனத்துக்காக ஆகுதியாக்குவதென்பது மனித மொழிகளால் விபரிக்க முடியாத ஒப்பற்ற கொடை.

இன்று தியாகி திலீபனை நம் தமிழினம் போற்றித் துதி செய்கிறது.

ஆனால் என்றோ ஒரு காலத்தில் தியாகி திலீபனின் தன்னலமற்ற தியாகத்தை இந்த உலகம் போற்றும் என்பது சத்தியமான உண்மை.

இது ஒருபுறமிருக்க, தியாகி திலீபனின் நினைவேந்தல் என்பது தமிழினத்தின் தேசிய நினைவேந்தலாக இருக்க வேண்டுமேயொழிய, அதனை எந்தத் தமிழ்த் தரப்பும் அரசியல் நிகழ்வுபோல நடத்திவிடக்கூடாது.

அதாவது தமிழ் அரசியல் தரப்புகள் தியாகி திலீபனின் நாமத்தை – அவரின் ஒப்பற்ற தியாகத்தை தத்தம் அரசியல் கட்சிகளின் நலனுக்காகப் பயன்படுத்துவதென்பது முழுமையாகத் தவிர்க்கப்பட வேண்டும்.

அதேநேரம் தியாகி திலீபனின் நினைவேந்தல் என்பதை நம் தேசம் முழுவதும் அனுஷ்டிப்பதற்கு தூய கட்டமைப்பு இருப்பது அவசியம்.

அவ்வாறான கட்டமைப்பு இருக்கும்போதுதான், அங்கு அரசியல் தரப்புகளோ அன்றி அரசியல் குழுக்களோ மேலாட முடியாமல் போகும்.

அதேநேரம் தூய்மையான நினைவேந்தல் கட்டமைப்பு இருக்கும்போதுதான் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலைத் தமிழ்த் தேசிய நினைவேந்தலாக அனுஷ்டிக்க முடியும்.

ஆக, ஒப்பற்ற தியாகி திலீபனின் தியாகத்தை எவரும் தமது அரசியலுக்கான உரமாகப் பயன்படுத்திவிடலாகாது என்பதுடன் அவ்வாறான நிலைமைகள் ஏதேனும் இருக்குமாயின், அதனை முழுமையாகத் தவிர்த்து விடுவது அவருக்கு நாம் செய்கின்ற மரியாதையாக அமையும்.

எனவே மீண்டும் மீண்டும் நாம் வலியுறுத்துவது தியாகி திலீபனின் உன்னதமான தியாகத்தை அரசியலாக்கி விடாதீர்கள் என்பதுதான்.

# கச்சதீவை மீட்பது தான் சரியான தீர்வாக அமையும்

## தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

இலங்கையிடமிருந்து கச்சதீவை மீட்பது தான் சரியான தீர்வாக அமையும் எனத் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு, இராமநாதபுரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவது தான் இந்திய மீனவர்களின் மிகப் பெரிய பிரச்சினை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் கருத்துத் தெரிவித்த ஸ்டாலின், "இவ்விடயத்தைத் தொடர்ந்தும் கண்டித்து வருகிறோம்.

போராட்டங்களை நடத்துகிறோம். எனினும், ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க அரசு எமது மீனவர்களுக்காக எதுவும் செய்யவில்லை.

கச்சதீவை மீட்பது தான் சரியான தீர்வாக அமையும் எனத் தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானத்தை நிறைவேற்றி ஒன்றிய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம்.

அதனை அடிப்படையாக வைத்து ஒன்றிய அரசு இலங்கையிடம் கோரிக்கையை முன்வைக்க வேண்டும்.

இலங்கை சென்ற இந்தியப் பிரதமரும் இதனை வலியுறுத்த மறுத்துள்ளார்.

கச்சதீவை தர மாட்டோம் என இலங்கை வெளியுறவு அமைச்சர் கூறுகிறார். இதற்கு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் மறுத்துப் பேசியிருக்க வேண்டும். தமிழ்நாடு, தமிழர்கள் என்றால் மாத்திரம் ஏன் பா.ஜ.க அரசுக்கு கசக்கிறது?" எனக் கேள்வியெழுப்பியுள்ளார். (நி)

# சாரதி அனுமதிப் பத்திரங்களின் செல்லுபடி காலத்தை நீடிக்கத் திட்டம்

(கொழும்பு)

சாரதி அனுமதிப் பத்திரங்களின் செல்லுபடியாகும் காலத்தை எட்டு ஆண்டுகளில் இருந்து கணிசமாக அதிகரிக்க போக்குவரத்து அமைச்சு திட்டமிட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த விடயத்தை ஆய்வு செய்து பொருத்தமான திட்டத்தை முன்மொழிய ஒரு தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

நடுத்தர வயது மற்றும் 40 வயதுக்கு மேற்பட்ட சாரதி அனுமதிப் பத்திரங்களுக்கான புதிய விண்ணப்பதாரர்கள் மற்றும் சாரதி அனுமதிப் பத்திரங்களை புதுப்பிக்க வரும் விண்ணப்பதாரர்களுக்கு ஏற்ற காலத்திற்கு செல்லுபடியாகும் காலத்தை அதிகரிக்கவும் யோசனை முன் வைக்கப்பட்டுள்ளதாகப் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும், இது ஒரு முடிவு அல்ல, ஒரு திட்டம் மட்டுமே என்று போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டாலும், கனரக வாகன சாரதிகளுக்கு இது பொருந்தாது என்றும், கனரக வாகன சாரதிகள் ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கும் தங்கள் அனுமதிப் பத்திரங்களை புதுப்பிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், சாரதி அனுமதிப் பத்திரங்களை பெறுவதற்கு அவசியமான தேசிய போக்குவரத்து மருத்துவ உடற்தகுதி சான்றிதழ் அச்சிடுவதை நிறுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

உடற்தகுதிச் சான்றிதழை ஒன்லைன் டிஜிற்றல் அமைப்பு மூலம் மோட்டார் வாகனத் திணைக்களத்திற்கு அனுப்பும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

உடற்தகுதி சான்றிதழை அச்சிடுவதற்கு அரசாங்கம் ஆண்டுக்கு 50 மில்லியன் ரூபாய் செலவிடுவதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

## மின்கட்டண உயர்வு தொடர்பில் இரு வாரங்களுக்குள் தீர்மானம்

கடந்த செப்ரெம்பரில் இலங்கை மின்சார சபையால் மின்சாரக் கட்டணத்தை 6.8 சதவீதத்தால் அதிகரிக்க முன்வைக்கப்பட்ட முன்மொழிவு குறித்து பொதுப் பயன்பாட்டு ஆணையத்தின் முடிவு அடுத்த இரண்டு வாரங்களில் வழங்கப்படும் என்று பயன்பாட்டு ஆணையத்தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

அதன்படி, இந்த மாதம் 15 ஆம் திகதி அல்லது அதற்குள் முடிவு எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்சாரக் கட்டணத் திருத்தத்திற்கான பொது ஆலோசனை செயல்முறை தற்போது நடைபெற்று வருகிறது.

இந்த மாதம் 8 ஆம் திகதி மேல் மாகாண கலந்தாய்வின் இறுதி அமர்வு நடைபெற்ற பின்னர் கட்டணத் திருத்தம் குறித்த இறுதி முடிவு எடுக்கப்படும் என்று ஆணையத்தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

இந்தக் கட்டணத் திருத்தம் மின்சாரச் சட்டம் மற்றும் மின்சாரக் கட்டணச் சூத்திரத்தின்படி மேற்கொள்ளப்படும்.

இந்த ஆண்டு ஒக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான காலகட்டத்தில் மின்சார சபை ரூ.1769 மில்லியன் பற்றாக் குறையை மதிப்பிட்டுள்ளது.

மேலும் அதை ஈடுகட்ட 6.8 சதவீத கட்டண உயர்வு முன் மொழியப்பட்டது. (நி)

## மின்னேரியாவில் விபத்து; ஆறு பேர் படுகாயம்

மின்னேரியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற கோர விபத்தில் ஆறு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

குருநாகல் பகுதியிலிருந்து திம்புலாகல நோக்கிப் பயணித்த வான் ஒன்று கொழும்பு நோக்கி மண் ஏற்றிச் சென்ற லொறியுடன் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் படுகாயமடைந்தவர்கள் ஹிங்குரக்கொடை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக பொலநறுவை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

சம்பவம் குறித்து மின்னேரியாப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7)

## பலத்த மின்னல் தாக்கம் குறித்து எச்சரிக்கை

வடக்கு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் மின்னல் தாக்கம் ஏற்பட அதிக வாய்ப்புள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதன் பிரகாரம் வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா மாகாணங்களிலும், குருநாகல் மற்றும் மாத்தளை மாவட்டங்களிலும் இடியுடன் கூடிய மழை மற்றும் பலத்த மின்னல் தாக்கங்கள் ஏற்படக் கூடும்.

அத்துடன் இடியுடன் கூடிய மழை பெய்யும் போது, அந்தப் பகுதிகளில் தற்காலிகமாக பலத்த காற்று வீசக் கூடும் என அவ்வறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு வாகனத்தை ஒப்படைத்தார் மகிந்த

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது பாதுகாப்பு வாகனத்தை மீண்டும் அரசாங்கத்திடம் ஒப்படைத்துள்ளதாக மகிந்த ராஜபக்ஷவின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு வாகனத்தை ஒப்படைக்கும் நடவடிக்கை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றதாக மகிந்த ராஜபக்ஷவின் ஊடக பேச்சாளர் சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்துள்ளார்.


இந்த பாதுகாப்பு வாகனமானது துப்பாக்கிச் சூடு மற்றும் ஏனைய ஆபத்துக்களில் இருந்து பாதுகாப்பாக இருப்பதற்கு பயன்படுத்தப்பட்டது.

பாதுகாப்பு வாகனத்தை அரசாங்கத்திடம் ஒப்படைத்ததால் மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக மனோஜ் கமகே தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை இரத்து செய்வதற்காக அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலம் செப்டெம்பர் 10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதையடுத்து, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தான் தங்கியுள்ள கொழும்பு விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள அரச வாசஸ்தலத்திலிருந்து செப்ரெம்பர் 11 ஆம் திகதி வெளியேறி, அம்பாந்தோட்டை - தங்காலையில் உள்ள கால்டன் இல்லத்திற்கு குடிபெயர்ந்தமை சுட்டிக்காட்டத்தக்கது. (நி)

# மரண அறிவித்தல்

## அமரர். கெங்காதரம் கிருபானந்தன்



மலர்வு 22 . 10 . 1947

உதிர்வு 04 . 10 . 2025

இருபாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கெங்காதரன் கிருபானந்தன் அவர்கள் 04.10.2025 நேற்று சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கெங்காதரம்-வேதரத்தினம் தம்பதிகளின் மூத்த மகனும் காலஞ்சென்ற தியாகராஜா-மகேஸ்வரி தம்பதிகளின் மருமகனும், சுபத்திராதேவியின் அன்புக் கணவரும், துஸ்யந்தி (Physiotheropist-சாவகச்சேரி வைத்தியசாலை), ரவிச்சந்திரன் (Engineer- Green tech (NSWDB)), கோபாலரட்ணா (QS, Rana Construction) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தயான் (RDA-TO-Pointpedro), Dr.சிவரஞ்சினி (Teaching hospital Jaffna), சாம்பவி (Commercial Bank Jaffna) ஆகியோரின் அன்பு மாமனாரும், சாஷ்வதி, ஷஷ்டிக்குமரன், அபிஷேக், அபிநாஷ், அபிஷ்னா, சிவஏரகன் ஆகியோரின் அன்புப் பேரனும் பரமேஸ்வரன் (Uk), கனகராஜா (Uk), தயாநிதி, Lion காண்டீபன் JP (Swasthi Enterprises), உமாசுதன் (Uk), ராமநிதி (Uk), வேதகெங்கா, நந்தினி (France) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் **நாளை 06.10.2025 திங்கட்கிழமை காலை 10 மணியளவில்** அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இருபாலை நெச்சிகாடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இங்ஙனம்: குடும்பத்தினர்
துஸ்யந்தி - 077 181 1223
ரவிச்சந்திரன் (குமரன்) 076 450 9569
கோபாலரட்ணா (கண்ணன்) 077 514 3819

டச்சு வீதி கோப்பாய்,
தெற்கு கோப்பாய்,
யாழ்ப்பாணம். (5588)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 160 | 350 | 280 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 210 | 200 | 190 | 240 |
| பச்சைமிளகாய் | 300 | 200 | 200 | 220 | 300 |
| தக்காளி | 250 | 240 | 250 | 180 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 250 | 300 | 200 | 200 |
| கோவா | 180 | 280 | 200 | 160 | 200 |
| கரட் | 250 | 300 | 300 | 200 | 250 |
| பூசணி | 50 | 80 | 100 | 50 | 50 |
| புடோல் | 100 | 150 | 150 | 150 | 300 |
| வாழைக்காய் | 100 | 120 | 100 | 100 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 150-300 | 300 | 220 | 300 |
| பெரிய வெங்காயம் | 180 | 160 | 150 | 150 | 160 |
| பாகற்காய் | 400 | 500 | 400 | 400 | 500 |
| வெண்டக்காய் | 150 | 250 | 100 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 250 | 250 | 280 | 400 |
| பயற்றங்காய் | 200 | 200 | 150 | 250 | 200 |
| லீக்ஸ் | 200 | 250 | 250 | 170 | 250 |
| பீற்றூட் | 150 | 120 | 150 | 100 | 150 |
| கறிமிளகாய் | 400 | 400 | 300 | 350 | 320 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 300 | 200 | 200 |
| போஞ்சி | 450 | 500 | 600 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 200 | 100 | 300 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 140 | 80-140 | 150 | 100 | 100 |
| தேசிக்காய் | 1500 | 1300 | 1000 | 1500 | 2400 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 200 | 150 | 110-200 | 160-220 |
| இராசவள்ளி | 850 | 1000 | 1000 | 800 | 1000 |
| வெங்காயப்பூ | 450 | 350 | 400 | 150 | 400 |
| முள்ளங்கி | 120 | 160 | 150 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 50 | 80 | 80 | 100 |
| ஈரப்பலா | 150 | 100 | 100 | 100 | 250 |

## இலங்கையின் வெளிநாட்டுக் கடன் 37 பில்லியன் டொலர்கள்

(கொழும்பு)

இலங்கையின் மொத்த வெளிநாட்டுக் கடன்தொகையானது 37 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என தெரிய வந்துள்ளது.

அரசாங்க நிதி பற்றிய குழு அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தலைமையில் கூடியபோது இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டது.

இலங்கை பெற்ற கடன்கள் குறித்து குழு விசாரித்த போது, கூட்டத்திற்கு அழைக்கப்பட்ட பொதுக் கடன் மேலாண்மை அலுவலக அதிகாரிகள், 37 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வெளிநாட்டுக் கடன்கள் பெறப்பட்டுள்ளதாக தெரிவித்தார். (நி)

# இராசிபலன்

05.10.2025
புரட்டாதி 19, ஞாயிற்றுக்கிழமை
திரயோதசி பிற்பகல் 1.22 மணிவரை

சதயம் முற்பகல் 7.00 மணிவரை
சுப நேரம் 9.02-10.32 மணிவரை
இராகுகாலம் 4.32-6.02 மணிவரை

நடேசர் அபிசேகம்,
சர்வதேச ஆசிரியர் தினம்
சந்திராஷ்டமம்: மகம்

வளவன்

**மேஷம்**
எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**கடகம்**
உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும்.

**துலாம்**
எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், தேக நலனில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**மகரம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், முன் கோபமும் அலைச்சலும் ஏற்படலாம், நண்பனின் வழியில் சுப செய்திகள் வந்து சேரும்.

**ரிஷபம்**
இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள்.

**சிம்மம்**
சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும், கனவு பலிதமுண்டு, ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு, தொலைபேசியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்**
பயணங்களால் பலனுண்டு, வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கும்பம்**
புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை, மறக்க முடியாத இனிய சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்**
எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது, பகையொன்று நட்பாகலாம், பூர்வச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் இருந்த குழப்பங்கள் தீரும், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள்.

**கன்னி**
எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே கிடைக்கும், குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும், உடல் நலன் சீராகும், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும்.

**தனுசு**
மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், பாகப்பிரிவினைகள் சுமூகமாக அமையும், குடும்பத்தில் குதூகலம் தரும், சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மீனம்**
தொலை பேசியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

இரும்பு இதயத்திற்கான திறவுகோல் அன்பு மட்டுமே

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வல்லிபுர..

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய இரதோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை (05) காலை 9.00 மணியளவில் இடம்பெறவுள்ளது.

நாளை திங்கட்கிழமை (06) பிற்பகல் 5.00 மணியளவில் தீர்த்தத் திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை (07) காலை கேணித் தீர்த்தமும் மாலை 6.00 மணியளவில் கொடி பிறக்கமும் இடம்பெறவுள்ளது. (ம-7,60)

## மழை...

காற்றுடன் கூடிய மழை காரணமாக யாழ்ப்பாணத்தில் மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 14 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வேலணைப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/28 கிராமசேவகர் பிரிவில் காற்றுடன் கூடிய மழை காரணமாக இரண்டு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதேபோல் சங்கானைப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/169 கிராமசேவகர் பிரிவில் வீடொன்று பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் நால்வர் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-7,104)

## யுத்தத்தால்...

தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் 40 வீதமான வீடுகள் கொட்டில்களாகவிருந்து, தற்போது படிப்படியாக மாறி வந்தாலும் அது முழுமை பெறவில்லை. அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்திற்கு அமைய, விசேடமாக வீடு இல்லாத வர்களுக்கு வீடு வழங்கும் செயற்றிட்டம் உள்ளதால், மேலும் பல வீடமைப்புத் திட்டங்கள் வழங்கப்படும்.

எமது அரசாங்கத்தினால் வீடமைப்புத் திட்ட நிதி அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும் வீதி, குளங்கள், இறங்குதுறை என்பனவும் அபிவிருத்தி செய்யப்படும். எமது அரசாங்கத்தினால் துரித அபிவிருத்தி செய்வதே நோக்கமாகும்.

குறிகாட்டுவான் இறங்குதுறை மற்றும் கொழும்புத்துறை இறங்குதுறை அபிவிருத்தி, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையினை மீளச் செயற்படுத்தல் மற்றும் முதலீட்டு வலயம் போன்ற அபிவிருத்தித் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் போதைப்பொருள் மற்றும் வாள்வெட்டு ஆகியவற்றை முற்றாக ஒழிக்க அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. பொருளாதார ரீதியாக எமது நாடு தற்போது முன்னேறி வருகிறது. டொலரின் பெறுமதி சீராகவுள்ளது என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## ராஜபக்ஷக்கள்...

ஊடகங்களிடம் நேற்றுக் கருத்து வெளியிடும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கொழும்பில் இருந்து தங்காலைக்குக் குடியமரச் சென்றுள்ள மகிந்த ராஜபக்ஷவும் அவரின் குடும்பத்தினரும் அங்கிருந்து கொண்டு அரசியல் இலாபம் தேடும் வகையில் ஒப்பாரி வைக்கின்றனர். அவர்களின் ஒப்பாரியால் நீதிமன்ற நடவடிக்கைகளை நிறுத்த முடியாது.

ஒப்பாரி வைத்து தப்பிப்பிழைக்கலாம் என்று அவர்கள் எண்ணுகின்றனர்.

மனித உரிமை மீறல்கள் மற்றும் ஊழல், மோசடிகள் என ராஜபக்ஷக்கள் இழைத்த குற்றங்களுக்குத் தண்டனை கிடைத்தே தீரும். மீண்டும் மொட்டுக் கட்சியின் ஆட்சி மலரும் என்று "குட்டி ராஜபக்ஷ" நாமல் கனவு காண்கின்றார். அவர் இழைத்த குற்றங்களை அவர் மறந்தாலும் மக்கள் மறக்கவில்லை என்றார். (ம-7)

## அஸ்வெசும..

நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இந்த விடயத்தைக் கூறியுள்ளார்.

அத்துடன், அஸ்வெசும திட்டம் மக்களின் வறுமையைக் குறைப்பதற்குத் தவறிவிட்டதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒரு சமூகப் பாதுகாப்புத் திட்டமானது வறுமை ஒழிப்பு, முதலீடு, சேமிப்பு, உற்பத்தி மற்றும் ஏற்றுமதியை உறுதி செய்ய வேண்டும் எனவும் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (ம-7)

## நெடுந்தீவில்...

குறிகாட்டுவானில் இடம்பெற்றது.

அமைச்சர்களான பிமல் ரத்நாயக்க, இ.சந்திரசேகர், நெடுந்தீவுப் பிரதேச செயலர் பங்குபற்றுதலுடன் குறித்த நிகழ்வு இடம்பெற்றது. (ம-7)

## அநுர...

தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் வீதிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் பொது மக்களின் வரிப் பணத்தைப் பயன்படுத்தி செயற்படுத்தப்படும் "மறுமலர்ச்சிக்கான பாதை" திட்டத்தின் கீழ் "குறிகாட்டுவான் இறங்கு துறைக்கான மறுசீரமைப்பு வீதிக் கட்டுமானத்தின்" ஆரம்ப நிகழ்வும் மற்றும் நெடுந்தீவுப் பிரதேச செயலர் பிரிவில் முதல் தடவையாக எரிபொருள் நிரப்பு நிலையம் அமைப்பதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு என்பன குறிகாட்டுவானில் நேற்று சனிக்கிழமை காலை நடைபெற்றது.

அங்கு உரையாற்றிய ஆளுநர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தவிசாளருடன் கதைக்கும்போது அடிக்கடி ஓர் விடயத்தைக் கூறுவார். அமைச்சர் பிமல் ரத்நாயக்க இந்தத்துறையின் அமைச்சராக இருக்கும்போது வடக்குக்கு தேவையான நிதியைப் பெற்றுக் கொள்ளலாம். அமைச்சர் பிமல் ரத்நாயக்க எந்தத் திட்டம் வரும் போதும் அதில் வடக்கு மாகாணத்தையே முதன்மைப் படுத்துவார் என்று அவர் கூறுவார். அது உண்மை.

நான் யாழ். மாவட்டச் செயல ராக இருந்தபோது குறிகாட்டுவான் வீதிப் புனரமைப்பு மற்றும் இறங்குதுறை புனரமைப்புக்கு கடுமையாக முயற்சித்தேன். ஆனால் அது கைகூடவில்லை. இப்போதுதான் சாத்தியமாகியிருக்கின்றது. இது மிகச் சிறப்பான தருணம். இந்த அரசாங்கம் சொல்லில் அல்ல செயலில் நிரூபித்து வருகின்றது. வடக்கு மாகாணத்தில் நிறைய மாற்றங்கள் நிகழ்கின்றன.

பல அமைச்சர்கள் வடக்கு மாகாணம் தொடர்பான விடயங்களை சாதகமாகவே அணுகுகின்றார்கள். அது எமது வடக்கு மக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதம். இவற்றுக்கு மேலாக, நெடுந்தீவுப் பிரதேசத்துக்கே உதவி அரசாங்க அதிபராக முதலில் நியமிக்கப்பட்டேன். அந்தப் பிரதேச மக்களின் வலிகள் தெரியும். அந்தப் பிரதேசத்தில் எரிபொருள் நிரப்பு நிலையம் அமைப்பது சிறப்பானது. இவ்வாறான அபிவிருத்திப் பணிகள் தொடர்ந்தும் இந்த அரசாங்கத்தின் காலத்தில் முன்னெடுக்கப்படும் என்றார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2025.10.04
சீட்டிழுப்பு இலக்கம் 5972
Z 8 9 3 5 7 2
அத சம்பத Z 3 5 7 2
சீட்டிழுப்பு இலக்கம் 547
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.10.04
சீட்டிழுப்பு இலக்கம் 0888
மேடம் 12 26 31 40

தன நிதானய
திகதி - 2025.10.04
சீட்டிழுப்பு இலக்கம் - 2002
R 20 55 74 80 R
Double Chance

மெகா பவர்
திகதி 04/10/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2320
E 17 06 22 50 52

ஜய JAYA
திகதி 2025.10.04
சீட்டிழுப்பு இலக்கம் 0240
L 6 5 8 3

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4214
சீட்டிழுப்பு திகதி 04.10.2025
A 08 17 19 30
A

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.10.04
சீட்டிழுப்பு இலக்கம் 1281
கும்பம் 11 44 58 59 கும்பம்
தேசிய லொத்தர் சபை

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி வாசனா சம்பத
04.10.2025 வெற்றி வாரம் 0680
N 5 8 6 8 5 4
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,692,714.80
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2946
சீட்டிழுப்பு திகதி 2025.10.04 தினம் சனிக்கிழமை
01 25 52 59 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,771,077.60
DLB

சனிதா
திகதி 04.10.2025 வெற்றி வாரம் 5107
03 15 59 77 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,696,668.00
DLB

சசிறி
0784
04.10.2025 சனிக்கிழமை
16 25 26
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4658
சீட்டிழுப்பு திகதி 04.10.2025 தினம் சனிக்கிழமை
35 46 50 51 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
F 29 07 24 47 73
2122
04.10.2025 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.598,089,427.60
DLB

அட கோட்டிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2772
சீட்டிழுப்பு திகதி : 2025.10.04
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.57,687,086.40
07 35 40 52 I
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருமதி அழகிப் போட்டி

# பட்டத்தை சுவீகரித்த இலங்கை அழகி சபீனா



உலகளவில் திருமணமான பெண்களுக்கான பழமையான மற்றும் மிகப்பெரிய சர்வதேச அழகுப் போட்டியாக அங்கீகரிக்கப்பட்ட திருமதி உலக அழகிப் போட்டி நேற்று முன்தினம் பிரமாண்டமாக நடைபெற்றது.

இந் நிலையில் அதன் இறுதிப் போட்டியில் சபீனா யூசுப் "திருமதி இலங்கை உலக அழகி 2025" என முடி சூட்டப்பட்டார்.

இந்தப் போட்டி அதன் வெற்றியாளர்களுக்கு சர்வதேச மேடைகளில் தங்கள் நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்த ஒரு உலகளாவிய தளத்தை வழங்குகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி)

# புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்கள் தடையின்றி தொடர்ந்து முன்னெடுக்கப்படும்

## அமைச்சர் குமார ஜெயக்கொடி

(கொழும்பு)

அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்கள் தொடர்ந்து செயற்படுத்தப்படும் என்று எரிசக்தி அமைச்சர் பொறியியலாளர் குமார ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

காலியின் ஹியார பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 5 மெகாவாட் சூரிய மின்சக்தி திட்டத்தை நேற்று (4) திறந்து வைக்கும் நிகழ்வில் பங்கேற்ற போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி ஒரு தேசியத் தேவை என்றும், தேசியத் திட்டத்தின் ஒரு பகுதியாகும் என்றும், அனைவரும் அதன் பெறுமதியை புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கை மின்சார சபையின் மறுசீரமைப்பு திட்டமும் இதேபோன்றதுதான். நாங்கள் அந்தத் திட்டத்தை நல்லெண்ணத்துடனும் வெளிப்படையாகவும் தொடங்கினோம், அதே நேரத்தில் ஊழியர் உரிமைகள் மற்றும் சலுகைகளைப் பாதுகாத்தோம். மேலும் இயன்றளவில் தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினோம்.

நாட்டின் எரிசக்தித் துறையின் இலக்குகளை அடைய வேண்டுமானால், அந்த மறுசீரமைப்புத் திட்டத்தை செயற்படுத்துவது அவசியம். எனவே அந்தத் திட்டத்தை நாங்கள் தொடர்ந்து செயற்படுத்துவோம் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (ம-7)

## கொழும்புத் துறைமுகத்தில் அமெரிக்கக் கப்பல்



(கொழும்பு)

அமெரிக்கக் கடற்படைக்குச் சொந்தமான "USS FITZ GERALD" என்ற கப்பல் விநியோக மற்றும் சேவை தேவைகளைப் பூர்த்தி செய்ய கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது.

அமெரிக்கக் கடற்படைக் கப்பலான "USS FITZGERALD" (DDG 62) நேற்று முன்தினம் காலை கொழும்புத்துறைமுகத்திற்கு விநியோக மற்றும் சேவை தேவை களைப் பூர்த்தி செய்ய வந்தடைந்தது. இந்தக் கப்பலை இலங்கைக் கடற்படையினர் கடற்படை மரபுகளின்படி வரவேற்றனர்.

கப்பல் 154 மீற்றர் நீளம் கொண்டதுடன் இந்தக் கப்பலின் கட்டளை அதிகாரியாக கமாண்டர் Paul Richard son கடமையாற்றுகின்றார். (ம-7)

# புதிய கல்விச் சீர்திருத்தம் தொடர்பான விழிப்புணர்வு

(மாத்தளை)

புதிய கல்விச் சீர்திருத்தம் தொடர்பான விழப்புணர்வு நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி மாத்தளை மாவட்டத்தில் உள்ள அதிபர்களை விழிப்புணர்வூட்டுவதற்கான நிகழ்வு நேற்று (04) கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர் கலாநிதி ஹரிணி அமரசூரியவின் தலைமையில் இடம் பெற்றது.

மாத்தளை மாவட்ட செயலாளர், தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம், மாகாண கல்வி பணிப்பாளர்கள், பல்வேறு கல்வி அதிகாரிகள் மற்றும் மாத்தளை மாவட்டத்தின் சுமார் 350 அதிபர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

தேசிய கல்வி நிறுவகத்தின் வழிகாட்டுதலின் கீழ் நடத்தப்படும் இந்த நிகழ்ச்சியின் நோக்கம், கல்விச் சீர்திருத்தங்களின் நோக்கங்கள் மற்றும் நடவடிக்கைகள் குறித்து அதிபர்களிடையே விரிவான புரிதலை உருவாக்குவதாகும்.

அதன்படி, இந்தத் திட்டம் எதிர்காலத்தில் நாட்டின் பிற மாவட்டங்களிலும் செயற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. (ம-7)




### மண்டைதீவில்

## கடையிற்சுவாமிகளின் 134 ஆவது குருபூஜை

(மண்டைதீவு)

ஈழத்துச் சித்தர் பரம்பரையின் தலைமைக் குருவாகிய ஸ்ரீமத் கடையிற் சுவாமிகளின் 134 ஆவது குருபூஜை இன்று ஞாயிற்றுக் கிழமை மண்டைதீவில் கடையிற் சுவாமிகள் வாழ்ந்த ஆச்சிரமத்தில் நடைபெறும்.

இன்று நண்பகல் 12 மணிக்கு பூஜை வழிபாடுகள் இடம்பெற்று தொடர்ந்து மகேஸ்வர பூஜையும் இடம்பெறும். (ம-7)

### பீடி இலைகளுடன்

## மாங்குளத்தில் நால்வர் கைது

செட்டிகுளம், மாங்குளம் பகுதியில் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட பீடி இலைகளுடன் நான்கு பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 25 கிலோகிராம் பீடி இலைகள் கொண்ட 40 பொதிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்கள் 21,28, 40,43 வயதுடைய மன்னார் பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகள் செட்டிகுளம் பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (ம-7)

# வெளிநாட்டுக்கடன் 37 பில்லியன் டொலர்கள்

(கொழும்பு)

இலங்கையின் மொத்த வெளிநாட்டுக் கடன் தொகையானது 37 பில்லியன் அமெரிக்க டொலர்கள் எனத் தெரியவந்துள்ளது.

அரசாங்க நிதி பற்றிய குழு (COPF) அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தலைமையில் கூடியபோது இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டது.

இலங்கை பெற்ற கடன்கள் குறித்து குழு விசாரித்தபோது, கூட்டத்திற்கு அழைக்கப்பட்ட பொதுக் கடன் மேலாண்மை அலுவலக அதிகாரிகள், 37 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அதாவது 19.6 டிரில்லியன் ரூபாய் வெளிநாட்டுக் கடன்கள் பெறப்பட்டுள்ளதாகக் கூறினர்.

அனைத்துக் கடன் வாங்கும் செயன்முறைகளும் தற்போது அரச கடன் மேலாண்மை அலுவலகத்தால் மட்டுமே நிர்வகிக்கப்படுகின்றன.

நாட்டின் கடன் மேலாண்மை நடவடிக்கைகளை வலுப்படுத்த திறமையான அதிகாரிகளை நியமிப்பதன் முக்கியத்துவத்தையும் கோப் குழுத்தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா இதன்போது எடுத்துரைத்தார். (ம-7)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தினால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org